

கல்கி
விஜயா
KALKI
8.7.1962
30 கா



உன்னுடைய அழகு வாரிவிட்ட கூந்தலிலே ஸ்வஸ்திக் பெர்ப்யூம்டு காஸ்டர் ஆயில்

உங்கள் கூந்தலைப் பொலிவுடன் இருக்கச் செய்கிறது.



ஸ்வஸ்திக் முடியலங்காரம் "ஸந்தியா"

1. மேல் முடியின் ஒரு சிறிய பாகத்தை வளையமாகச் சுற்றி பின் செய்யவும்.
2. மீதியுள்ள கூந்தலை நன்றாக வாரி, இடதுபக்கத்தில் சுற்றவும். நுனிப்பாகத்தை மேல் வாரி, முதலில் சுற்றிய கூந்தலின் கீழே மடித்து பின் செய்யவும்.



ஸ்வஸ்திக்

ஆயில் மில்ஸ் லிமிடெட் பம்பாய்

கல்கி

சுபகிருது, ஆனி மீ 24வ.

ஜூலை, 8, 1962

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 21 | இதழ் 49

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

முன்னுக்குப் பின் முரண்

சிறிது காலமாகப் பாரத நாட்டு அரசாங்கம் நாட்டின் ஐக்கியத்தில் மிகுந்த கவலை கொள்ளத் தொடங்கியிருக்கிறது. அதனை ஒட்டி இருமுறை "ஒருமைப்பாடு மகாநாடு" கூட்டியது. இன்றைய நிலையில் பாரத நாட்டை ஐக்கியப்படுத்தக்கூடிய சக்தி ஏதேனும் ஒன்றுக்கு இருக்குமானால் அந்த ஒன்று ஆங்கிலம்தான் என்பதை அம்மகாநாட்டினர் நாட்டினருக்குச் சுற்றி வளைத்துக் கூறினர்.

அதேபோல் மத்திய சர்க்காரின் உள்துறை மந்திரி லால்பகதூர் சாஸ்திரி அவர்களும், ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக நீடிக்க விட்டால்தான் தேசத்தின் ஒருமைப்பாடு காப்பாற்றப்படும் என்பதை உணர்ந்து, 1965-க்குப் பிறகும் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்துவர வியக்தமாகச் சட்டம் செய்யப்படும் என்று அறிவித்தார்.

இவை யெல்லாம் நாட்டு மக்களுக்குத் திருப்தியூட்டியது. மொழிவழி மாகாணப் பிரிவினை மூலம் பரவவிட்ட விஷத்தைக் குறைக்க இப்பொழுதாகிலும் மத்திய சர்க்கார் நல்லபடியாகச் சிந்தித்து, நடந்து கொள்கிறார்களே என்ற மகிழ்ச்சி எங்கும் நிலவியது.

இந்தச் சமயத்தில்தான் வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்த கதையாக, மத்திய சர்க்காரின் கல்வி மந்திரி ஸ்ரீமாலி அவர்கள் மக்கள் சபையில் சற்றும் முன்யோசனையின்றிப் பேசியிருக்கிறார். மெத்த வருந்துகிறோம். "1965-க்குள் சர்வ கலாசாலைகளில் எல்லாம் போதனமொழி ஹிந்தியாகவோ தாய்மொழியாகவோ மாறி விடும்" என்பதுதான் அவரது பேச்சின் சாராம்சம்.

ஒரு மந்திரி இப்படிப் பேசுகிறார் என்றால் அதைச் சர்க்காரின் உத்தரவாகவே கொள்ள வேண்டும். ஆகவே இதுவரையில் ஆங்கிலத்தையே போதன மொழியாகக் கொண்டுள்ள சர்வகலாசாலைகள் சீக்கிரமே ஆங்கிலத்தைக் கை விட்டு, பிரதேச மொழியையோ, ஹிந்தியையோ போதன மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் என்று சர்க்கார் உத்தரவிடுவதாகத்தானே பொருளாகிறது?

பதினைந்து ஆண்டுகளாக ஹிந்தியில் போதித்து வரும் சில சர்வகலாசாலைகளும், இதர பிராந்திய மொழிகளில் உயர்தரப் பாடங்களை நடத்தும் சர்வகலாசாலைகளும இப்பொழுது ஆங்கிலத்துக்கே திரும்பிவிட முயன்று வருகின்றன. தமிழ் நாட்டிலும் கோவையில் தமிழ் மூலம் கல்லூரிப் பாடங்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழ் மூலம் கல்லூரிப் படிப்பைக் கற்க வருபவர்களுக்கு 'உதவிச் சம்பளம்' கொடுக்கப்படும என்று அறிவிக்கப்பட்டது. எனினும் தமிழ் மூலம் கற்க வரும் மாணவர்களின் எண்ணிக்கை சென்ற வருஷத்தை விட இவ்வருஷம் குறைந்துவிட்டது என்கிறார் நமது கல்வி மந்திரி. இப்போது வேண்டுமானால் உபகாரச் சம்பளம் கொடுத்து விடலாம். ஆனால் பிறகு சம்பளம் கொடுத்து உத்தியோகத்தில் வைத்துக் கொள்வது யார்? தமிழிலேயே படிப்பவர்களுக்கு மற்ற ராஜ்யங்களில் வேலை வாய்ப்பு மிகவும் குறைந்து விடுமல்லவா? இதனால் மாணவ சமூகத்திலேயே பிரதேச மொழியைப் போதன மொழியாக ஏற்க உற்சாகமில்லை.

போதன மொழி சம்பந்தமாக ஆராய மகாராஷ்டிர சர்க்கார் நியமித்த டோங்கர் கரே கமிட்டி, ஆங்கிலத்தைப் போதன மொழியாக இல்லாமல் செய்வது மிக விபரீதமான பலன்களை விளைவிக்கும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறது. அது மட்டுமன்றி ஆங்கிலத்தை நீக்குவதற்கு ஒரு கால வரையறை ஏற்படுத்தவே கூடாது என்றும், என்றைக்காவது

ஒரு நாள் மராத்தியோ, ஹிந்தியோ போதனா மொழியானாலும் ஆங்கிலமும் தொடர்ந்து போதனா மொழியாகச் சர்வகலாசாலைகளில் இருந்து வர வேண்டும் என்றும் கூறியிருக்கிறது.

ஆக தேசிய ஐக்கியத்துக்கும் மாணவர்களின் கல்வியறிவு விருத்தியாவதற்கும் ஆங்கிலம் அவசியம் என்றும், கல்லூரியில் போதனா மொழி ஆங்கிலமாக இருந்தால்தான் இந்த லட்சியங்கள் கைகூடும் என்றும் நிதர்சனமாகத் தெரிந்து விட்டது.

சென்ற தேர்தலுக்குப்பிறகு சென்னை சர்க்காருக்குச் சற்று கண் திறந்தது. நான்காவது வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கவும், விருப்பமுள்ளவர்கள் ஆறாவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் மூலம் மற்றப் பாடங்களைப் படிக்கவும் அரசினர் ஏற்பாடு செய்துவருகிறார்கள். கல்லூரிகளிலும் ஆங்கிலத்தைப் போதனா மொழி ஸ்தானத்திலிருந்து அகற்றும் திட்டத்தில் சற்று வீர்யம் குறைந்து பிரத்யட்ச நிலைமையை உணர்ந்து நடந்து வருகிறார்கள்!

அவர்களின் நல்ல போக்கைக் கெடுக்கும் வகையிலும், பிரிவினை எண்ணங்களுக்கு ஆக்கம் தரும்வகையிலும் மத்திய சர்க்கார் கல்வி மந்திரி பேசியிருக்கிறார்.

இப்படியாக, மத்திய சர்க்காரில் ஒரு புறம் நாட்டு ஐக்கியத்துக்குப் பாடுபடுவதாகப் பல காரியங்கள் நடைபெற்று வரும்போது, மற்றொருபுறம் அந்த முயற்சிகளுக்கு எதிரிடையான வகையில் காரியங்கள் நடப்பது மந்திரிசபை எந்த லட்சணத்தில் இயங்குகிறது என்பதைக் காட்டுகிறது!

மோகம் வேண்டாம்!

சுதந்திர இந்தியாவில் சில புது மூர்த்திகளுக்கு வழிபாடு நடைபெற்று வருகிறது. ஹிந்தி மொழி வழிபாடு இவற்றில் ஒன்று. இந்தப் பூஜையில் சேராமல் ஆங்கிலத்தை ஆதரித்தால், அது 'தேசத் துரோகம்' அதாவது 'நாத்திகம்' என்ற மூடநம்பிக்கையும் உருவாகியிருக்கிறது.


இதே போன்று இன்னொரு லிங்கம் நமது காஷ்மீர் கொள்கை. நேரு அவர்களின் ஆட்சி அதிகாரத்துக்கு அது ஓர் இன்றியமையாத பூஜைக்கிரமம். அயல் நாடுகளின் நல்லெண்ணத்துக்கும்அதுவே சூசனையாக அமைந்து விட்டது. உள்நாட்டில் யாரேனும் காஷ்மீரைப் பற்றிய கொள்கையை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறினால் அவர்கள் நேருஜியின் விரோதியாகி விடுவார்கள். வெளி நாடுகளில் ஏதேனும் ஒன்று இதே கருத்தைத் தெரிவித்தால் அது இந்தியாவிடம் நல்லெண்ணம் கொண்டிராத நாடு என்று கருதப்பட்டு விடுகிறது. இந்த நவீன மூர்த்தி பூஜையைத் தகர்க்க வேண்டியது அவசியமாகும்.

நமது பிரதமரவர்களுக்கு ஏனோ காஷ்மீரத்திடம் ஒரு மோகம். அதனால் தான் நாம் இந்தப் பிரச்னையில் சிறிது கூட வளைந்து கொடுக்காமல் ஒரே பிடிவாதமாக இருக்கிறோம். 'பாகிஸ்தான் முதலில் தான் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து வெளியேறட்டும்; அப்புறம் தான் இது விஷயமாக எந்த நடவடிக்கையும் யோசிப்போம்' என்ற பல்லவியையே படிக்கிறோம்.

வேறு எந்த விஷயத்தைக் காட்டிலும் பாகிஸ்தானுடன் எவ்வகையிலேனும் நட்புரிமை பூணத்தான் நாம் முயல வேண்டும். இதுவே இன்று முக்கியமான பிரச்னையாகும். இது விஷயமாக விருப்பு வெறுப்புக்களைத்தவிர்த்துத் தீர்க்கமாக மீண்டும் சிந்தித்து நடைமுறைக்கும், நட்பு முறைக்கும் பயன் தரும் கொள்கையை உருவாக்குவதில் நேரு சர்க்கார் உடனடியாக மனம் செலுத்த வேண்டும்.

சமீபத்தில், ''இந்தியாவும் பாகிஸ்தானும் நேரடிப் பேச்சு வார்த்தைகள் நடத்திக் காஷ்மீர் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும்'' என்று ஐ. நா. பாதுகாப்பு சபையில் அயர்லாந்து ஒரு தீர்மானம் கொண்டு வந்தது. இதில் அநியாயமாகவோ அக்கிரமமாகவோ ஏதும் இல்லை. இந்தத் தீர்மானத்தை ஆதரித்தன அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகள். பனிப் போரை வளர்ப்பதிலேயே வல்லரசுகள் குறியாக இருக்கின்றன அல்லவா? எனவே இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ருஷ்யா தன் 'வீட்டோ' அதிகாரத்தைப் பிரயோகித்துத் தீர்மானத்தை முறியடித்து விட்டது. இது நம்மிடம் விசேஷ அன்பினால் செய்தது என நாம் எண்ண வேண்டியதில்லை. இதனால் நமக்கு ஒரு சிறிதும் பயனுமில்லை. ஆனால் இதை உணராமல், தீர்மானத்தை ஆதரித்த அமெரிக்காவும், பிரிட்டனும் எப்போதுமே நமது முக்கியமான கொள்கைகளில் நம்மைக் கைவிடுகின்றன என நேருஜி கடுமையாகத் தாக்கியிருக்கிறார்.

மேல்நாடுகளின் ஆயுதப் போட்டிக்குப் போட்டி



'கோடி கோடியாக உங்களுக்குக் கொட்டிக் கொடுக்கும் நாங்களா உங்களைக் கைவிடுபவர்கள்? உங்களுக்கு உதவி அளிப்பதால் உங்கள் கொள்கைகள் யாவற்றையுமே ஆதரிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோமா, என்ன?' என்று அமெரிக்கப் பத்திரிகைகள் நம்மை இடித்துரைக்கவும் இடமளித்திருக்கிறோர்.

பொலி எருதைப் போலத் தானும் உப்ப முயன்று வெடித்துப்போன தவளையைப் பற்றி ஈசாப் கதையில் படித்திருக்கிறோம். அதை நினைவுறுத்தும் வகையில், மேல்நாட்டு வல்லரசுகளைப் போலவே இந்தியாவும் பாகிஸ்தானும் போட்டி போட்டுக் கொண்டு ஆயுதங்களையும் படைகளையும் பெருக்கிக் கொண்டு, போர் விமான பேரத்தில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த முயற்சியில் அகலக் கால் வைத்தால் நாம் அழிந்து போவது திண்ணம். இந்த நிலைமையில் கூனுக்கு வைத்தியம் சொன்ன தவளையைப்போல் அயல்நாடுகளுக்குப் படை பலக்குறைப்பைப் பற்றி உபதேசிக்கிறோம். நம்முடைய நாட்டுப் பிரதேச உரிமைக்கும் கௌரவத்துக்கும் நஷ்டமில்லாமல் அன்பு வழியில் பாகிஸ்தானுடன் நாம் இணைய வேண்டும் என்பதை என்றுதான் உணர்வோமோ? அப்போதுதான் நாம் பிறநாடுகளுக்குச் சாந்தி உபதேசம் செய்யும் தகுதியைப் பெறுவோம். அப்போதுதான் காந்தியடிகளின் ஆன்மாவுக்கும் சாந்தி உண்டாகும்.

பொறுப்பைக் கழிக்காதீர்கள்

இருப்புப் பாதைகளும் நெடுஞ்சாலைகளும் குறுக்கிடும் சுமார் 20,000 இடங்களில் காவலிருக்க ஆட்கள் இல்லையாம். இந்த இடங்களில்தான் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றனவாம். இவற்றைத் தடுப்பது முக்கியம்; அவசியம். ஆனல் எப்படிச் செய்வது? யார் செய்வது?

இந்த இடங்களில் எல்லாம் கதவுகள் அமைத்து, ஆட்கள் நியமித்துச் சம்பளம் கொடுக்க வேண்டுமானல், சுமார் இருபது கோடி ரூபாய் முதலீட்டுச்

செலவும், பத்து கோடி ரூபாய் வரு ஷாந்திரச் செலவும் ஆகிறதாம். இவ்வளவு செலவு செய்யத் தயங்குகிறார் பாரத ரயில்வே அமைச்சர் திரு எஸ். வி. ராமஸ்வாமி. இந்தச் செலவை ராஜ்ய சர்க்கார்கள் ஏற்க வேண்டும், அல்லது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்கிறார். ஆனால் ராஜ்ய சர்க்கார்கள் இதை ஏற்கத் தயாராக இல்லை. அவர்களுடைய நிதி வசதிகள் இத்தகைய ஒரு சுமையை அவர்கள் ஏற்க இடம் கொடுக்குமா என்பது ஒருபுறம் இருக்க, இந்தப் பொறுப்பே ரயில்வே இலாக்காவைச் சேர்ந்தது என்பது அவர்கள் வாதம். பொதுச் சாலையை உபயோகிப்பவர்களுக்கு ஏற்படக்கூடிய ஒரு 'வசதி'க்கு ரயில்வே இலாக்கா பணம் செலவழிப்பானேன் என்பது அமைச்சர் ராமஸ்வாமியின் கருத்து.

ஊன்றிக் கவனித்தால் ரயில்வே இலாகாவின் பொறுப்புத்தான் இந்த விஷயத்தில் அதிகம் என்பது விளங்கும். கதவுகள் அமைத்து ஆட்களை நியமிப்பது ஒரு 'வசதி' என்று கூறுவதே சரியன்று. ரயில்வே செய்ய வேண்டிய ஓர் அவசியமான காரியம் என்றே இதைக் கருத வேண்டும்.

ரயில் பாதையும், பாதைக்கு இரு புறங்களிலும் எழுப்பப்படும் மதில் சுவர்களும், இதர தடுப்புக்களும், ஸ்டேஷன்களும், பாலங்களும் எப்படியோ அதே போலத்தான் ரஸ்தாவைக் குறுக்கிட்டு ரயில் செல்லும் இடங்களில் ஒழுங்குமுறைகள் செய்வதும். ரயில் மூலம் பிரயாணம் செய்யும் பிரயாணிகளின் சௌகரியங்களுக்கு மட்டுமே தாங்கள் வழி செய்து கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் என்றால், நெடுஞ்சாலைகளை குறுக்கிடாதபடி ரயில் பாதைகள் அமைத்துக் கொள்ளவேண்டும். அல்லது மேலை நாடுகளில் காணப்படுவது போல, நெடுஞ்சாலைகளெல்லாம் ரயில் பாதைக்கு உயர் மட்டத்திலோ அல்லது தாழ்ந்தமட்டத்திலோ செல்லும்படி அமைக்க வேண்டும். இதெல்லாம் கவைக்குதவாத பேச்சு. எனவே ரயில்வேக்களின் பொறுப்பைத் தட்டிக் கழிக்கப் பார்ப்பது சரியன்று. செலவு அதிகமாகிறது என்பதற்காக, முக்கியமான அம்சங்களைக் கவனிக்காது விட்டு விடப் பார்ப்பது விரும்பத் தக்கதல்ல. விபத்துக்களைத் தவிர்க்க வேண்டியது அவசியம். ஆகையால் அத்தியாவசியம் என்று கருதப்பட்ட சில இடங்களிலாவது, ஆட்களைப் போட வேண்டும். அம்மாதிரி இடங்கள் சுமார் 1200 இருக்கலாம் என்றும், அதற்காக ஏற்படும் செலவு ஒன்று அல்லது ஒன்றரை கோடி ஆகலாம் என்றும் சொல்லப்படுகிறது. சுமார் 1000 கோடி ரூபாய் முதலீடு செய்து, லாப நோக்கத்தோடு நடத்தப்படும் ஒரு தொழிலில் உயிர்களைக் காக்க ஒன்றரைக் கோடி செலவு செய்வது அதிகமாகுமா?


என்ன சேதி?

அண்ணாவின் யோசனை

நகரசபைத் தேர்தல்களில் கட்சி அடிப்படையில் காங்கிரஸ் போட்டியிடுவதில்லை என்று தீர்மானித்தால், தமது கட்சியும் அந்த ஏற்பாட்டுக்கு உடன்படும் என்று திரு அண்ணாத்துரை அவர்கள் கூறியிருக்கிறார். நகர சபைகளில் நகர சுத்தம், குடி நீர் போன்ற ஸ்தல விவகாரங்களைப் பற்றியே முக்கியமாக விவாதிக்க வேண்டுமாதலால் அவற்றில் கட்சி அரசியலுக்கே இடமில்லை. ஆகவே, திரு அண்ணாத்துரை வெளியிட்டுள்ள யோசனை மிகவும் வரவேற்க வேண்டியதுதான். எனினும் 'காங்கிரஸ் இந்த நல்ல முடிவை ஏற்குமா? ஏற்றாலும் அதை உண்மையாகவே கடைப்பிடிக்குமா?' என்பது சந்தேகமே. அரசாங்கம் காங்கிரஸிடம் இருக்கும் வரை இது போன்ற ஸ்தாபனங்களிலிருந்து அது விலகிக் கொள்வதென்பது பெயரளவோடு நின்று விடும். அதன் செல்வாக்குக்கு ஒரு குறைவுமின்றி ஸ்தல ஸ்தாபனங்களிலும் அதன் மறைமுக ஆதிக்கம்தான் நடக்கும். நேரடிக் கட்சித் தேர்தல் நடப்பதால் எதிர்க் கட்சிகளுக்குத் தற்போதுள்ள வாய்ப்புக்கள் கூட அப்போது எடுபட்டுப் போவதே மிச்சமாகும்.

நாய் ஜாக்கிரதை!

வீட்டு வாசல்களில் இப்படி போர்டு போட்டால் ஜாக்கிரதையாக இருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம். ஆனால் ஆஸ்பத்திரியில் முடங்கிக் கிடக்கும் நோயாளிகளும், குழந்தைகளும், தங்களை எப்படி நாயிடமிருந்து ரட்சித்துக் கொள்ள முடியும்? நம் நாட்டில் பற்பல இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்குள் நாய்கள் புகுந்து நோயாளிகளைக் கடித்துப் புண்படுத்தியதாகவும், சிசுக்களைத்தூக்கிச் சென்றதாகவும் கேள்விப்பட்டு மனம் புண்ணுறோம். பல



நிலவரியும், மறைமுக வரிகளும் குடியானவர்களைப் பிடுங்கித் தின்கின்றன.



அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் மூன்று மாத காலம் சுற்றுப் பிரயாணம் செய்து வெற்றிகரமாகச் சென்னை திரும்பிய நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு 24-6-62 அன்று விமான நிலையத்தில் கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது. சென்னை மேல் சபை அங்கத்தினரான எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் சிவாஜி கணேசனுக்குத் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் மாலை அணிவித்து வரவேற்றார்.

இடங்களில் இப்படி நடைபெற்றபின்பு சமீபத்தில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரித் தாழ்வாரத்திலேயே நடுப்பகலில் நாய் ஒன்று ஓடிக் கொண்டிருந்ததாக ஒரு செய்தியைப் படித்ததும் தூக்கி வாரிப் போட்டது. 'நாய்களை அனுமதிக்கக் கூடாது' என்று வைத்திய அதிகாரி உத்தரவு பிறப்பித்திருந்ததையும் பொருட்படுத்தாமல் அந்தப் பொல்லாத நாய் ஆஸ்பத்திரியில் பிரவேசித்திருக்கிறது!

நோயாளிகளின் உறவினர்கள் ஆஸ்பத்திரிக்குள் அனுமதி பெறுவதே பல சமயங்களில் பிரம்மப் பிரயத்தனமாக இருக்க ஸ்ரீமான் சுவானம் மட்டும் எப்படியோ பிரவேசித்திருக்கிறார். நல்லவேளையாக அந்த நாயினால் எந்தத் தீங்கும் நேர்ந்ததாகத் தெரியவில்லை.

நாயோடு நின்றிருந்த உபத்திரவம் பூனைக்கும் சேர்ந்து விட்டிருக்கிறது. நாசிக் ஆஸ்பத்திரி ஒன்றில் ஒரு பச்சைக் குழந்தையைப் பூனை ஒன்று குதறிக் கொன்ற பயங்கரத்தை எண்ணினாலே குலை நடுங்குகிறது. ஏதும் செயலற்ற துர்ப்பலமான நோயாளிகளை ஆஸ்பத்திரிகள் பராமரிக்கும் அழகு இதுதானா? நோய் படுத்தும் பாடு போதாதென்று நாய், பூனை இவை என்ன பாடு படுத்துமோ எனப் பயந்து நோயாளிகள், ஆஸ்பத்திரியை நாடவே அஞ்ச வேண்டுமா? இந்தக் கொடுமையை நிறுத்தச் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்தே ஆகவேண்டும். அது வரை இந்தக் களங்கம் அவர்களை விட்டு நீங்காது.

காமராஜரின் வாதம்

முதன் மந்திரி காமராஜ் அவர்கள் இப்பொழுதெல்லாம் தேர்தல் காலத்தைப் போலவே சூறாவளி சுற்றுப் பிரயாணம் செய்து எதிர்க் கட்சிகளைத் தாக்கி வருகிறார்.

திட்டங்களால் பயன் அடைந்தவர்களுக்கே வரி விதிக்கப்படுவதாக அவர் கூறுகிறார். உண்மையிலோ, ஏழை மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பொருள்கள் மீதெல்லாம்தான் மறைமுக வரி விதிக்கப்படுகிறது! எதிர்பார்த்தபடியே, மத்திய அரசாங்கத்தின் மறைமுக வரிகளின் பாரம் போதாதென்று சென்னை அரசாங்கமும் புது வரிகள் போட்டு மக்களைக் கசக்கிப் பிழியத் தீர்மானம் செய்து விட்டது. இந்த ஆண்டு பட்ஜெட்டின் படி ஏழரை கோடி ரூபாய்க்குப் புது வரிகள் அமுலுக்கு வரும்.

'உதவி'களின் உட்பொருள்

காஷ்மீர் விஷயமாகச் சமீபத்தில் நடைபெற்ற ஐ.நா. விவாதத்தில் மேற்கு வல்லரசு நாடுகள் நடந்து கொண்ட விதத்தைக் கண்டு வருத்தமுற்ற பாரதப் பிரதமர் நேருஜி ஓர் உண்மையை வெளியிட்டார். 'அயல்நாடுகள் நமக்கு மறைமுகக் கருத்துக்களைக் கொண்டு உதவி அளிப்பதில்லை; என்றாலும் இம்மாதிரி விஷயங்களில் தெரிந்தோ, தெரியாமலோ மறைமுகமான விருப்பு வெறுப்புக்கள் தோன்றத்தான் செய்கின்றன' என்பதை அவர் ஒப்புக் கொண்டார். இதைத்தான் ராஜாஜி நீண்ட காலமாகச் சொல்லி வருகிறார். அதை நமது அரசாங்கம் வெளிப்படையாக ஒப்புக் கொண்டால், அயல்நாட்டு உதவிக்குக் கையேந்தி நிற்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டி வரும். உதவியைக் குறைத்துக் கொண்டால், திட்டங்களின் முன்னேற்றம் தடைப்படும்.


திட்டங்கள்தான் காங்கிரஸ் ஆதிக்கத்தைத் தாங்கிப் பிடிக்கும் ஆதாரமாக இருப்பதால், அதற்கு எந்த விதத்திலும் பலவீனத்தை உண்டுபண்ணிக்கொள்ளப் பிரதமர் நேரு விரும்புவாரா? அப்படிச் செய்தால் தம்முடைய நிலைமைக்கும் கொள்கைகளுக்கும் ஊறு விளைவித்துக் கொள்வதாகாதா? எனவே வாய்மூடி மௌனியாக இருந்தார். ஆனால் உண்மையை எத்தனை நாளைக்குத்தான் மறைத்துவைக்க முடியும்? வல்லரசுகளிடையே போராட்டங்களும், சச்சரவுகளும் கெடுபிடிகளும் தீவிரமாகப் பரிணமிக்கும் போது, அவற்றின் இறுக்கங்களும் தாபங்களும் நடு நிலைமை நாடுகளையும் தாக்கவே செய்கின்றன. இந்த நிலைமையை மூடி மறைக்க முயற்சி செய்யாமல், இப்போதாவது உள்ளதை உள்ளவாறு உணர்ந்து, நமது சக்திக்கு ஏற்றவாறு செயலாற்ற வேண்டும். ஆனால் அப்படி நம்ப இடமில்லை. நிதி அமைச்சர் திரு மொரார்ஜி தேசாய் கையில் கப்பரையுடன் மற்றொரு யாத்திரை கிளம்பியிருக்கிறாரே!


பாரத் கிருஷிக் ஸமாஜம்

நகர மக்களுக்கும் விவசாயத்தைப் பற்றிய அறிவு அவசியம் என்ற கருணை உள்ளத்துடன், சமீபத்தில் சென்னை ஐலண்ட் மைதானத்தில் அகில இந்திய விவசாயக் கண்காட்சி நடத்திய பாரத் கிருஷிக் ஸமாஜம், 1959-ல் புதுடில்லியில் ஓர் உலக விவசாயக் கண்காட்சியும் நடத்தியது. அப்போது மத்திய சர்க்கார், கண்காட்சி நடத்துவதற்குத் தனக்குச் சொந்தமாகவுள்ள ஓர் இடத்தைச் சொற்ப வாடகைக்குக் கொடுத்து உதவியது. கண் காட்சியின் மூலம் பெருமளவில் லாபம் கிடைத்த போதிலும், சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய வாடகை முழுவதையும் ஸமாஜம் கொடுக்கவில்லை. இதைப்பற்றி லோக சபையில் கூட முன்பே கேள்விகள் கேட்கப் பட்டன. ஆனால் அப்போதைய விவசாய அமைச்சரே சமாஜத்தின் தலைவராகவும் இருந்ததாலோ என்னமோ, விஷயம் அமுங்கி விட்டது.

வருஷங்கள் மூன்று ஓடி விட்டாலும் சர்க்காருக்குச் சேர வேண்டிய தொகையைப் பாரத் கிருஷிக் ஸமாஜம் இன்னமும் செலுத்தவில்லை என்பது சமீபத்தில் வெளியான இந்திய தணிக்கை அறிக்கையிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

1960 பிப்ரவரியில் ஒப்பந்தப்படி வாடகைக்காக ஸமாஜத்திடமிருந்து அரசாங்கத்துக்குச் சேர வேண்டிய





ஜூன் ஜூலை மாதங்களுக்கு 'அட்மிஷன்' மாதங்கள் என்றே பெயர் சூட்டி விடலாம்.

பள்ளிக்கூடத்திலிருந்து கலைக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, தொழிற் கல்லூரி வரை எல்லாப் படிப்புக்கும் முற்றுகையிட்டு பெற்றோர்கள் அலைக்கும் மாதங்கள் இவை.


இன்னைப் பள்ளிக்கூடங்கள் நடைபெற்ற காலத்தில் கூட இவ்வளவு இடப் பஞ்சம் இருந்திருக்க நியாயமில்லை. இன்றோ எங்கும் இடமில்லை என்பதே பேச்சு.

மெடிகல் காலேஜில் சேர வேண்டிய பையனுக்குச் சிபாரிசு தேடும் தந்தை, இன்ஜினியரிங் காலேஜில்தான் சேருவேன் என்று ஒற்றைக்காலில் நிற்கும் மருமானுக்காக இடம் பிடிக்க அலையும் மாமா, எந்தக் காலேஜிலாவது இடம் கிடைத்தால் போதும் என்று காத்திருக்கும் புத்திர பாக்கியத்துக்கு 'ஸீட்' தேடி அலையும் பெற்ற பாக்கியம்— என்று விதம்விதமாகச் சிரமப்படுகிறவர்கள் இருப்பார்கள்.

இப்படி அட்மிஷனுக்காக அலையும்போதும் சிபாரிசு தேடிய போதும் அவர்களுக்குப் பல சுவாரஸ்யமான அநுபவங்கள் ஏற்பட்டிருக்கலாம். அந்த அநுபவங்களைச் சுவையான கட்டுரை வடிவில் ஆக்கி உங்கள் கல்கிக்கு அனுப்ப வேண்டுகிறோம். பிரசுரமாகும் சிறந்த கட்டுரைகளுக்குச் சன்மானம் உண்டு. 'சன்மானமே தேவையில்லை! என் பிள்ளைக்கு ஒரு அட்மிஷன் வாங்கித் தந்தால் போதும்' என்று யாரோ தேயர் முணுமுணுப்பது காதில் விழுகிறது. அது மட்டும் நிச்சயமாகச் சாத்தியமில்லை. ஒவ்வொரு கட்டுரையும் கல்கி இதழில் ஒரு பக்கத்துக்கு மேற்போகாமல் அமைய வேண்டும்.

கட்டுரைகள் ஜூலை 20-ந் தேதிக்குள் கல்கி காரியாலயத்தை அடைய வேண்டும்.





சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடம், ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் சென்னை தியாகராயநகர் வேங்கட நாராயணு ரோட்டில், ஆஸ்திகத்தைப் பரப்புவதற்காக மடம் ஒன்று நிறுவியிருக்கிறார். இப்போது இந்த மடத்திலுள்ள கொட்டகைகளில் உபன்யாசங்களும் பக்திப் பிரவசனங்களும், பஜனைகளும் நடைபெற்று வருகின்றன. அன்பர்களின் சௌகரியத்துக்காக இந்தக் கீற்றுக் கொட்டகைகளை அழகான மண்டபங்களாக நிர்மாணிக்கப் பல பக்தர்கள் முன்வந்திருக்கிறார்கள். இந்தக் கைங்கரியத்தில் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களும், பிரம்மஸ்ரீ நாராயண தீக்ஷிதர் அவர்களும் பங்கு கொண்டு, ஜூன் மாதம் 9ந் தேதியிலிருந்து ஸ்ரீமத் வால்மீகி ராமாயணப் பிரவசனம் செய்து வருகிறார்கள். ஜூலை மாதம் 11-ந் தேதி ஸ்ரீ ராம பட்டாபிஷேகம் நடைபெறவிருக்கிறது. இந்தப் புண்ணியப் பிரவசனத்தில் மக்கள் திரளாகக் கலந்து கொண்டு மண்டபத் திருப்பணியையும் செவ்வனே நடக்க உதவ வேண்டுகிறோம்.

முப்பத்தைந்தரை லட்சம் ரூபாயில் பல தாக்கீதுகளுக்குப் பிறகும் 1962 மார்ச்சு வரையில் 3.30 லட்சம் மட்டுமே சமாஜம் செலுத்தியுள்ளதாம். மிகுதியைச் செலுத்த முடியாது என்று சமாஜம் வாதாடிக் கொண்டிருக்கிறதாம்.

பாரத் கிருஷிக் சமாஜம் அரசாங்க ஸ்தாபனம் அல்ல. ஆனால் சர்க்காரிடமிருந்து பலவகை உதவிபெற்று இது அபிவிருத்தியடைந்திருக்கிறது. அது நடத்தும் கண்காட்சிகளில் மத்திய சர்க்காராகட்டும், ராஜ்ய சர்க்காராகட்டும் மிகுந்த அக்கறை காட்டுகின்றன. எனினும் தங்களுக்குச் சேர வேண்டிய தொகையை வசூல் செய்வதில் கண்டிப்பைக் காணோம்!

இம்மாதிரி குறைபாடுகளைத் தயங்காமல் எடுத்துச் சொல்லும் உயர் தணிக்கையாளரின் சேவையைப் பெரிதும் பாராட்ட வேண்டாமா?

புது சுதந்திர நாடுகள்

சென்ற மகா யுத்தத்துக்குப் பிறகு ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் புது சுதந்திர உணர்ச்சி பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது. அதன் விளைவாகப் பல நாடுகள் சுதந்திரம் பெற்றுள்ளன. அவ்வரிசையில் ஜூலை முதல் தேதியிலிருந்து ஆப்பிரிக்காவில் இரண்டு நாடுகள் சேருகின்றன. ருவாண்டா, உருண்டி என்ற இந் நாடுகள் பெல்ஜியத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுப் பூரண சுதந்திர நாடுகள் ஆகின்றன!

பெல்ஜியம், இத்தனை ஆண்டு காலம் ருவாண்டா, உருண்டி மக்களை ஆண்டு வந்தாலும், அவர்களுக்கு ராணுவப் பயிற்சியே அளிக்காமல் இருந்து வந்திருக்கிறது. ஆகவே, புதிதாகச் சுதந்திரம் பெறும் இந் நாடுகள் ஓரளவு ராணுவப் பயிற்சி பெற, பெல்ஜியத் துருப்புக்கள் ருவாண்டா, உருண்டியில் சுதந்திரம் பெற்ற பிறகும் ஒரு மாத காலத்துக்குத் தங்கியிருக்க ஏற்பாடாகியுள்ளது.

காங்கோவில் ஏற்படுத்திய குழப்பத்தை ருவாண்டா உருண்டியிலும் பெல்ஜியம் ஏற்படுத்தாமலிருக்குமா என்று உலகம் ஆவலுடன் கவனித்து வருகிறது!

ஜய ஜய சங்கரா

புல்மையும் பணிவும் நிறைந்த மறையோனையும், பசுவையும், யானையையும், நாயையும், அவ்வாறே அந்த நாயை உண்பவனையும் ஆத்மஞானிகள் சமமாகவே காண்கின்றனர்.

— ஸ்ரீமத் பகவத்கீதை.

9. "இதுவே என் உறுதி"

தாயின் அன்புடன் சங்கரரை வரவேற்றார் கோவிந்த பகவத் பாதர். சங்கரருக்கு கிரமப்படி சந்நியாச தீட்சை அளித்துக் குடத்து விளக்கைக் குன்றிலேற்றினார். தமது பிறவிப் பயனைப் பெற்று, ஈசன் சங்கரராகப் பிறவி எடுத்ததன் பயனையும் தொடங்கி வைத்தார்.

செங்காவி உடை பூண்டு விட்டார் குழந்தை சங்கரர். ராகம் என்றால் பிரேமை. ராகத்தை விட்டதாலேயே விராகி எனப்படுகிறான் துறவி. ரக்தம் - சிவப்பு-என்பதும் ராகத்தில் பிறந்தது தான். ஆனால் விராகியோ ரக்த வஸ்திரமே அணிகிறான்! தன்னை மையமாக வைத்துப் பிரேமை செலுத்தாமல் உலகை மையமாக வைத்து அதில் தன்னைக் கரைத்துக் கொள்ளும் பிரேமையல்லவா சந்நியாசியுடையது? அகந்தையை - மண்டை கனத்தை-க் குறிக்கும் சிகையையும் சங்கரர் மழித்தாகி விட்டது. மனசு, மொழி, மெய் இவற்றைத் தண்டித்து வசப்படுத்தியதற்கு அடையாளமாகக் கையில் தண்டம் தாங்கி விட்டார்.

அத்வைதம் என்ற அரும்பெரும் செல்வத்தை கோவிந்த பூஜ்ய பாதர் சங்கரரிடம் அளித்தார். ''ஆயிரம் முகத்தால் விஷ ஜ்வாலைகக்கிய தாங்கள் அதற்கு ஈடு செய்வதற்காக ஒரே முகத்தால் அமுத மொழிகளைப் பொழிந்து விட்டீர்கள்!'' என்று அழகாகக் கூறி அவரை நமஸ்கரித்தார் சங்கரர். குருவுக்கு அடங்கிக் குறிப்பறிந்த சீடனாகச் சில காலம் தொண்டு புரிந்தார். 'எல்லாவிதமான செல்வங்களையும் ஒருவன் பெற்றிருப்பினும் ஆசானின் அடியிணைகளில் மனத்தைப் பிணைக்கும் பேற்றுக்கு அவை ஈடாகுமா?' என்று குரு அஷ்டகம் பாடியபடியே நர்மதைக் கரையில் துள்ளித் துள்ளி குருவுக்குப் பணிவிடைகள் புரிந்தார்.

குரு பரம்பரையைத்தான் சங்கரர் எத்தகைய பணிவார்ந்த அன்புடன் போற்றியிருக்கிறார்! முக்கியமாக, தமது நேர் குருவாகிய கோவிந்தரின் திவ்விய நாமத்தை வைத்துத்தானே கண்ணன் துதிகளில் பெரும்பாலானவற்றை அருளினார்? 'பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம்' என்று தம் ஆசாரியரையும், கீதாசாரியனையும் இணைத்தே அல்லவா துதித்தார்?

சங்கரரைக் காணக் காண தண்டாயுதபாணியைக் காண்பது போல நெக்கு நெக்குருகினார் கோவிந்தர். ஏன், ஸ்ரீ ருத்ரத்தில் சிவபெருமானையே முடியைக் களைந்தவனாக — 'வியுப்தகேசன்' என — சொல்லியிருக்கிறதே, அது இந்த அவதாரத்தை எண்ணித்தானோ என்று வியந்தார்.

ஊனை உடலுக்குத் தாயான ஆர்யாம்பிகை செய்த தியாகத்தை ஞானத் தாயாகிய கோவிந்தரும் செய்யத்தான் வேண்டியிருந்தது. ''கண்ணே சங்கரா, பௌதிக மட்டத்தில் நாம் பிரிவோம். நீ காசி க்ஷேத்திரத்துக்குச் செல்வாய். அங்கு அத்வைத வித்தையைப் போதிப்பாய். வியாஸ பகவான் அருளியுள்ள பிரம்ம சூத்திரமும் அந்தத் தத்துவத்தைத்தான் அவலம்பிக்கிறது என்பதை விளக்கி பாஷ்யம் எழுதுவாய். என் குருமார்கள் என்னைப் பணித்தபடியே இந்தப் பணியை உன்னிடம் ஒப்புவிக்கிறேன்'' என்று கூறினார். மீண்டும் பதரிகாசிரமத்துக்கே ஏகினார்.

மோட்சமளிக்கும் ஏழு மகா க்ஷேத்திரங்களில் முதன்மையானது காசி. பரம்பொருள் இந்த விசுவத்தை யெல்லாம் தனக்குள் லயமாக்கிக் கொண்டு

ரா. கணபதி

விசுவநாதனாகத் திகழும் தலம் அது. ஞானியர் நோக்கில் அவனைத் தவிர மற்றதெல்லாம் அழிந்து விடும் 'மகா ஸ்மாசனம்' அது. சாவையே சாக வைத்து அமுத நிலையைத் தரும் மயானம் அது. அந்த அமுதத்தை அளிப்பவளைத் தான் அன்னபூரணி என்று அங்கு வழி படுகிறார்கள். விசாலாக்ஷி என்ற கோலத்தில், தனது பெரிய கண்களால் உலகையெல்லாம் அவள் பரிவுடன் கண்டபின் தான் அருள் அன்னத்தை ஊட்டுகிறாள். ஞானியர்களோ, ஈசுவரனின் ஊழித் தாண்டவத்திலும் சம்பந்தப் படாமல் சாட்சி மாத்திரமாகக் காணும் ஞானமே விசாலாட்சி என்பார்கள்.

சிவனும், சக்தியும் மட்டுமின்றித் திருமாலுடனும் தொடர்பு கொண்ட திவ்விய தேசம் காசி. காசியில் மரணமடைந்தவர்களின் வலது செவியில் ராமபிரானின் திருநாமத்தை ஓதித் தான் வீடு அருள்வான் பரமேசன்.

பரம பாவனமாகிய கங்கை என்ற வில்லில் பூட்டிய நாண் காசி. அதில் அம்பாக எய்யப்படும் ஜீவன் பரம் பொருள் என்ற இலக்கை அடைந்து விடுகிறான். வில் உருவில் தான் காசியை அணைத்து ஓடுகிறாள் கங்கை. உத்தமமான அந்த நதி இங்கு உத்தர திசை நோக்கிப் பாய்வதால் மேலும் புனிதமானது என்பர் அடியார்.

ஆஹா! திருமாலும் காண முடியாத இறைவனின் திரு முடியிலேயே தங்கும் பெருமை அல்லவா கங்கா தேவியுடையது? இப்போது, அயனும் காண இயலாத சங்கரனின் அடிகளையும் வருடி ஓடும் புது பாக்கியமும்—அவனது மேனி தன்னில் அலையும் புதுப் பேறும்—அவளுக்குக் கிட்டி விட்டது! ஆம்! இதோ பால சந்நியாசியான சங்கரர் இந்தக் காசி நகரில் கங்கா தீரத்துக்கு வந்து விட்டார். அவரைப் பொறுத்த மட்டில் இந்தக் காசி ஞானஸ்வரூபமே ஆகும். 'இந்த காசிகை எல்லாவற்றையும் துலக்கும் சர்வ பிரகாசிகை'யே என்று தலத்தைத் துதிக்கிறார் ஐந்து பாடல்களால். கங்கையும் அவருக்கு வெறும் மண்ணுலக நதியல்ல; தன் துழாய் மாலையன், திரிவிக்கிரமனாகித் தன் பாதத்தால் வானத்தைத் துழாவிய போது பிரம்ம லோகத்தில் சதுர்முகன் அந்தப் பாதங்களுக்கு முழுக்காட்டிய நீரே கங்கையாக இழிந்து வருவதாகக் கண்டார் அவர். அந்தப் புனித நீரை பரமேசுவரனே பெருமையுடன் தலையில் தாங்கினான். ஹரியும் ஹரனும் ஒரே மூலப் பொருளின் இரு மூர்த்தியரே என்ற அத்வைத ஞானத்தைக் கங்கை அலைகள் பாடுவதாகவே சங்கரர் கேட்டார். அதையே தாமும் 'கங்காஸ்துதி'யாகப் பாடினார்.

மணிகர்ணிகை கட்டத்தில் முக்தி மண்டபம். பாகீரதி பொங்கி நீர் பரந்து பாய்கிறாள். மணி மணியான வாக்குகளை வெள்ளி மணி போன்ற குரலில் பொழிந்தபடி - முக்தி நிலைக்கு அழைக்கும் ஆலாட்சமணியை முழங்கிய படி - இளம் சங்கரர் அத்வைதத் தத்துவத்தைப் போதிக்கத் தொடங்கி விட்டார். கங்கைப் பிரவாகத்தைத் தாழ்த்தும் வாக்குப் பிரவாகம். அவள் உடலைக் கழுவுவதைவிட நிர்மலமாக உள்ளத்தைக் கழுவும் தூய்மையான தத்துவம். இந்த ஞானக் குழந்தையிடம் ஆயிரக்கணக்கில் மக்கள் வந்து கூடுகிறார்கள். கூடிய பின் குழந்தையா, குருபரனே இவர் என்று உறுதிகொண்டு அவரது சீடர்களாகிறார்கள். அத்வைதம் என்ற சநாதன பாரத மதமே தங்கள் மதமெனக் கொள்கிறார்கள். சங்கரர் சங்கராசாரியராகி விட்டார்.

அவரைப் பார்க்கும் போது அவர்களுக்கு இறைவனின் பாதங்களைப் பற்றிக் கொண்டு விட்டது போல் தெம்பு தோன்றுகிறது. அவரைப் பகவத் பாதர்கள் என்று கூறி வணங்குகிறார்கள்.

அஞ்ஞானத்துடன் தொடர்புள்ளவைகளையெல்லாம் மெய் ஞானத்திலிருந்து அவர் பிரித்து எடுத்துப் போதிக்கும் லாகவத்தைக் கண்டு வியக்கிறார்கள். பாலோடு கலந்து விட்ட நீரைத் தனித்தெடுக்கும் ஹம்சத்தை நினைவு கொள்கிறார்கள். அதோடு அஹம் ஸ: (நான் அவனே—ஜீவன் பிரம்மமே) என்ற உணர்வைச் சிந்தும் அவரைப் பரம ஹம்ஸர் என்று போற்றுகிறார்கள்.

இந்தச் சிறிய பிள்ளை இப்படித் தன்னந்தனியாக — தான் அன்றி வேறு எதுவுமில்லாத நிலையாக — வாழ்வது கண்டு ஆச்சரியம் கொள்கிறார்கள். எல்லாவற்றையும் நீத்த பரிவிராஜகர் இவரே யல்லவா என்று பாராட்டிப் பேசுகிறார்கள்.

'எல்லாவற்றையும் நீத்து வந்தவர் தாமா இவர்? எல்லா மதத்தினரும், எல்லா நாட்டினரும் ஒப்புக் கொள்ளக் கூடிய தத்துவத்தைச் சொல்லி எல்லார் உள்ளத்திலும் அன்புடன் புகும் ஜகத் குரு அல்லவா இவர்?' என்று ஏத்துகிறார்கள்.

ஜகத்குரு ஸ்ரீ பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் என்று அவரை வாய் நிறைய, மனம் நிறைய அழைத்துப் பணிகிறார்கள்.

கங்கா ஸ்நானமும், விசுவநாதன் தரிசனமும், அத்வைத உபதேசமுமாகச்

சங்கரருக்குக் காலம் ஓடிக் கொண்டிருக்கிறது. குரு பிரான் பணித்தபடி பிரம்ம சூத்திரத்துக்கும், உபநிஷதங்களுக்கும் உரைகளும் இயற்றிக்கொண்டிருக்கிறார்.

வேதஸார சிவ ஸ்தவம், சிவ நாமாவளி ஸ்தோத்திரம், கால பைரவாஷ்டகம் முதலியவற்றால் சிவபெருமானைத் துதிக்கிறார் சங்கரர். மோட்சம் என்ற சாசுவதமான வீட்டின் தாழ்ப்பாளைத் திறந்து தமக்கு ஞானப் பிச்சை அளிக்குமாறு அன்னபூரணியை வேண்டுகிறார்.

இளைஞரொருவர் வந்து சங்கரருடைய பாதங்களில் பணிகிறார். தம்மைச் சீடராக ஏற்குமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறார். சோழ தேசத்திலிருந்து வந்துள்ளதாகவும், தமது பெயர் சனந்தனர் என்றும் தெரிவிக்கிறார். உண்மையில், சங்கரருக்கு முன்பே ஜகத்குரு விருது பெற்ற வாசுதேவனின் அம்சம் அவர். ஐயனுக்குத்தான் 'அரிய லால் தேவியில்லை' ஆயிற்றே! சனந்தனரை ஏற்கிறார் சங்கரர். ஈசுவரனும் அச்சுதனும் எவ்வளவு இனிக்கப் பழகிக் கொள்வார்கள் என்பது மற்ற சீடர்களுக்கு எப்படித் தெரியும்? சங்கரர் சனந்தனரிடம் அதிகமாக அன்பு செலுத்துவதாகப் பொருமை கொள்கிறார்கள்.

இதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாதது போலவே காண்கிறார் சங்கரர்.

ஒரு நாள் ஆசாரியர் கங்கையின் வட கரையில் சிஷ்யர்களுக்கு வேதாந்த பாடம் சொல்லிக் கொண்டிருக்கிறார். மறு கரையில் இருக்கிறார், சனந்தனர். மற்ற சிஷ்யர்களின் தவறான எண்ணத்தைப் போக்கவே அவர்களுக்கு மட்டும் போதனை அளித்து, சனந்தனரை ஏதோ குற்றேவல் செய்வதற்காக ஆற்றின் அக்கரைக்கு அனுப்பியிருக்கிறார் ஆசாரிய சங்கரர்.

பாடம் நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. நீரோட்டத்துக்கு மறுபுறமுள்ள சனந்தனரைச் சைகை காட்டித் தம் அருகே அழைக்கிறார் ஆசாரியர். குருவின் ஆக்ஞையே குறியாகவுள்ள அந்தச் சீடரும் உடனே நடக்க ஆரம்பித்து விட்டார் குருநாதனை நோக்கி. கங்கை குறுக்கிடுகிறது. ஆனால் குருவின் ஆக்ஞைக்குக் குறுக்கிடவில்லை அது. 'ஆசாரியர் அழைத்து விட்டார்; அவரிடம் செல்ல வேண்டும்' என்பது ஒன்று தான் சனந்தனர் நினைவில் நிற்கிறது. நதியுள்ளதென்ற ஸ்மரணையேயின்றி நீரோட்டத்தின் மேலேயே நடக்கிறார் அவர். இதென்ன விந்தை! நீர்மேல் அவர் எப்படி நடக்கிறார்? இல்லை, நீர் மீது நடக்கவில்லைதான். அவர் தம் அடியை எடுத்து வைக்கும் ஒவ்வோர் இடத்திலும் கங்காதேவி ஒரு பெரிய பத்மத்தைப் புஷ்பிக்கச் செய்து அவரைத் தாங்குகிறாள்! அந்தக் கமலங்களின் மீது கால்களை வைத்தே நடக்கிறார் சனந்தனர். பூம்பாலத்தின்மீது நடந்து வந்து இக்கரையும் சேர்ந்து விட்டார்.

மக்களும், இதர சிஷ்ய கோடிகளும் அவரது குருபக்தி மகிமையை அப்போது தான் புரிந்து கொள்கின்றனர்.

"அப்பனே! நீ எப்படிக் கங்கையைக் கடந்து வந்தாய்?" என்று கனிவு துளும்பக் கேட்கிறார், கை நீட்டி அவரை வரவேற்கும் சங்கரர்.

'ஓ! நாம் கங்கையைக் கடந்தா வந்திருக்கிறோம்?' அப்போதுதான் சனந்தனருக்கு அந்த விஷயமே தெரிய வந்தது! புஷ்பப் பாலத்தைப் பற்றி அவருக்கு இன்னமும் தெரியாது. இருந்தாலும், மற்ற சீடர்களுக்கு முன் தன்னைக் காப்பதற்காகச் சங்கரரின் இதயம் பெருக்கிய கருணையே நீர்ப்பெருக்கு தம்மைத் தொட்டுவிடாமல் காத்தது என உறுதிகொள்கிறார்.

"தங்களை ஸ்மரித்தால் சம்சாரம் என்ற பெரும் கடலே முழங்கால் அளவு ஆகி விடுகிறதே! இந்தக் கங்கைப் பிரவாகம் எம்மாத்திரம்?" என்கிறார்.

"அதப்படி இல்லை சனந்தனா! திரும்பிப் பார்!" என்கிறார், சங்கரர்.

திரும்பிய சனந்தனர் தம் பாதத்தைத் தாங்கிய தாமரைப் பாலத்தைப் பார்க்கிறார். அதைத் தோற்றுவித்த தெய்வத்தின் தாமரைப் பாதங்களையும் பார்த்துப் பரவசமாகிறார். அந்தத்தெய்வமோ ஏது மறியாதது போல் "பத்மங்கள் உன் பாதத்தைத்தாங்கியதல்லவா? இனிமேல் நீ பத்மபாதன் என்றே பெயர் பெறுவாய்! ஞானத்தேனைப் பிலிற்றும் உன்னை நன்மக்கள் வண்டுகளாகச் சுற்றி வருவார்கள்" என்று ஆசி கூறுகிறது.

மற்றொரு நாள் கங்கா ஸ்நானத்தை முடித்துக்கொண்டு ஆசாரியர் திரும்பிக் கொண்டிருக்கிறார், சிஷ்யர்கள்புடைசூழ.

அப்போது ஒரு புலையன் அவருக்கு வெகு அருகில் வந்து விடுகிறான். அவனுடைய தோற்றத்தின் அருவருப்பு போதாதென்று அவன் சுமந்துள்ள கள்ளுக் குடத்திலிருந்து நாற்றமும் 'குப்'பென அடிக்கிறது. அவன் கையில் நாலு நாய்களை வேறு பிடித்திருக்கிறான்!

அவனை எட்டிப் போகுமாறு சொல்கிறார், சங்கரர்.

அப்போது ஓர் அதிசயம் நிகழ்கிறது — சேற்றிலிருந்து செந்தாமரை முளைப்பது போல. அந்தப் புலையன் சில கேள்விகள் கேட்க ஆரம்பிக்கிறான் :

''சுவாமியாரே! எதை எதிலிருந்து விலகிப் போகுமாறு சொல்கிறீர்கள்? அன்னத்தை உண்பதனால் வளரும் ஒரு கூட்டை, அதேபோல் அன்னத்தினால் வளர்ந்த இன்னொரு கூட்டினிடமிருந்து விலகச் சொல்கிறீர்களா? அல்லது அவற்றுள் ஒரு கூட்டுக்குள் இருக்கும் ஞான ஒளியை இன்னொரு கூட்டுக்குள்ளிருக்கும் ஞான ஒளியிலிருந்து எட்டிப் போகச் சொல்கிறீர்களா?''

உணவால் உருவாகும் இரு உடம்புகளுமே எலும்பும், நிணமும், குருதியும் உருவாக்கிய பிண்டங்கள் தாம். அவற்றில் ஒன்றினால் மற்றதற்கெப்படி தீட்டு ஏற்படும்? இரண்டுமே குப்பைதானே?

ஞான ஒளிகளை விலகிப் போகச்சொல்வதும் அத்வைத சந்நியாசிக்கு அழகில்லை. ஏனெனில், ஞான ஒளிகள் என்று பன்மையில் சொல்வதே தவறு. இருப்பது ஒரே ஞானம்தான். அதில் சேர்க்கையேது, விலகல் ஏது?

புலையன் கேட்கிறான்:


''சூரியனுடைய பிரதிபிம்பம் பரம பாவனமான கங்கா நதியிலும் விழுகிறது. சேரிக் குட்டையிலும் தான் விழுகிறது. அந்தப் பிம்பங்களிடையே ஏதும் வித்தியாசமுண்டோ? காலியாகவுள்ள ஒரு பொற்குடத்தின் உள் இருக்கும் அதே வெளிதான் காலி மட்கலத்திலும் உள்ளது. அது போல் தேகத்தில் மாறுபாடு இருந்தாலும் உள்ளே உள்ள வஸ்து ஒன்றுதானே? அலை அடங்கிய, இயல்பாகவே ஆனந்தமாகவுள்ள, அறிவுக் கடல்தானே இரண்டு உடலுக்குள்ளேயும் உள்ளது? இதில் அந்தணன் என்றும் புலையன் என்றும் பெரிதான பேத மயக்கம் எங்கிருந்து வந்தது, சுவாமி?''

அவன் சொன்னதைச் செவி கொடுத்துக் கேட்டார் சங்கரர். செவி கொடுத்தா? ஆத்மாவையே செவியாக்கிக் கொண்டு அதன் உட்பொருளை அப்படியே விழுங்கிக் கொண்டார். அவ்வளவேதான்! புலையனின் பாதத்தில் அப்படியே விழுந்து எழுந்தார். அவனைத் தம் குரு என மனத்தால் வரித்தார். அந்த பாவனையே அவர் வாயிலிருந்து 'மநீஷா பஞ்சகம்' என்ற அற்புதமான ஐந்து சுலோகங்களாகக் கரை புரண்டது:

'' 'விழிப்பிலும், கனவிலும், உறக்கத்திலும் எந்த ஞானமானது சிறப்புற விளங்கிக் கொண்டிருக்கிறதோ, எது பிரம்மன் முதல் எறும்பு ஈறாக உள்ள எல்லா உடலங்களும் ஊடுருவும் ஆதாரப் பாவாக உள்ளதோ, இவ்வுலகில் பற்றிலாமல் சாட்சி மாத்திரமாக எல்லாவற்றையும் நோக்கிக் கொண்டு இருக்கிறதோ, அந்த ஞானமே நான், தற்போது பார்க்கப்படும் வஸ்துவல்ல' என்ற திட புத்தியைக் கொண்டிருக்கும் ஒருவன் யாராகிலும் – அவன் வேதியனாகிலும் சரி, அல்லது சண்டாளனேயாகிலும் சரி, அவன் என் குரு. இது என் உறுதியான கருத்து.

'' 'நான் பிரம்மமே. இந்த உலகம் யாவும் அறிவு பரப்பிய தோற்றம்தான். முக்குணங்களாலான அஞ்ஞானத்தினாலேயே இந்தத் தோற்றத்தையெல்லாம் கற்பனை செய்து கொண்டிருக்கிறேன்' என்பதில் எவன் திடபுத்தி கொண்டு, பரமானந்தமான, அழிவற்ற, மேலான, தூய நிலையில் உள்ளானோ அவன் வேதியனானாலும் சண்டாளனேயானாலும், என் குரு ஆவான். இது என் தீர்மானமான கொள்கை.

'' 'இந்தப் பிரபஞ்ச முழுவதும் சலிப்பதும், அழிவதும்தான்' என்று குருமுகமாக உணர்ந்து, இயல்பான சாந்த உள்ளத்தினனாக எவன் எப்பொழுதும் பிரம்மத்தை இடையறாது விளங்கிக் கொண்டிருக்கிறானோ, ஞானக்கினியில் தனது பழவினையையும் வரவிருக்கும் வினையையும் எரித்து விட்டுப் பலன் அளிக்கத் தொடங்கிய வினையின் வசமாக இவ்





வுடலைச் சமர்ப்பித்து விடுகிறேனே, அவன் யாராகிலும் என் குரு என்று நிச்சயமாகக் கூறுகிறேன்.

''விலங்கும், மனிதரும், தேவரும் எதை 'தான்' என்று பிடிப்பாகக்கொள்கின்றனரோ, எதனுடைய பிரகாசத்தினால் இதயமும், கண்ணும், உடலும் விளக்கமுற்று விஷயங்களை அறிகின்றனவோ, சூரியனால் உண்டான மேகம் சூரியனையே மறைப்பதோடன்றி அச்சூரிய ஒளியாலேயே தானும் பிரகாசிப்பது போல், எதிலிருந்து உண்டான உலகமே அதை மறைத்து அதனால் தானும் பிரகாசம் அடைகின்றதோ, அந்த ஆத்மாவை சதா அநுபவித்துக் கொண்டு, நிரம்பிய மனத்தினனாக பிரம்மத்தோடு சேர்ந்துள்ள யோகி யாரேயாகிலும் அவன் என் குருவே.

''எந்தக் களிப்புக் கடலின் வெகுநுண்ணிய துளியானாலும் இந்திரன் முன்னிட்ட தேவர் குழாமெல்லாம் ஆசை நிறைவேறியவராகின்றனரோ, எதைத் தமது அமைதியுற்ற அறிவில் பூரணமாக அடையப் பெற்ற முனிவர்கள் திருப்தி காண்கின்றனரோ, அந்த அழிவற்ற ஆனந்தசாகரத்தில் புத்தியை அர்ப்பித்து, பிரம்மத்தை அறிபவராக மட்டுமின்றி பிரம்மமாகவே ஆகின்ற துர்லபமான மனிதர்கள் உம்பர் கோமானாலும் வணங்க வேண்டிய பாதமுடையவர்கள். இது என் அதி திடமான முடிபு.''

இவ்வாறு, யாராயினும் ஞானியர் எல்லாரும் தமக்குக் குரவர் என்று ஆதி குருவான தட்சிணா மூர்த்தியாகவும், உலக ஆசாரியரான சங்கரராகவும் இருந்த மஹான் ஐயம் திரிபறக் கூறினார். காசிமாநகரில் பட்டப் பகலில் பரிஜனங்கள் சுற்றி நிற்கும்போது சிறிதும் தயக்கமின்றிச் சண்டாளனைக் குரு என்று போற்றி வணங்கினார். குலத்தினாலன்றி அறிவைக் கொண்டு ஒருவனை மதிப்பதே தமது மதம் என்று பிரகடனம் செய்தார்.

சுலோகம் முடிந்தது. சண்டாளனும் மறைந்தான்.

அவன் இருந்த அதே இடத்தில் சாட்சாத் விசுவநாதன் திவ்விய தரிசனம் அளிக்கிறான்! கள்ளுக்குடம் கங்கையாகவும், நாலு நாய்களும் நாலு வேத மாதாக்களாகவும் திகழ்கின்றன! ஒரு தீபத்திலிருந்து மற்றொரு தீபத்தை ஏற்றுவதால் முதல் தீபம் அழிந்து விடுவதில்லையே! அதேபோல் கயிலைவாழ் சோதியிலிருந்துவந்த ஞானக் கொழுந்துதான் சங்கரர். இன்று இருவருமே ஒருமிக்கச் சேர்ந்து நின்றார்கள்.

இறைவனாகவே வந்து அற்புதத்தால் தர்மத்தை நிலைநாட்டுவதில் பெருமையில்லை என்பதால் தான் மானுட சங்கரராக வந்தான் ஈசன். அவரது மனிதத் தன்மையிலேயே மிளிரும் அற்புதத்தை உலகுக்கு அறிவிக்கத் தானே பிரஸன்னமானான். சங்கரருக்கு நல்லாசி கூறி மறைந்தான்.


மநீஷா பஞ்சகத்தின் முதல் நான்கு சுலோகங்களில் முறையே ருக், யஜுஸ், சாம, அதர்வண வேதங்களிலுள்ள பல மகா வாக்கியங்களில் முக்கியமான ஒவ்வொன்றின் தாத்பரியம் கூறப்பட்டுள்ளது. இம்மகா வாக்கியங்களுக்குவிளக்கமாகவேதான் பின்னர் சங்கரர் முறையே புரி ஜகந்நாதம், சிருங்ககிரி, துவாரகை, பதரி முதலிய இடங்களில் பீடங்களை நிறுவியது. இந்த மகா வாக்கியங்கள் வேதத்தின் ஒவ்வொரு சாகையைச் சேர்ந்தவை. பிரணவமோ எல்லாச் சாகைகளுக்கும் பொதுவான அரும் பெரும் வாக்கியம். பிரம்மமே தான் என்ற நிலையை விளக்கும் 'ஸோஹம்' என்ற மகா வாக்கியத்தின் கருவான சப்தங்கள் அடங்கியது 'ஓம்' எனும் பிரணவம். அதன் உருவகமாகவும் ஐந்தாம் சுலோகத்தின் பொருளாகவும் காஞ்சி காமகோடி பீடத்தை சங்கரர் ஸ்தாபித்து அதில் தாமே ஆரோகணித்தார். இதெல்லாம் இனி வரும் கதை.


சங்கரரது காலத்தை மனத்தில் கொண்டு, அப்போது அவர் வகித்த உன்னத ஸ்தானத்தையும் நினைத்துப் பார்த்து, அவரே இப்படிப் புலையன் ஒருவனைத் தம் குருவென்று சொல்லிக் கொண்டார் என்பதை எண்ணிப் பார்த்தால்தான் அவருடைய எளிமையும், விநயமும், செருக்கின்மையும் 'எப்பொருள் யாரார் வாய் கேட்பினும் அப் பொருள் மெய்ப்பொருள் காணும்' பரந்த மனப்பான்மையும் தெரியும். 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்ற வள்ளுவர் வாசகத்துக்கும்,

சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலை அல்லார் கண்ணும் கொளல்

என்ற பொய்யா மொழிக்கும் இந்த நிகழ்ச்சியைவிட விளக்கம் உண்டா?

இன்றைக்கும் கூட, பீடாதீசுவரர்களாக உள்ள சில மகாத்மாக்கள் எத்தனை எளிய வாழ்வு வாழ்வதைக் காண்கிறோம்! (தொடரும்)


இந்திரா காந்தி
காங்கிரஸ் அக்கிராசனர்
உள்துறை மந்திரி
ஆசார்ய ரங்காவைத் தூக்க ஆயத்தம்
PK


"கிருஷ்ணமேனன் நாட்டிலிருந்து பிட்சை கேட்க வருகிறார்!"
PK



கரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
ஸ்டெயின் லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
எப்பொழுதும் பிரகாசத்துடன் நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & சன்ஸ்
122. கன்ஸராசால்...பம்பாய்-2.

சிந்தனை மேடை

அரவிந்தன்

5. சுற்றுப்புற உணர்ச்சி

இங்கிதம், விநயம் போன்ற வார்த்தைகளைப் பல முறை கேள்விப்பட்டிருப்பீர்கள். அகராதியிலும் எழுத்துக் கூட்டத்திலும் மட்டுமே இந்த வார்த்தைகளின் பொருள் நிறைவடைந்து விளக்கம் பெற்று விடுவதில்லை. மனிதர்களுடைய வாழ்க்கையிலும், நடத்தையிலும் அநுபவபூர்வமாக எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் இந்தப் பதங்களின் ஆற்றலை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இங்கிதம், விநயம் போன்ற குணங்கள் பள்ளிக்கூடத்திலோ, கல்லூரியிலோ, பாடப் புத்தகங்களிலோ இப்படிப்பட்டவை என்று எல்லைக்குட்படுத்திக் கற்றுத்தர முடியாதவை. பழக்கத்தினாலும், பண்பாட்டினாலும் கனிந்து கனிந்து உருவாக வேண்டிய இந்தக் குணங்களைப்பற்றி இலக்கணம் சொல்லி விளக்கிவிட முடியாதாயினும் சிந்தித்துப் பார்க்கலாம்.

தன்னுடைய சுற்றுப்புறத்தை உணர்ந்து தெளிந்து அதற்கேற்பப் பிறரோடு பழகும் பக்குவம் மிகச் சிறந்தது. ஆனால் இந்த விதத்தில் பழகும் முறை மட்டுமே முழுமையான இங்கிதம் ஆகிவிடாது. இங்கிதம் என்ற பகுப்பினுள் இப்படிப் பழகும் முறையும் ஓர் அங்கமாகி நிற்க முடியும். சுற்றி நிற்பவர்களின் பார்வை, பேச்சு, முகம், இவற்றை ஒரு விநாடியில் எடை போட்டுவிடுகிற கூர்மையான உணர்ச்சியைச் சிலர் இயல்பாகவே பெற்றிருப்பார்கள். இப்படி நுட்பமான மதியுள்ளவர்களுக்கு உலகம் பலவிதங்களில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. ஒரு மனிதனை அரை விநாடி நேரத்தில் அளந்து புரிந்துகொண்டு தீர்மானம் செய்து விடும் வல்லமை இவர்களுக்கு இருக்கும். இவர்களுடைய கண்களும், மனமும், சிந்தனையும் துறுதுறுவென்றிருக்கும். எந்தக் காரியமும் மந்தமாக நடைபெறுவதை இவர்களால் பொறுத்துக் கொள்ளவே முடியாது. ஒரு காரியம் மந்தமாக நடைபெறுவதைத்தான் மன்னிக்க முடியாது. ஆனால் நிதானமாக நடைபெறுவதை ஒப்புக் கொள்ளலாம். மந்தம் வேறு; நிதானம் வேறு. நிதானம் என்பது குணம். மந்தம் என்பது குற்றம். உலகத்தில் நியாயமாக அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு குணத்துக்கும் எதிர்த் தரப்பினதாக ஒவ்வொரு குற்றமும் இருக்கும். நிதானம் என்ற குணத்துக்கு எதிர்த் தரப்பில் மந்தம் என்பது குற்றம்.

நிதானமாக இருக்க வேண்டிய இடத்தில் நிதானமாக இல்லாதது ஒரு குற்றம். நிதானமாக இல்லாததோடு மந்தமாயிருப்பது மற்றொரு குற்றம். பிறரோடு பழகும் முறையில் மிக மென்மையான பல குணங்கள் சேர்ந்ததோர் உயர்ந்த நிலைதான் இங்கிதம். இந்தக் குணத்துக்கும், படிப்புக்கும் ஒரு விதமான தொடர்பும் இல்லை. படித்தவர்கள் பலர் சிறிதளவும் இங்கிதம் தெரியாதவர்களாக இருப்பதையும் எந்த விதத்திலும் படிப்பில்லாத பலர் நன்றாய் இங்கிதம் தெரிந்தவர்களாக இருப்பதையும் உலக வாழ்க்கையில் கண்கூடாகக் காண்கிறோம். சுற்றுப்புறத்தை உணர்ந்து வாழ்வதே ஒரு பெரிய படிப்புத்தான்.

நாலு பேருக்கு நடுவில்

புதிய மனிதர்கள் நாலு பேருக்கு நடுவில் ஒருவன் எப்படிப் பேசிப் பழகுகிறான் என்பதை அறிந்து கொண்டும் அவனுடைய இங்கிதம் எப்படிப்பட்டதென்று கணக்கிடலாம். பத்துப் பன்னிரண்டு மனிதர்களைச் சேர்ந்தாற்போல் எதிரே சந்தித்து விட்டால் பேசிப் பழகுவதற்குக் கூசி அசடு வழிகிற நிலையை அடைவார்கள் சிலர். ஒரு மனிதனைச் சந்திக்கும்போது எவ்வளவு பக்குவமாகவும், இங்கிதமாகவும் பழக முடியுமோ, அவ்வளவு பக்குவமாகவும் இங்கிதமாகவும் நூறு மனிதர்களைச் சந்திக்கிற போதும் பழக முடிந்தவன் எவனோ அவன் ஏதோ ஒரு வகையில் இந்தச் சமூகத்துக்குத் தலைவனாகத் தேர்ந்தெடுக்கத் தகுந்தவன். அவனுடைய சுற்றுப்புற உணர்ச்சி அதிகமானது; மதிக்கத் தகுந்தது.

சுற்றி இருப்பவர்களுடைய சுகதுக்கங்களையும் அந்தரங்கங்களையும் நன்றாகப் புரிந்து கொண்டு அதற்கேற்பப் பழகுகிறவன் தான் வாழும் இடத்துக்கே ஓர் அணிகலனைப் போன்றவன். இப்படிப் பழகுகிறவர்கள் நூறு பேர்கள் இருந்தால் அவர்கள் தாங்கள் இருக்கிற ஊருக்கே பெருமையைத் தருகிறார்கள்.

வறுமையும், ஏக்கமும், வாழ்க்கைத் துன்பங்களும் நிறைந்த பத்துப் பேருக்கு நடுவில் தன்னுடைய சுகபோகங்களையும், ஆடம்பரங்களையும் காண்பித்துக் கொள்ள ஆசைப்படுகிற ஒருவன் இருந்தால் அவன் சுற்றுப்புற உணர்ச்சி இல்லாதவனே! தன்னுடைய சுகம் சுற்றி வாழ்கிற பத்துப் பேருடைய மனத்தைத் துன்புறுத்தும் என்று தெரிந்திருந்தும் அதை அந்தப் பத்துப் பேரும் கண்டு குமுறுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்கிறவனை என்னவென்று சொல்வது? மனிதன் தனியாக வாழவில்லை. சமூகத்தில் ஒருவனாகக் கலந்து வாழும் போது வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனுக்கும் சுற்றுப்புற உணர்ச்சி அவசியம் வேண்டும். தனி மனிதனுடைய சுகதுக்கங்களுக்கும் அவற்றின் காரணங்களுக்கும் அவனே பொறுப்பாளி ஆனாலும் அந்தச் சுகதுக்கங்கள் சமூகத்தோடு தொடர்புள்ளவைகளாகவே இருக்கின்றன. பல பேருக்குத் தெரியும்படியான ஒருவனுடைய செல்வமும், சுகமும், சமூகத்தின் கவனத்துக்கும், கணிப்புக்கும் ஒவ்வொரு விநாடியும் இலக்காகிக் கொண்டிருக்கின்றன. அதே போல் பல

பேருக்குத் தெரியும்படியான ஒருவனுடைய துக்கமும், வேதனைகளும், பசியும், பழக்க வழக்கங்களும் கூடச் சமூகத்தின் கவனத்துக்கும், கணிப்புக்கும் ஒவ்வொரு விநாடியும் இலக்காகிக் கொண்டிருக்கின்றன.

இதை நினைவு வைத்துக் கொண்டு வாழ்வதுதான் சுற்றுப்புற உணர்ச்சி. எட்டு மாடிக் கட்டடம் உள்ள பெரிய ஓட்டலில் 'ஏர்க் கண்டிஷன்' செய்யப் பெற்ற ஹாலில் அமர்ந்து வயிறு புடைக்கச் சாப்பிட்டு விட்டு நீங்கள் படியிறங்கித் தெருவில் பிரவேசிக்கும் போது எதிர்ப் பக்கத்து மரத்தடியிலே குழிந்த வயிறும் பஞ்சடைந்த கண்களுமாகப் பசியின் பிரதிநிதிகளாய் வீற்றிருக்கும் பத்துப் பிச்சைக்காரர்களைப் பார்த்தால் உங்கள் உடம்பும் மனமும் கூனிக் குறுகிக் கூசுவது உண்டா, இல்லையா? நீங்கள் வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு வந்ததை எண்ணி உங்களுக்கே அருவருப்பு உண்டாகுமா இல்லையா? இப்படிப் பிறருடைய துக்கங்களை உணரும் போது தன் சுகத்தை எண்ணிக் கூசுவதும் சுற்றுப்புற உணர்ச்சிதான். உயர்ந்த பண்பாடுகளுடன் வாழ்கிற சிறந்த சமுதாயத்துக்கு இந்தக் கூச்சமும் ஓர் அடையாளமாகும்.

வெறுக்கத்தக்க சுகம்

நூறு பேரை அழச் செய்து வேதனைப் படுத்தி அதனால் பத்துப் பேர் சிரித்து வாழ்கிற வாழ்வு சமுதாயத்தின் ஆரோக்கியமான சூழ்நிலை ஆகாது. பலர் வேதனைப்பட அதன் விளைவைச் சிலர் அனுபவிக்கிற நியாயமில்லாத சுகங்கள் இனிமேல் வளர்ந்து வரும் புதிய சமுதாயத்தில் பொய்யாய்ப் போய் விடும். கல்வியும், நாகரிகமும், பண்பாடும் உள்ள சமூகத்தி்ல் இப்படி அடைகிற சுகம் வெறுக்கத்தக்கது.

'வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் — இங்கு
வாழும் மனிதருக்கு எல்லாம்'

என்று கவி இதயம் படைத்தவன் துணிந்து சொல்லும்போது இந்தச் சொற்களில் ஆவேசமும், அழகும், நியாயமும் சேர்ந்து தெரிகின்றன. இதே வார்த்தைகளைப் பசித்துக் கிடக்கிற ஒருவன் குமுறக் குமுறச் சொல்லும் போது அந்தச் சொற்களிலே அழகும் கவிதைத் தன்மையும் இருக்காது. ஆவேசம் மட்டுமே இருக்கும்.

கவிகளின் சுற்றுப்புற உணர்ச்சி அழகிய பாட்டாய் வெளிப்பட்டு மனிதர்களைக் கவரலாம். ஆனால் மனிதர்களின் சுற்றுப்புற உணர்ச்சிதான் மனிதர்களைக் காப்பாற்ற முடியும். சூழ்ந்திருப்பவர்களின் கஷ்டங்களைப் புரிந்து கொண்டு வாழ்கிற மனிதன் எவனோ அவன் வேறு எதையும் வாரி வழங்க முடியாதவனாக இருந்தாலும் அநுதாபத்தை மட்டும் வாரி வழங்குகிற வள்ளலாகவாவது இருப்பான்.

பட்டினத்தின் பெரிய வீதிகளில் நான் சொல்லப் போவதைப் போன்ற காட்சிகளை நீங்கள் அடிக்கடி பார்த்திருப்பீர்கள். பட்டப் பகலில் உச்சி வெய்யில் கொளுத்திக் கொண்டிருக்கும் வேளையில் ஏழெட்டுப் பேர் உட்கார முடிந்த பெரிய காரில் ஒரே ஒரு மனிதர் உட்கார்ந்து பயணம் செய்து போய்க்கொண்டிருப்பார்; அவருக்கு வேண்டியவர்கள், தெரிந்தவர்கள், குழந்தைகள், சிறு பெண்கள், பள்ளிச் சிறுவர்கள் என்று நூற்றுக்கணக்கான மற்ற மனிதர்கள் அதே சாலையில் காலில் செருப்பு மின்றி வெய்யிலில் வேர்க்க விறுவிறுக்க நடந்து போவார்கள். முன்னேற்றமடைந்த வெளிநாடுகளில் கார் சவாரி, விமான சவாரி எல்லாம் செய்யப் போகிற காரியத்தின் அவசரத்தைக் குறிக்கும் அடையாளமாகவும் நேரத்தை. சிக்கனப்படுத்திப் பயனுக்குகிற சாதனமாகவும் கருதப்படுகிறது. அவற்றுக்கு இவை தவிர அங்கே வேறு மதிப்பில்லை.

இந்தத் தேசத்திலோ, கார் சவாரி, விமான சவாரி, முதல் வகுப்புப் பயணம் எல்லாம் அவற்றில் ஈடுபடுகிற மனிதனுடைய 'ஸ்டேட்டஸ்' ஒன்றை மட்டும் வெளிப்படுத்தவும் புரிந்து கொள்ளவுமே பயன்படுகிறது. குணங்களாலும், புத்தியினாலும், தூய்மையினாலும் மனிதனுடைய 'ஸ்டேட்டஸ்' புரிந்து கொள்ளப்படுகிற நிலை வரும் வரை இலட்சியவாதிகளுக்கு வேதனைதான். ஏனென்றால் அவர்களுடைய இலட்சியமும் உலகத்துக்குப் புரியாது. அவர்களும் உலகத்தினால் விளங்கிக் கொள்ளப்பட மாட்டார்கள்.

கண்ணோட்டம்


'தாட்சிண்யம்' என்ற வார்த்தைக்குச் சரியான பொருளுள்ள தமிழ்த் தொடர் 'கண்ணோட்டம்' என்பது. இதை இன்னும் நன்றாக விளக்க முயலலாம். ஒரு மரத்துக்கும் அந்த மரத்தடியில் நிற்கிற ஒரு மனிதனுக்கும் என்ன வேறுபாடு?

பச்சைப் பசேரென்று செழித்து நிற்கிற அந்த மரத்தில் ஏறி நாலு கிளையை எவனோ வெட்டிக் கீழே வீழ்த்திவிட முயன்றால் கீழே நிற்கிற மனிதன், 'ஐயோ! பச்சை மரத்தை இப்படி வெட்டுகிறார்களே' என்று நினைக்கவாவது முடியும். அதே சமயத்தில் கீழே நிற்கிற மனிதனுடைய விரோதிகள் யாராவது ஓடி வந்து அவனுடைய கையையோ, காலையோ முறிக்க முயன்றால் அவனுக்கு மேலே இருக்கிற மரத்தினால் அதைப் பற்றி அநுதாபமாக நினைக்கவும் கூட முடியாது. இந்த வேறுபாடுதான் மனிதனுக்கும் மரத்துக்கும் நடுவில் இருப்பது.



சுற்றுப்புறத்தை உணர முடியாத மரத்தின் தன்மையிலிருந்து மனிதனை வேறுபடுத்திச் சிறப்பாக்கிக் காட்டுவது எதுவோ அதுதான் கண்ணோட்டம். உயர்ந்த மனப் பக்குவம் உள்ளவர்கள் பயிர்பச்சைகள் வாடுவதைக் கண்டு கூட மனம் நொந்து நிற்பார்கள்: 'வாடிய பயிரைக் கண்ட

போதெல்லாம் வாடினேன்' என்று வடலூர் இராமலிங்க அடிகள் அந்த உயர்ந்த நிலையை வெளியிடுகிறார். ஆனால் இன்றைய நகரங்களின் அவசர வாழ்க்கையில் சுற்றி வாழ்கிறவர்கள் வாடியிருப்பதைக் கண்டும் கூடப் பதிலுக்கு வாடத் தெரியாமல் ஓடிக் கொண்டிருக்கிறோம் நாம். சந்தர்ப்பங்களின் வற்புறுத்தலாலும், பிழைக்க வேண்டிய வாழ்க்கை அவசரத்தாலும் வேகமாக வாழ்கிறோம். வேகமாக வாழலாம். ஆனால் மனிதத் தன்மையற்று வாழக் கூடாது. எந்த இடத்தில் நடந்து போய்க் கொண்டிருக்கிறோமோ அந்தப் பாதையைப் பார்க்காமல் நடக்க முடியாதது போல் எந்தச் சூழ்நிலையில் இருக்கிறோமோ அந்தச் சூழ்நிலையின் சுகதுக்கங்களிலிருந்து நம்மைப் பிரித்துக்கொண்டு தனியாக நாம் மட்டும் மகிழக்கூடாது. அப்படி மகிழும் மகிழ்ச்சி நியாயமானதாக இருக்க முடியாது. சுற்றுப்புறத்தோடு படர்ந்து கொடியைப் போல் எல்லாக் கிளையிலும் மலர்ந்தபடி வாழ வேண்டும். கண்ணோட்டம் நிறைந்த வாழ்க்கை என்பது இதுதான். அநுதாபத்தைக் கூட உறவினர்கள் மேலும், தங்களுக்குப் பயன்படுகிறவர்கள் மேலும் செலுத்துகிற காரணக் கருணை சான்றோர்களால் மதிக்கப்பட மாட்டாது. தெரிந்தவர்களோ, தெரியாதவர்களோ கலந்து பழகிப் பேசி அல்லது கண்டு உணர்ந்து புரிந்து கொண்டு சுற்றுப்புறத்தோடு ஈடுபட்டு வாழ வேண்டும்.



சின்னஞ்சிறு கிராமங்களிலும் ஆடம்பரங்கள் நுழையாத சிறிய ஊர்களிலும் சுற்றுப்புற உணர்ச்சி இயல்பாகவே அமைந்திருக்கும். அகன்ற தெருக்களும் பெரிய வீடுகளும் ஒளி மயமான வாழ்க்கையும் உள்ள நகரங்களிலோ பக்கத்தில் குடியிருப்பவர்களுடைய ஊர் பேர் தெரியாமலே ஒவ்வொரு குடும்பமும் தன் சுகத்திலும், நலத்திலும் மூழ்கி வாழும். ஒரு வீட்டின் சுக துக்கங்கள் இன்னொரு வீட்டைச் சிறிதளவும் பாதிக்காது. அவ்வளவு ஏன்? ஒரு வீட்டின் சுக துக்கங்கள் இன்னொரு வீட்டுக்குத் தெரியக்கூட வழியின்றி வீடுகள் ஒவ்வொன்றும் நெருங்கியிருந்தும் உறவுகளும், உணர்வுகளும் பிரிக்கப்பட்டிருக்கும். நகர வாழ்க்கையின் புதுமைகளிலும் நாகரிகத்திலும், இப்படி உறவுகளாலும் பிரிந்து போயிருப்பது குறையாகப் படவில்லையானாலும் சுற்றுப்புற உணர்ச்சி அற்றுத் தனித் தனிச் சுகங்களில் மூழ்கி வாழ்வது சரியில்லைதான். இப்படி நெருங்கி வசித்தபடியே பிரிந்து வாழ்கிற பட்டினத்து நாகரிகக் குறைபாடு என்றாவது ஒரு நாள் மாறித்தான் ஆக வேண்டும். இயல்பாகவோ, படிப்படியாகவோ அந்த மாறுதல் நிகழும் காலத்தை எதிர்பார்த்து நம்புவோமாக.


AEI

ஏ இ ஐ ஸீலிங் மற்றும் டேபிள் விசிறிகள்


குளிர்ந்த அமைதியான ஆனந்தத்திற்கு

குறைந்த மின்சாரத்தில் மிகுந்த சக்தியுடன் இயங்குமாறு உருவாக்கப்பட்ட ஏ. இ. ஐ. ஸீலிங் மற்றும் டேபிள் விசிறிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட மூலப்பொருள்களைக் கொண்டு செய்யப்படுகின்றன. துல்லியமான தேர்ச்சியுடன் ஏ. இ. ஐ. விசிறிகள் தயாரிப்பதில் "இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் மின்சாரக் கருவிகள் அளிக்கும்" ஸ்தாபனத்தின் அனுபவமும், தொழில் நுட்பத்திறனும் உதவுகின்றன.

இது வெறும் பண்டம் வாங்குவதல்ல; முதலீடு செய்வதாகும்



மைத்தான் ஏ.ஸி.
பக்ரா டி.ஸி. 900மி.மீ, 1200மி.மீ, 1400மி.மீ. மற்றும் 1500மி.மீ



"டிலக்ஸ்" 400மி.மீ
டேபிள் மாடல்

- பிரித்தெடுக்கக்கூடிய பாது காப்பு மூடி.
- இஷ்டப்படி மாற்றிக்கொள்ளக் கூடியது, ஆடி வீசக்கூடியது.
- துல்லியமான வடிவமும், சம அமைப்பும் உள்ள அலுமினிய விசிறித் தகடுகள்.
- மூன்று வேக அளவுகள்.
- எனாமல் மெருகிடப்பட்ட பல மாதிரிகள்.

அஸோஸியேடெட் எலக்ட்ரிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

தலைமை காரியாலயம்: க்ரௌன் ஹவுஸ், 13, ராஜேந்திரநாத் முக்கர்ஜி ரோடு, கல்கத்தா-1.
கிளைகள், பம்பாய் புது டெல்லி சென்னை பெங்களூர் கோயம்புத்தூர் நாகபுரி.

'கவுண்ட்டர்' அருகே கூட்டம் நிரம்பி வழிந்தது.

எல்லாம் பத்திலிருந்து பதினைந்து வயது மதிப்பேயுள்ள பள்ளிப் பிள்ளைகள் பள்ளிக்கூடம் திறந்த ஜோரில், பாஸ் பண்ணிவிட்ட தெம்பில் 'ஸ்கூல் பீஸ்' கட்டுவதற்காகக் கவுண்ட்டரருகே கும்பல் போட்டிருந்தனர். பத்து ரூபாய் 'பணக்காரனி'லிருந்து இருபது



வந்த வழியே

கே.ஏ.என்




இருபத்தைந்து ரூபாய் 'பணக்காரன்' வரை அங்கே இருந்தனர்.

கும்பலையே பார்த்துக் கொண்டிருந்தான் முத்தன். அவன் நெற்றியில் கோடுகள் விழுந்திருந்தன. ஜேபியில் இருந்த பிடியைப் பற்ற வைக்கக் கூட நினைவில்லாமல் செயலிழந்து அவன் நின்று கொண்டிருந்தான்.

'நாளை கந்தப்பனும் இப்படித்தான் தன்னுடைய பள்ளிக்கூடக் கவுண்ட்டரருகே நின்று கொண்டிருப்பான். நாளை அவன் அங்கே நிற்க இன்று நாம் 'சம்பாதித்தாக' வேண்டும்!'

முத்தனின் சிந்தனை சுழன்றுகொண்டிருந்தது.

'என்ன வேலை? என்ன சம்பாத்தியம்? வேலை பார்க்கும் இடம் எங்கே?' என்று இதுவரை அவன் மனைவியோ, மகனோ அவனைக் கேட்டதில்லை. கேட்கவும்விட்டதில்லை அவன்.



"அதோ அந்த 'பேபி' எவ்வளவு சமர்த்தா வாயைத் திறந்திண்டு இருக்கு பார்......அதுமாதிரி நீயும் வாயைத் திற பார்க்கலாம்...... ...உம் ...ஆ... ஆ

ஏன் கேட்கப் போகிறீர்கள்? அவர்கள் கேட்கும்போதெல்லாம் அவன் பணத்தைக் கொடுத்து விடுவான். தன் 'தொழில்' எப்படியோ, தன் மகனையாவது படிக்க வைத்துவிட வேண்டுமென்ற பேராசையில்தான் மகனைப் பள்ளிக்கூடத்தில் போட்டான் அவன். இல்லையென்றால் அவன் மகன் இந்நேரம் ஒரு மூட்டை தூக்கியாகவோ, பூட்பாலிஷ் காரனாகவோ எதுவோ ஒரு 'தொழிலில்' ஈடுபட்டிருப்பான்.

முத்தன் அப்படி அவனை விட்டுவிடவில்லை. பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டான். கந்தப்பனும் படிப்பில் 'சுழி'யாக இல்லாமல் சூட்டிகையாக இருந்தான். வருடம் தவறாமல் பாஸ் செய்து கொண்டே வந்தான். இந்த வருடம் ஏழாம் வகுப்புக்கு வந்து விட்டான். தன் கனவு கொஞ்சம் கொஞ்சமாகப் பலித்து வருவதாக முத்தன் நம்பினான். அந்த நம்பிக்கையே அவன் மனத்தில் மகிழ்ச்சியை நிறைத்தது. மகன் ஏழாவது பாஸ் செய்து விட்டதைக் காண அவனுக்கு அளவில்லாத பெருமை. அந்தப் பெருமையில், மகிழ்ச்சியில் கலக்கத்தை உண்டாக்கிவிட்டான் கந்தப்பன்.

''அப்பா! நாளைக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டியாகணும். இங்கிலீஷ் பாடம் ஆரம்பிச்சுட்டாங்க. புத்தகம் வாங்காமல் கிளாசுக்கு வந்தால் வெளியே நிக்க வைச்சிடுவேன்னு வாத்தியார் சொல்லி விட்டார். நாளைக்கே இருபது ரூபா கொடுத்தால்தான் 'ஸ்கூல் பீஸ்' இங்கிலீஷ் 'புக்'. அப்படியே இரண்டு 'பௌண்டு' 'நோட்' எல்லாம் வாங்க முடியும். என்னப்பா, தர்றியா?'' என்று தன் தந்தையின் கன்னத்தைத் தடவிக் கேட்டான் கந்தப்பன். அவன் கேட்டு இதுவரை முத்தன் எதையும் மறுத்ததில்லை. கந்தப்பன் கேட்டவுடன் ''ஏண்டா, எவ்வளவு பணம் வேண்டும்?'' என்று கேட்டுக் கொடுத்து விடுவான். ஆனால் இன்று அவன் கையில் காசில்லை. 'தொழில்' ரொம்பவும் 'டல்'லடித்திருந்தது. பீடிக்கும் சிங்கிள் டீக்கும் வழியில்லாமல் ரெண்டு நாட்களாகத் திண்டாடிக் கொண்டிருந்தான். அதை மகனிடம் சொல்ல அவன் விரும்பவில்லை. ஏதோ துணிச்சலில், ''ஏண்டா இருபது போதுமாடா?'' என்று கேட்டுத் தன் மகனை மிக அன்போடு பார்த்தான்.

''ஓ! போதும்பா!'' கந்தப்பன் தலையைப் பலமாக ஆட்டினான்.

'நாளைக்குத்தானே கட்டணும்?'' என்று கேட்டான் முத்தன்.

''ஆமாம்பா!''

''சரி, மத்தியானம் தர்றேன்'' என்று சொல்லி விட்டு வெளியே வந்து விட்டான் முத்தன். பணம் சம்பாதிக்கத்தான் அவன் அந்தப் பள்ளிக்கூடத்தருகே நின்று கொண்டிருந்தான்.

சீ'டென்று காலை உதறினான் முத்தன்.

தரையில் ஊர்ந்த கட்டெறும்புதான் அவன் காலை இழுக்கப் பார்த்து, வராமல் போகவே, சும்மா போவதா என்று ஒரு கடி கடித்துவிட்டு நகரப் பார்த்தது; அதைத் தேய்த்து நசுக்கினான் முத்தன். அப்போதுதான் அந்தப் பையன் அவன் கண்களில் பட்டான்.


சிவந்த அழகிய முகத்தில் பால் வடிந்து கொண்டிருந்தது. பன்னிரண்டு வயதிருக்கும். அப்பாவித்தனமாக இப்படியும் அப்படியுமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். சம்பளம் கட்ட வந்தவன் கூட்டத்தைப் பார்த்து மயங்கி மருண்டு நின்று கொண்டிருந்தான்; காற்சட்டைப் பையில் பணம் வைத்திருக்கிறான் என்பதை, அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்த கை சொல்லியது.

முத்தன் கறுகறுப்படைந்தான்.

தரையில் காலை ஒரு தேய் தேய்த்து விட்டு, அந்தப் பையனருகே சென்றான்:

''என்ன தம்பி, ஏன் அப்படிப் பார்த்துக்கிட்டிருக்கே?'' என்று மெதுவாக அன்புடன் அவனைக் கேட்டான்.

''சம்பளம் கட்ட வந்தேன். கூட்டமாக இருக்கு!'' என்று பையன் மெதுவாகப் பதில் சொன்னான்.



துதியினால் தேவர்களும் மகிழ்கிறார்கள்!
கோயிலிலும் வீட்டிலும் நீங்கள் பக்தியுடன் பாடுவதற்குரிய அழகிய ஸ்தோத்திரங்கள். விஷ்ணு, சிவன், அம்பிகை முதலிய பல தெய்வங்களைப் பற்றிய அர்ச்சனைகள். தேவ நாகரத்திலும் தமிழிலும் ஸ்லோகங்கள்; தமிழ் அர்த்தத்துடன்.
பக்தி ஸுதா
ஸ்ரீ என். அனந்தராம அய்யர் தொகுத்தது
250 பக்கங்கள் விலை ரூ. 4/- தபால் செலவு தனி
கலைமகள் காரியாலயம், சென்னை-4.

மிக

வேகமாகச் செல்வது
விசாலமானது
நேர்த்தியானது

அடக்கமும் அமைதியும் கொண்ட 1489 c.c., O.H.V. என்ஜினின் போக்கில் எழும் சக்தி அம்பாஸடரை 18 விநாடிகளுக்குள் மணிக்கு 50 மைல் வேகத்திற்கு உயர்த்தி ஜெட் விமானத்தில் பறப்பது போன்ற வேகத்துடன், ஆனால் குறைந்த பெட்ரோல் செலவில், வெகு அமைதியாகப் பிரயாணம் செய்ய இயக்குவிக்கிறது.

ஆடம்பர அலங்காரம் நிறைந்தது. ஆறுபேர் சுகமாக உட்காரக் கூடியது. அம்பாஸடரில் ஒரு முழு குடும்பத்துக்குத் தாராளமான இட வசதியும் சாமான்களை எடுத்துச் செல்ல விசாலமான லக்கேஜ் காரியரும் உள்ளன.

நவநாகரீக மோஸ்தரில் அமைந்தது. காற்று தவழ்ந்து செல்லும் வடிவமுள்ளது. முன்பக்கம் மூடி முதல் பின்புறம் உயர்ந்து அமைந்துள்ள பாதுகாப்புத் தடுப்புவரை கண்ணைக் கவரும் நேர்த்தியுடன் தோற்றமளிப்பது. அழகுக்கு ஏற்ற சௌகரியங்களும், அமைதிக்கேற்ற உழைப்பும் இணைந்துள்ளது.



ஹிந்துஸ்தான்

அம்பாஸடர்

ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிடெட், கல்கத்தா-1

கீழ்க்கண்ட இடங்களில் டீலர்கள் உள்ளனர்

ஆக்ரா, அம்பாலா கன்ட்டோன்மெண்ட், ஆஜ்மீர், அஹமதாபாத், அகமத் நகர், அலகாபாத், பரோடா, பெங்களூர், பிலாய், பெர்ஹாம்பூர், பம்பாய், பரேய்லி, கல்கத்தா, கட்டாக், கோயமுத்தூர், கொழும்பு, திப்ருகார், தும்கா, தன்பாத், குவாலியர், கௌஹாத்தி, கோரக்பூர், இம்பால், இந்தூர், ஜெய்பூர், ஜபல்பூர், ஜோத்பூர், ஜல்கான், ஜோர்ஹத், ஜம்ஷெட்பூர், ஜலந்தர் சிட்டி, கான்பூர், கோல்ஹாபூர், கர்நூல், லக்னோ, சென்னை, மதுரை, மங்களூர், மீரத், நாகபூர், புது தில்லி, நேபாளம், பட்டியாலா, பாட்னா, பூனா, பாண்டிச்சேரி, பாளையங்கோட்டை, ராஜ்கோட், ராஞ்சி, சம்பல்பூர், சிலிகுரி, ஷில்லாங், செகந்திராபாத், சில்சார், ஸ்ரீநகர், சூரத், தானா, தேஜ்பூர், திருச்சிராப்பள்ளி, திருவனந்தபுரம், வாரணாசி கன்டோன்மெண்ட், விஜயவாடா, விஜயநகரம்

"இதுக்கா இப்படி மயங்கி நின்னுக்கிட்டிருக்கே? கொண்டா, நான் கட்டிட்டு வர்றேன். எந்தக் கிளாஸிலே படிக்கிறே?" பையனின் முதுகைத் தடவியபடியே கேட்டான் முத்தன்.

பையன் பயந்து பின் வாங்கினன். "வேண்டாம் வேண்டாம்; நானே கட்டிடறேன்!" என்றான்.

"என்ன தம்பி, அப்படிப் பயப்படறே? இங்கே நீ வர்றதுக்கு முந்திக் கூட நான் நாலு பசங்களுக்குப் பணம் கட்டிட்டு வந்தேன். பணத்தை எடுத்துக்கிட்டுப் போயிடுவேன்னு பயப்படறியா? சே! சே! அது மாதிரி நான் செய்ய மாட்டேன். உனக்கு உதவி செய்யத்தான் வந்தேன்!" சொற்களில் தேன் வடிந்தது. பையன் மயங்கிப் போய் விட்டான்.

"சரி, அப்படீன்னு இந்தா. கட்டிட்டு வா!" என்று பையிலிருந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை முத்தனின் கையில் எடுத்துக் கொடுத்தான் அந்தப் பையன்.

"ஏன், தம்பி, பேரு, கிளாஸ் எல்லாம் என்ன?" மிகுந்த அக்கறையுடன் முத்தன் விசாரித்தான்.

"கே. சந்தர். செகண்ட் பாரம்; 'ஏ' செக்ஷன்!"

"சரி, இங்கேயே இரு. இதோ கட்டிட்டு வர்றேன்."

பணத்தை எடுத்துக் கொண்டு விர்ரென்று கவுண்ட்டரருகே சென்றான் முத்தன். பையனின் நம்பிக்கையை மேலும் மேலும் அதிகப்படுத்த, கூட்டத்திலிருந்து கையை மட்டும் உயர்த்தி, "அங்கேயே இரு!" என்று சைகை மூலம் காட்டினான் முத்தன். பையன் நம்பி, மரத்தடியில் போடப்பட்டிருந்த பெஞ்சியில் உட்கார்ந்தான். பக்கத்தில் நாலைந்து பிள்ளைகளும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். ஒருவன் கையில் புதுப் புத்தகம் மின்னியது. ஆசையோடு அதை வாங்கி அவன் புரட்டினான். முத்தனும் அதைப் பார்த்தான். அவனுக்குச் சரியான நேரம் வாய்த்து விட்டது. கும்பலோடு கும்பலாக நழுவிவிட்டான்.



"இரண்டு மூன்று கல்யாணங்களுக்குப் போய் வந்தேன் ஒன்னுலேயாச்சும் செருப்பு வைக்கச் சரியான ஏற்பாடு செய்யவில்லை"

"ஏன்? என்ன ஆச்சு?"

"முதல் கல்யாணத்தில் நான் மாட்டி வந்த செருப்பு இரண்டாவது கல்யாணத்தில் திருட்டுப் போய் விட்டது."

அதே வேகத்தில் வீடு சென்று. "இந்தாடா கந்தா, இருபது ரூபாய். சம்பளம் கட்டிட்டு இங்கிலீசு புத்தகமும் வாங்கிக்கிட்டு மீதியிருந்தால் ஏதாவது வாங்கிச் சாப்பிடு!" என்று கந்தப்பனின் கைகளில் இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களைத் திணித்தான் முத்தன்.

மறு நாள் மாலை வீட்டினுள் நுழைந்தான் முத்தன். வீட்டின் மூலையில் கண்கள் சிவந்து, அழுதழுது கன்னங்கள் வீங்கி, சோர்ந்து மூலையில் கிடந்தான் கந்தப்பன். பதறிப் போய் அவனைத் தூக்கி நிறுத்தினான் முத்தன்.

"ஏண்டி, ஏன் பையன் இப்படிக் கிடக்கிறான்?" என்று மனைவியைப் பார்த்து முத்தன் கத்தினான்.

"நல்ல மகன். துப்புக் கெட்ட பீடை. படிக்கிறானும், படிக்கிறான்!" திட்டிக் கொண்டு, நாக்கைப் பல்லால் கடித்துக் கொண்டு கந்தப்பன் முதுகில் ஓர் அறை அறைந்தாள் அவன் மனைவி.

"ஏண்டி, பிசாசு மாதிரி அவனைச் சாத்தறே? என்ன நடந்தது? சொல்லித் தொலையேன் அதை!" என்று முத்தன் சீறினான்.

"உங்க துப்புக் கெட்ட மகன் செய்ததை நான் வேறே சொல்லணுமா? அவனையே கேளுங்க. பள்ளிக்கூடச் சம்பளம் கட்ட நீங்க கொடுத்த இருபது ரூபாயை எடுத்துக்கிட்டுப் போனானும். பணம் கட்டற இடத்திலே நிறையக் கூட்டம் இருந்திச்சாம். இவன் தயங்கி நின்னுக்கிட்டிருந்தானும். அப்போது எவனோ ஒருத்தன் வந்து, 'ஏண்டா, தம்பி, சம்பளம் கட்டணுமா? நான் கட்டிட்டு வர்றேன். நீ இங்கேயே இரு' அப்படீன்னு சொல்லிப் பணத்தை வாங்கிட்டுப் போனானும். போனவன் ஏன் திரும்பறான்? அடிச்சுக்கிட்டுப் போவத்தானே வந்திருக்கான். இந்தச் சோணகிரி தலையை நல்லா மொட்டையடிச்சுட்டுப் போயிட்டான். இருப்பதிக் குரங்கு இஞ்சி தின்ன மாதிரி இங்கே வந்து முழிக்கிறான். அந்தப் பணத்தைச் சம்பாதிக்க நீங்க என்ன கஷ்டப்பட்டீங்க

களோ? மூதேவி! தொலைச்சுட்டு வந்து நிக்குது....!''

சொல்லிய ஆத்திரம் தீரக் கந்தப்பனின் முதுகில் மேலும் ஓர் அறை வைக்கப் போனான் அவன். முத்தன் தடுத்துவிட்டு, சாவதானமாகச் சொன்னான்:

''போனாப் போகுது; விடு. வந்த வழியே அந்தப் பணம் போயிடுச்சு. அதுக்கு ஏன்டி இவனைக் கொல்றே? நாளைக்கே அதைச் சம்பாதிச்சுட்டாப் போவுது. நீ போடி உள்ளே!''

தன் மகனின் விழியோரத்தில் தேங்கிக் கிடந்த கண்ணீரைத் துடைத்தான் முத்தன். அதோடு, ''பணம் போனால் போவுது. இதற்காக அழலாமா?'' என்று கூறி அவனைச் சமாதானப்படுத்தவும் செய்தான். ஆனால் அவன் உள்ளத்தில் தேள் கொட்டினாற் போலிருந்தது. 'நாம் கையாண்ட முறையையே இன்னொருவன் நம் பையனிடமும் கையாண்டு ஏமாற்றி விட்டானே! நம் பையன் இப்பொழுது தன் தாயிடம் பட்டிருக்கும் அடியை அவனும் பெற்றிருப்பான் அல்லவா? சிறு குழந்தையிடம் நம் கைவரிசையைக் காட்டி நோகச் செய்து விட்டோமே!' கள்ளம் மிகுந்த அவன் உள்ளத்தில் நல்லதனம் தலை காட்டியது.

கந்தப்பனோ மேலும் விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டான்.


தன்னிடம் அடி வாங்கப் பயந்து கந்தப்பன் அப்படி அழுகிறானோ என்று முத்தன் நினைத்தான். அது எவ்வளவு தவறான நினைப்பு என்று அவனுக்குத் தெரியாது.

அப்பன் கொடுத்த பணத்தை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டு 'பீஸ்' கட்டவும் புத்தகம் வாங்கவும் புறப்பட்ட கந்தப்பன் முதல் நாளே வழியில் பணத்தைப் பறி கொடுத்த ஒரு பையன் பரிதாபமாக அழுது கொண்டு நிற்பதைப் பார்த்து விஷயத்தை விசாரித்தான். அந்தப் பையன் சொன்ன அடையாளங்களைக் கொண்டு அவனை ஏமாற்றிய மனிதன் தன் தந்தைதான் என்பதையும், தன் பையில் இருப்பது அந்தப் பையனின் பணம்தான் என்பதையும் உணர்ந்து, அதை அவனிடமே கொடுத்து விட்டு வந்து அப்பன் அந்தப் பையனை ஏமாற்றியது போல் தன்னையும் ஒருவன் ஏமாற்றி விட்டதாகப் பொய் சொல்லியிருக்கிறான். இது முத்தனுக்குத் தெரியாது. எப்படித் தெரியும்?

அதை அறியாமல்தான் அவன் கந்தப்பனின் முதுகை அன்புடன் தடவிக் கொண்டிருந்தான். ஆனால் கந்தப்பனுக்கோ அது சூட்டுக் கோலால் தடவுவது போல் இருந்தது.

யாரோ ஒருவருக்கு

"மரியாதை என்ற பதத்துக்கு என்ன பொருள்?" என் பக்கத்தில் நகர பஸ் ஸ்டாண்டு ஒன்றில் நின்று கொண்டிருந்த நண்பரின் திடீர்க் கேள்வி இது. பல நிமிடங்களாக நாங்கள் மௌனமாகவே எங்கள் வழி போகும் சர்க்கார் பஸ்ஸை எதிர்நோக்கி வரும் வழி நோக்கி விழி வைத்து நின்று கொண்டிருந்தோம். அவர் கேள்வி எழுந்ததின் சூழ்நிலை எனக்குச் சட்டென்றுபுரியவில்லை. ஆனாலும் "அந்தப் பதத்துக்கு இது தான் பொருள் என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாது! அது இடத்தைப் பொறுத்தது; கையாளுபவர்களைப் பொறுத்தது. அவர்கள் முன்னால் நிற்பவர்களையும் பொறுத்தது. தந்தைக்கு மகன் மரியாதை காண்பிப்பது ஒரு ரகம். மாணவன் உபாத்தியாயருக்கு மரியாதை காண்பிப்பது ஒரு ரகம். வேலைக்காரன் யஜமானுக்கு மரியாதை காட்டுவது ஒரு ரகம். சுருக்கமாக மரியாதை என்பது ஒரு ரிலேடிவ் டெர்ம்" என்றேன்.



"அப்படி வாரும்! இந்தப் பஸ் கண்டக்டர்கள் பொதுஜனங்களோட ஊழியர்கள்! வேலைக்காரர்கள். அவர்கள் பொதுஜனமாகிய எஜமானருக்குக் கடமைக்காவது மரியாதை காண்பிக்க வேண்டுமல்லவா?"

நான் 'ஆம்' என்பதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டினேன்.

"எங்கே எப்படிக் காண்பிக்கிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணம் சொல்ல முடியுமா?" என்றார் திடீரென்று. ஹிரண்யன் பிரஹலாதனைப் பார்த்து, 'உன்னுடைய நாராயணன் எங்கிருக்கிறான்?' என்று கேட்டது போலிருந்தது அவர் கேள்வி. பிரஹலாதனுக்குப் பதில் சொல்வது சுலபமாக இருந்தது. அவனுடைய நாராயணன் எங்கிருந்து வியாபித்திருந்தார். ஆனால் எனக்கு அது அவ்வளவு சுலபமானதாகத் தோன்றவில்லை.

நண்பருடைய கேள்வி நியாயமானது தான். "உள்ளே போ!" "பச்சைச் சொக்கா முன்னாலே போ" "எட்டணுவுக்குச் சில்லறையில்லே கீழே எறங்கிடு!" என்ற கண்டக்டரின் உபசார மொழிகள் எந்த வயதினரை நோக்கித் தான் பாய்கின்றன என்று சொல்ல முடியாது. நூற்றுக்கணக்கான ஆடுகளைக் கூட்டமாக இழுத்துச் செல்லும் அதன் சொந்தக்காரன்கூட, அவைகளின் மீது ஓரளவு அன்பு செலுத்துகிறான். இரக்கம் காண்பிக்கிறான். ஆனால் சென்னை நகர சர்க்கார் டிரான்ஸ்போர்ட் கண்டக்டர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றைன்பது பேர், எல்லாப் பிரயாணிகளையும் ஒரே மாதிரி ஜடப் பொருள்களாக மதிக்கும் பரம ஞானிகளாக விளங்குகிறார்கள். எப்படியோ முண்டியடித்துக் கொண்டு உள்ளே ஏறித் தொலைப்பவர்கள் கிடைத்த இடத்துக்குத்தான் மதிப்புக் கொடுக்கிறார்களே தவிர, மரியாதையைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. அவரவர் அவசரம் அவரவருக்கு.

இப்போதெல்லாம் சில வழிகளில் "டபிள் விசில் எக்ஸ்பர்ட்" கண்டக்டர்கள் சேவை செய்கிறார்கள். வண்டியிலே பத்துப் பேருக்கு இடம் இருந்தாலும் இரண்டு தடவைகள் 'விசில்' ஊதி விட்டு ஸ்டாப்பில் நிற்காமல் ஓடுவதில் அவர்களுக்குத் தனி ஆனந்தம். அந்த ஸ்டாப்பில் இறங்க வேண்டியவர்களைச் சில கஜ தூரம் தள்ளிப் போய் நின்று கீழே தள்ளிவிட்டு, அந்த இடத்தில் ஏற வேண்டிய ஆட்களை ஏற்றிக் கொண்டு போகாமல் ஓடுவது அவர்களுக்குப் பெருமையைக் கொடுக்கிறது போலும்! முன்பு ஒரு சமயம், பஸ் ஸ்டாப்புகளில், பஸ்கள் இங்குதான் நிற்க வேண்டும் என்று குறிக்க நீண்ட சதுர வடிவில் ஒரு மாக்கோலம் — மன்னிக்கவும், பெயிண்ட் கோலம்—போட்டிருந்தார்கள். காலம் மாறி விட்டது; கோலம் அழிந்து விட்டது.

இன்னும் சில 'ஹிட்லர்' கோத்திர கண்டக்டர்கள் இருக்கிறார்கள். 'முன் பக்கம் நாலு பிரயாணிகள் இறங்கினால் பின் பக்கம் ஒரு ஆள்தான் ஏறலாம்' என்று வழியை மறிக்கும் இனத்தைச் சேர்ந்தவர்கள். சர்க்கார் இலாக்காக்


களில் ஆள் சேர்க்க விதிதாசாரம் இருப்பதுபோல் பஸ்ஸில் ஏறவும் ஏதோவிகிதாசாரத்தை நிர்ணயித்திருக்கிறார்களோ என்று கூடச் சமயத்தில் தோன்றும்.

பத்து நிமிடங்களுக்கு ஒரு தடவை ஓடுவதாகச் சொல்லப்படும் சில வழிகள் பஸ் அறுபது நிமிடங்களுக்குக் கூட ஒரு தடவை வராது. எழுபதாவது நிமிடத்தில் ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டு மூன்று பஸ்கள் வந்து நிற்கும். முதல் பஸ் பிதுங்கி வழிகிறதே என்று இரண்டாவது பஸ்ஸுக்கு ஓடினால் அப்போது தான் அந்த இரண்டாவது 'காலி' பஸ் ஏதோ கொள்ளை போகும் அவசரத்தில் ஓர் உறுமல் உறுமிவிட்டு முதல் பஸ்ஸைத் தாண்டிக் கொண்டு முன்னால் ஓடும். பிரயாணிகள் நொண்டியடித்துக் களித்தட்டு. பாண்டி ஆடுவது போல் அங்கும் இங்கும் போனதுதான் மிச்சம். ''என்ன ஸ்வாமி! என் கேள்விக்குப் பதில் இல்லையே!'' என்று நினைவூட்டி என் சிந்தனையைத் தடை செய்தார் நண்பர்.

''நீர் பஸ் ஸ்டாப்பில் நிற்கும் போது இரட்டை விசில் கொடுத்து உம்மைக் கவனிக்காமல் போகிறாரே, அந்தக் கண்டக்டர் ஓரளவு உமக்கு அதிக மரியாதை கொடுப்பவர் என்றே வைத்துக் கொள்ளலாம். ஏனென்றால் அவர் நம்மை நெருங்காமல் இருப்பது மரியாதையைக் காப்பாற்றுவதற்காகவும் இருக்கலாம்'' என்றேன்.

நண்பர் என் பேச்சைக் கேட்கவில்லை. எங்களைத் தாண்டிக் கொண்டு நூறு கஜதூரம் போய் நின்று இரண்டு நபர்களைக் கீழே உதிர்த்த பஸ்ஸைப் பார்த்துப் பெருமூச்சு விட்டார். அந்தப் பஸ்ஸைத் துரத்தி ஓடிய சில நபர்களைப் பார்த்து நான் சிரித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் ஒரு 'தம்' பிடித்து ஓடி பஸ் முதுகையாவது பிடிக்க முடியுமா? அப்படியே தொட்டாலும்கூட, கண்டக்டர் அவர்களை உள்ளே அனுமதித்து விடுவாரா என்ன? ''இது ஸ்டாப் இல்லே! ஏறாதே!'' என்பான் ஏக வசனத்தில். ''ஆள் இறங்க மாத்திரம் ஸ்டாப்போ?'' என்று யாராவது துணிந்து கேட்டு விட்டால் ஒரு வெற்றி முறைப்பு முறைத்து விட்டு நம் காது செவிடாகும்படி விசில் கொடுப்பார்.

''நகரத்தில் என்னவோ ஜனத்தொகை பெருகித்தான் இருக்கிறது. சர்க்கார் பஸ்களை உபயோகிப்போரும் அதிகமாகிக் கொண்டேதான் இருக்கிறார்கள். சில கண்டக்டர்களுக்கு ஸ்டாப்புகளில் கும்பலைப் பார்த்தால் வயிற்று வலி உணர்ச்சி தோன்றுகிறது. ஒரு பஸ் ஒரு தடவை மற்றொரு மூலைக்குப் போய் வர நேரம் குறிப்பிட்டிருக்கிறது என்ற



ரயிலில் வந்த அறிஞர் ஒருவரை வரவேற்கப் பத்திரிகைக்காரர் ஒருவர் போயிருந்தார்

"என் பெட்டி படுக்கையைக் கீழே இறக்கி வைக்கிறீர்களா?" என்று கேட்டார் அறிஞர்

"மன்னிக்கணும்! நான் வெறும் போர்ட்டர் இல்லே...ரிபோர்ட்டர்" என்றார் அந்தப் பத்திரிகை நிருபர்!

சாக்கில், சில பஸ்கள் காலியாகவே நிற்காமல் ஓடுகின்றன. 'ஜனங்களுக்காகத் தான் பஸ்கள்' என்ற உணர்ச்சி நிர்வாகத்துக்குத் தோன்ற வேண்டும். பஸ் கண்டக்டர்களைத் தேர்ந்தெடுக்குமுன் அவர்களுக்கு முக மலர்ச்சியுடன் மரியாதையுடன் சேவை செய்யக் கண்டிப்பாகப் பயிற்சி அளிக்க வேண்டும்'' என்றேன்.

நண்பர் ஓடுகின்ற டாக்ஸியைப் பார்த்துக் கை தட்டினார்.

''ஐயா! உம்முடைய யோசனைகள் நிறைவேறும் வரை நான் காரியாலயத்துக்கு நடந்தே போக வேண்டியிருக்கும். இன்றைக்கு மாத்திரம் டாக்ஸியில் போகிறேன். பத்துப் பைசாவுக்குப் பதில் பத்து அணுக்கள் நஷ்டம். காத்திருந்த நேரம் நஷ்டம்'' என்று கூறி விட்டுக் கிளம்பினார்.

பஸ்ஸும் கிடைக்காமல் டாக்ஸியில் போக வசதியும் இல்லாமல் இடைவழி ஸ்டாப்புகளில் திண்டாடுபவர்கள் எத்தனை ஆயிரம் பேரோ? என்றைக்குத் தான் அவர்களுக்கு விமோசனமோ?

யாரோ எழுதியது

வீடா, மாடா?

"அப்புறம் உம்முடைய 'பிளாட்' விஷயம் என்ன ஆயிற்று....?"

"இன்னும் சரியாக ஒன்றும் அமையவில்லையே!"

"எவன் எவனோ எவ்வளவு சுலபமாகக் கண்டுபிடித்து விடுகிறான்கள்! உமக்கு......"

"எதற்கும் அனுபவம் வேண்டுமே!"

"தாம்பரம் வரை போய்ப் பார்த்து விட்டு வரலாமா?"

"அவ்வளவு தூரத்தில் எதற்கு? இன்னும் கொஞ்சம் கிட்டத்திலேயே பார்ப்போம்."

"அங்கே அவ்வளவு ஜன நெரிசல் இல்லை. நாலு பேரைச் சுலபமாகப் பார்க்கலாம்."

"எனக்கென்னவோ ஜன நெரிசல் பழகிப் போச்சு."

"நல்ல ஆளையா நீர்! ஒவ்வொருத்தன் கும்பலைவிட்டு ஓடப் பார்க்கிறான்."

"எனக்கு அவ்வளவு வேதாந்த ஞானம் வரவில்லையே!"

"ஆமாம், ஆமாம்! நீர் ஞானியாகி விட்டால் அப்புறம் உமக்குப் பிளாட்டும் மண்ணாங்கட்டியும் எதற்கு?"

"அயனாவரம் போய்ப் பார்க்கலாம் என்று உத்தேசம்....."

"அங்கே சுகமில்லை. உம்ம சிநேகிதன் இப்போது அகப்பட மாட்டான்."

"அதுவும் வாஸ்தவம்தான்....! அடேடே! அங்கே என்னையா கும்பல்? நான் கவனிக்கவில்லையே?"

"சிறிய அளவிலே கலாட்டா. பால்கார மதுரை சண்டை போடறான்!"

"பாக்கி வசூல் தகராறு?"

"பாக்கி வசூல் தகராறு இல்லே! பால் வசூலிலேயே தகராறு!"

"இதென்னய்யா அதிசயம்! பால்காரன் பணம் வசூல் பண்ணச் சத்தம் போடுவானா? பால் வசூல் பண்ணச் சத்தம் போடுவானா?"

"அதுதான் அங்கே புதுமை! வாசலில் மாட்டைக் கொண்டு வந்து கட்டிவிட்டு உள்ளே போயிருக்கிறான் மதுரை. உள்ளே போய் ஏதோ அசதியில் தூங்கிப் போய் விட்டான். வாசலில் கட்டியிருந்த மாட்டை எவனோ கறந்து கொண்டு போய் விட்டான்."

"பேஷ்! பேஷ்! மதுரை சாவகாசமாக வந்து பார்த்தானாக்கும்?"

"பக்கத்து வீட்டுக் குப்பண்ணனோடே குஸ்திக்குப் போய் அடிதடி வரை வந்துடுத்து!"

"குப்பண்ணன் போக்கிரியாச்சே! கறந்தாலும் கறந்திருப்பான்."

"அதுதான் இல்லே! மதுரையோட மகனே, பாலைக் கறந்து ஓட்டலில் கொண்டு போய் விற்று விட்டுப் பயாஸ்கோப் பார்க்க ஓடியிருக்கிறான்!"

"பலே! பலே!... இந்தாய்யா! நான் மாம்பலமும் போகலே! அயனாவரமும் போகலே!"

"அப்புறம் பிளாட் தேடற விஷயம்?"

"அதுதான் இந்தத் தெருவிலேயே கிடைத்து விட்டதே! இந்த மாட்டுச் சண்டையை வைத்து அற்புதமான சிறுகதை எழுதிவிட மாட்டேனா? ஜனநெரிசல் தான் எனக்குப் பிடிக்கும் என்று சொன்னேனா இல்லையா?"

"நல்ல ஆளையா? காலணா இல்லாமல் பிளாட் வாங்கற ஆசாமி நீர்தான்!"

[எழுத்தாளர் ஏகாம்பரம் வேறு எப்படிப் பிளாட் வாங்க முடியும்?] - கோன்




Parle's Gluco BISCUITS
OVEN FRESH
மேலானது !

சிறுவர் விருந்து

தயாரிப்பு: வாண்டுமாமா

இதயத்தைப் பற்றி

மனித உடலில் இதயம் எத்தனை அவசியமானது என்பது உனக்குத் தெரியும். இதயத்தைப்பற்றி உனக்குத் தெரியாத சில விஷயங்களைச் சொல்லுகிறேன் கேள்: நான்கு அறைகளும் நான்கு கதவுகளும் அரைப் பவுண்டு நிறையும் கொண்ட பழுதுபடாத ஒரு யந்திரம்—உலகிலேயே அதிசயமான ஒரு யந்திரம்—இந்த இதயம். 12,000 மைல்கள் நீளமுள்ள வாய்க்கால் வழியாக இந்த யந்திரத்தின் மூலம் வருஷத்தில் 650,000 காலன் ரத்தம் 'பம்ப்' செய்யப்படுகிறது. அதாவது 8000 காலன் பிடிக்கும் 81 டாங்கிகளில் இதை நிரப்பலாம். ஒரு மனிதனின் வாழ்நாளில், ஒருவித பழுதும் ஏற்படாமல் 2,500,000,000 தடவைகள் அடித்துக் கொள்கிறது இந்த இதயம்.

65 டன் எடையுள்ள கட்டுமரத்தைத் தரையிலிருந்து ஒரு அடி தூக்குவதற்கு வேண்டிய சக்தியைப் பன்னிரண்டு மணி நேரத்தில் இதயம் உற்பத்தி செய்கிறது.

இதயத் துடிப்பு நின்றால் இறந்து விட்டதாக அர்த்தம் இல்லையா? ஆனால் ஒரு மனிதனின் வாழ்நாளில் ஆறில் ஒரு பாகம் இதயம் சலனமற்று அப்படியே நிற்கிறது! புரியவில்லையல்லவா? ஒரு மனிதன் அறுபது வயது வாழ்கிறான் என்றால் அவன் இதயம் பத்து வருடங்கள் வேலை செய்வதே இல்லை. அதற்கு மட்டும் ஓய்வு வேண்டாமா? இன்னமும் உனக்கு என் வார்த்தைகளில் நம்பிக்கை ஏற்படவில்லை இல்லையா? ரகசியம் இதுதான். இதயம் ஒரு துடிப்புக்கும் மறு துடிப்புக்கும் இடையே ஒரு விநாடியில் ஆறில் ஒரு பங்கு நேரம் ஓய்வு எடுத்துக் கொள்கிறது. இது விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்ட உண்மை. இப்போது புரிகிறதா?

வருமுன் காப்போன்

சாதாரணமாக நெற்செடி ஐந்து அடி உயரத்துக்கு மேல் வளருவதில்லை. ஆனால் நமது இந்தியாவில் உள்ள சம்பரான் ஜில்லாவில் நெற்செடிகள் மிகுந்த புத்தி கூர்மையும் வருங்காலத்தை அறியும் ஆற்றலும் படைத்தவைகளாக இருக்கின்றன. சம்பரான், அடிக்கடி திமர் வெள்ளப் பெருக்கால் அவதியுறும் ஜில்லா. இருபது அடி வரைகூட வெள்ள நீரின் மட்டம் உயர்ந்து விடுவது உண்டு. இப்படிப் பட்ட இடத்தில் வளரும் நெல், தன் இனத்தாரைப் போல ஐந்து அடி வளர்ந்தால் வெள்ள நீரில் மூழ்கி அழுகிப் போக வேண்டியதுதானே? ஆகவே இங்கு வாழும் நெற்செடிகள் வரப் போகும் வெள்ளப் பெருக்கின் மட்டத்தைவிடக் கொஞ்சம் அதிக உயரமாக வளருகின்றன. வரப் போகும் வெள்ளப் பெருக்கை முன் கூட்டியே அறிந்து கொள்ளும் ஆற்றல் இவைகளுக்கு எப்படி ஏற்படுகிறது என்பது இன்னமும் யாருக்கும் புரியாத புதிராகவே இருந்து வருகிறது. இங்கு ஒரு வருஷம் இக்க வகை நெற்கதிர்கள் பதினாறு அடி உயரம் வளர்ந்தால் அந்த ஆண்டு வெள்ள நீரின் மட்டம் பதினைந்து அடிக்கு மேல் உயராது. இந்த நெற்செடி வளரும் உயரத்திலிருந்து வரப்போகும் வெள்ள அளவை ஊகித்துக் கொள்வது இந்த ஜில்லா வாசிகளின் வழக்கமாக இருந்து வருகிறது.

> குழந்தைகளே! அடுத்த இதழில் உங்களுக்கு ஒரு பரிசுத் திட்டம் வெளியாகிறது.

அது எப்படி?

''நான்கு ஸ்தானமுள்ள இலக்கம் ஒன்றை நான் எழுதுகிறேன். அதன் கீழே அதே போல உனக்குத் தோன்றிய வேறொரு எண்ணை நீ எழுது. அதற்குக் கீழே நான் ஓர் எண் எழுதுகிறேன். இப்படி மாற்றி மாற்றி நாம் ஐந்து எண்களை எழுதுவோம். நாம் எழுதப் போகும் ஐந்து எண்களின் கூட்டுத் தொகை என்னவாக இருக்குமென்று நான் என்னுடைய மந்திர சக்தியினால் முன் கூட்டியே அறிந்து ஒரு காகிதத்தில் எழுதி வைத்து விடுகிறேன்'' என்றான் ரமணி. அவன் நண்பர்கள் நகைத்தார்கள். அவன் மந்திர சக்தியைச் சோதிக்கத் தீர்மானித்தார்கள். ரமணி ஒரு காகிதத்தில் எதையோ எழுதி மடித்து வைத்தான். பிறகு முதல் இலக்கத்தை எழுதினான். — 1066 என்று. அவன் நண்பன் கிட்டு உடனே அதன்கீழே 3478 என்று எழுதினான். ரமணி அதன் கீழே 6521 என்று எழுதினான். அதை அடுத்துக் கிட்டு 7150 என்றும் ரமணி 2849 என்றும் எழுதினார்கள். இந்த ஐந்து வரிசை எண்ணையும் கிட்டு பரபரப்போடு கூட்டினான். விடை, 21,064 என்று வந்தது. உடனே ரமணி எழுதி மடித்து வைத்துள்ள காகிதத்தை எடுத்துப் பார்த்தான். அதிலும் 21,064 என்று எழுதப்பட்டிருந்தது. கிட்டுவின் வியப்புக்கு எல்லையே இல்லை.


விடை: 9999யை இரண்டால் பெருக்கிக் கொண்டு அத்துடன் முதலில் எழுதப்போகும் எண்ணையும் கூட்டிக் கொண்டால் கிடைக்கும் விடைதான் ஐந்து எண்களை எழுதிய பிறகு கூட்டினால் கிடைக்கும் விடை. அது தவிர கிட்டு எழுதும் எண்ணை அடுத்து ரமணி எழுதுகிறானே ஒரு எண் அதிலும் மர்மம் இருக்கிறது. 9999 லிருந்து கிட்டு எழுதிய எண்ணைக் கழித்து வரும் தொகை தான் அடுத்து ரமணி எழுதுவது.

ஒன்று முதல் பத்து

ஒன்றே தெய்வம் உலகத்தில்
உண்மைச் சாதி இரண்டாகும்
நன்றே காலம் மூன்றாகும்
நாற்கா லிக்கால் நான்காகும்.
உலகில் பெரியோர் ஐந்தாகும்
உற்ற சமயம் ஆறாகும்
நிலவும் வான வில்லினுக்கு
நிறைந்த வர்ணம் ஏழாகும்.
மண்ணில் திசைகள் எட்டுண்டு
மணிபோல் தான்யம் ஒன்பதுண்டு
பண்ணும் பசிதான் வந்ததெனில்
பறப்ப தெல்லாம் பத்தாகும்!

—நாகமுத்தையா





பொம்மை


பொம்மை நல்ல பொம்மை
பொழுது போக்கும் பொம்மை
அம்மா தந்த பொம்மை
அழகு மிக்க பொம்மை
கையைக் காலை ஆட்டும்
கண்ணை உருட்டிப் பார்க்கும்
பையப் பைய நடக்கும்
பம்பர மாகச் சுழலும்
மீசை உள்ள பொம்மை
ஓசை யோடு ஓடும்
ஆசை உள்ள பொம்மை
அசைந்து நடக்கும் பொம்மை
சாவி தந்தால் ஓடும்
ஜப்பான் நாட்டுப் பொம்மை
காவி வர்ணப் பொம்மை
கண்ணைக் கவரும் பொம்மை!

—பி. வி. கி

கோழிக் குடும்பம்

கொக்கரக் கொக்கரக் கோழி யொண்ணு
கூவிக் கூவி நின்னுச்சாம் — அந்தக்
கூச்சல் கேட்டு வந்த சேவல்,
கொண்டையைக் கொண்டையை ஆட்டுச்சாம்!
குஞ்சுகள் அஞ்சாறு, தாயை நோக்கிக்
குதிச்சுக் குதிச்சு வந்துச்சாம்—அவை
கூடி ஒண்ணுப்க் குப்பை மேட்டைக்
கிளறித் தள்ள ஓடுச்சாம்!
கொக்கரக் கொக்கரக் கோழிக் கூட்டம்
குப்பை மேட்டைக் கிளறுச்சாம்—அந்தக்
குப்பை மேட்டில் கிடைச்ச நெல்லைக்
கொறிச்சுக் கும்மாளம் போட்டுச்சாம்!


—இன்பவண்ணன்



காகிதமும் கத்திரிக்கோலும்—2.

மரமேறும் குரங்கு

நானாகக் கையையும் காலையும் இயக்கி மேலே ஏறும் குரங்கு செய்யும் விதத்தை உனக்குச் சொல்லித் தரப் போகிறேன். இந்தக் குரங்குப் பொம்மை மேலேயுள்ள சிறிய படத்தில் இருப்பதுபோல் தலை, கை, வாலோடு கூடிய உடல்; தனித்தனியாக இரண்டு கால்கள் ஆக மூன்று பாகங்கள் ஒன்றாக இணைந்து உருவானது. ஒரு கெட்டி அட்டையில் குரங்கின் பாகங்களை வரைந்து கொள். அல்லது 'டிரேஸ்' செய்து அட்டையில் காப்பி பண்ணிக் கொள். கத்திரிக்கோலால் சுத்தமாக வெட்டி எடுத்துக் கொள். கால் பகுதியில் மறக்காமல் இரண்டு வெட்டிக்கொள்ள வேண்டும். குரங்கின் கை விரல்களிடையில் பெரிய படத்தில் காட்டியுள்ளபடி ஒரு வெட்டு வாய் ஏற்படுத்திக் கொள். சிறிய படத்தில் காட்டியுள்ளபடி குரங்கின் இடுப்பிலும் காலிலும் சிறிய துவாரம் செய்து கொள். இனி உடலின் பக்கத்துக்கு ஒன்றாக இரண்டு கால்களையும் துவாரங்கள் பொருந்தும்படி வைத்துக் குண்டூசியையோ அல்லது செருப்புக் குச்சியையோ செருகி இணை. புத்தகங்களைச் சுற்றி வருமே ரப்பர் வளையம்—இழுத்தால் விரிந்து சுருங்கக் கூடியது அதில் ஒன்றை எடுத்துப் படத்தில் காட்டியுள்ளபடி கையையும் காலையும் சேர்த்து மாட்டி விடு. இனி ஒரு நீண்ட நூலை எடுத்துக் கொள். (பட்டு நூலாக இருந்தால் நல்லது) நூல் விரைப்பாக இருக்கக் கூடாது. துவளும் தன்மையதாக இருக்க வேண்டும். ஒரு முனையை ஏதாவது ஓர் உயரமான இடத்தில் கட்டித் தொங்க விடு. இப்போது நீ தயார் செய்துள்ள குரங்கைத் தொங்கும் கயிற்றின் கீழ்ப் பகுதியில் படத்தில் காட்டியுள்ளபடி விரலின் வெட்டு வாயில் நுழைத்துக் கால்களை ஒரு சுற்றுச் சுற்றி இணை. குரங்கு கயிற்றைப் பிடித்துத் தாவி ஏறுவதற்குத் தயாராகி விட்டது. இனி கயிற்றின் கீழ் முனையைப் பிடித்து இழு. குரங்கின் கால்கள் கீழே இழுக்கப்படுகிறது. அதே சமயம் குரங்கு சிறிது தூரம் நூலில் வழுக்கியபடியே மேலே ஏறும். உன் பிடியைத் தளர்த்து. குரங்குக் கையின் வெட்டு வாயில் அகப்பட்டுள்ள நூல் அதே இடத்தில் நகராமல் இருக்க ரப்பர் வளையத்தின் சுருங்கும் தன்மையினால் குரங்கின் கால்கள் மேலே இழுக்கப்படும். அடுத்த தடவை நீ கயிற்றை இழுக்கும்போது முதல் தடவையை விட மூன்று மடங்குத் தூரம் குரங்கு மேலே தாவி ஏறும். இப்படியே கயிற்றை இழுத்து விடுவதால் குரங்கு வெகு வேகமாக உச்சிக்கு ஏறிப் போகும். பார்க்க வியப்பாக இருக்கும். மேலே போன குரங்கை மெதுவாகக் கையால் பிடித்து நகர்த்திக் கொண்டு வந்து ஆரம்ப இடத்தில் வைத்து மறுபடியும் அதை ஏறும்படி செய்ய வேண்டியதுதான். செய்து பார்த்து அனுபவிக்க வேண்டிய குரங்கு விளையாட்டு இது.





ஒரு கும்பிடு

பி.ஆர்.எஸ்

, தீர்மானித்து விட்டேன், ஒரு சரித்திரத் தொடர்கதை எழுதி விடுவது என்று. தொடர்கதை முடியாது என்றால் ஒரு முழு நீளக்கதை. அதுவும் இல்லையென்றால் சரித்திரப் பின்னணியுடன் கூடிய ஒரு சிறு கதை. அதுவும் முடியவில்லை யென்றால்? சே! அது எப்படி முடியாமல் போகும்?

இப்படி எனக்குத் திடீரென்று சரித்திரத் தொடர்கதை எழுத வேண்டுமென்ற ஆசை ஏன் ஏற்பட்டது என்கிறீர்களா? ஆசிரியர் கல்கியின் சரித்திரக் கதைகளைப் படித்ததனால் வந்த வினை தான்! ஐந்து பாகங்கள் கொண்ட 'பொன்னியின் செல்வனை' நான்கு நாட்களில் படித்து முடித்து விட்ட பிறகு என்னால் சும்மா இருக்க முடியவில்லை. பாய்லர் போல மனம் கொதித்துக் கொண்டிருந்தது. நல்ல சக்திக்கும், தீய சக்திக்கும் நடைபெற்ற போராட்டத்தை மனிதன் என்னமாய் எழுதிவிட்டார்! கடைசிப் பாகத்தில் கடைசிச் சில அத்தியாயங்கள் விடப்பட்டு 'பைண்ட்' செய்யப்பட்ட அந்த நாவலைப் படித்துவிட்டு நான் பட்ட பாடு! 'வந்தியத் தேவன் விலாவில்' ஈட்டிப் பாய்ந்தது, என்றதுடன் முடிந்து விட்டது. வேறு ஒருவரிடம் அந்த விட்டுப்போன அத்தியாயங்களைப் படித்த பின்புதான் மனம் நிம்மதி அடைந்தது என்று நினைக்கிறீர்களா? இல்லை, அதன் பின்புதான் வினையே ஆரம்பித்தது.

நான் ஏன் இதற்குப் பின் ஆரம்பித்து எழுதக் கூடாது — எண்ணம் ஏற்பட்டதற்குப் பின் நான் ஒரு கணமும் தாமதிப்பதில்லை. என்ணத்தைச் செயலாக்குவதில் நான் ஒரு வந்தியத் தேவன் தான்! நந்தினி, வந்தியத்தேவன் இருவரையும் பின்னர் சந்திக்கலாம் என்று எழுதியிருந்தாரல்லவா? அதைப் படித்ததும் என்னுடைய எண்ணம் உறுதிப்பட்டு விட்டது. நான் எழுதுவதற்காகத் தான் அவர் விட்டுச் சென்றிருக்கிறார் என்று என் உள் மனம் சொல்லிக் கொண்டது.

அந்தக் கதா பாத்திரங்களைக் கொண்டே கதை புனைந்திடுவது என்று தீர்மானித்தேன். கறுகறுப்பாய் முனைந்தேன். பேனாவில் நிறைய மை விட்டுக் கொண்டேன். பக்கத்தில் இன்னொரு பேனாவும், மைக்கூடும் வைத்துக் கொண்டேன். உணர்ச்சி வேகத்தில் எழுதிக் கொண்டேயிருக்கிற போது மை காலியாகி மை பாட்டிலை எழுந்து தேடிக் கொண்டிருந்தால் 'ஐடியா' 'மூட்' எல்லாம் கெட்டுவிடுமே! இரண்டு 'குயர்' தான். பிளாஸ்க் நிறைய பால். (நான் காப்பி குடிப்பதில்லை!) செம்பில் தண்ணீர், ஒரு பேசின். வாய் கொப்புளிக்கத்தான்! எழுந்து போக அவசியமில்லாதபடி எல்லாவற்றையும் அமைத்துக்கொண்டேன். முன்யோசனையுடன் ஏற்பாடுகளைச் செய்துகொண்ட என் புத்திசாலித்தனத்துக்கு நானே ஒரு 'சபாஷ்' போட்டுக் கொண்டேன். வேறு யார் போடுவார்கள் என்கிறீர்களா?

முதலில் வர்ணனையுடன் தான் ஆரம்பிக்க வேண்டும். எதை வர்ணிக்கலாம்? நடுநிசியை வர்ணிக்கலாமா? சே! துப்பறியும் கதை என்றால் சரிதான். எழுதுவது சரித்திரக் கதையல்லவா? அப்படி யென்றால் அந்தக் காலச் சூழ்நிலையை வர்ணித்தால் தான் சரி. ஆரம்பித்தேன்.

''வாசகர்களை இன்றைக்கு ஆயிரம் வருஷங்களுக்கு முன் இருந்த காலத்துக்கு நம்மோடு சற்றுப் பிரயாணம் செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.'' அட இழவே! 'கல்கி' இப்படித்தானே ஆரம்பித்திருக்கிறார்! மனத்தில் பதிந்து கிடந்தது வெளி வந்து விட்டது. சை! முதலே கோணலாக இருக்கிறதே!

அப்படி எல்லாம் வேண்டாம்.



மனைவி : நான் ஒரு புடவை எடுக்கப் போறேன், குழந்தைகளுக்கெல்லாம் சட்டை எடுக்கப்போறேன்! நீங்க என்ன எடுக்கப் போறேன்?

கணவன் : இந்த வீட்டிலிருந்து ஓட்டம் எடுக்கப் போறேன்!

''ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஜூன் மாதம் 19-ம் தேதி.''

ஐயோ! ஜூன் மாதமா? இங்கிலீஷ் மாதம் ஏது? சர்வ முட்டாள் — நான் தான்.

''ஆனி மாதம் 31-ம் தேதி...''

ஆமாம், ஆனி மாதத்துக்கு முப்பத்தியொரு நாள் உண்டா? காலண்டரைப் பார்க்க வேண்டுமா — 31-ம் தேதி என்று போட்டால்தானே இந்த வம்பெல்லாம்! 18-ம் தேதி என்று போட்டுக் கொள்வது!

சரியான மூளை என்னுடையதுதான்.

''சுக்கில பட்சத்து நிலவின் தண்ணொளி —''

சுக்கில பட்சம் என்றால் என்ன? இது என்னடா பெரிய இழவாய்ப் போய் விட்டது? ஏதோ ஒன்று, அவ்வளவு தான்! இந்தச் சின்ன விஷயத்துக்குப் போய் இப்படி அலட்டிக் கொண்டால் எப்படி எழுதி முடிப்பது?

''நிலவின் ஒளி ஜாஜ்வல்யமாக விகசித்துக் கொண்டிருந்தது.''

திடீரென்று என்னுடைய தமிழ்ப் பற்று மேலோங்கியது. ஜாஜ்வல்யம், விகசியம் — இவையெல்லாம் என்ன வார்த்தை? இவைகளைப் போட்டா எழுதுவது? முடியாது! இப்படி எழுதினால் தமிழ் அன்பர்கள் என் கதையைப் படிக்க மாட்டார்களே! அவர்களை ஒரு போதும் இழந்து விடக் கூடாது! நல்ல தமிழ் வார்த்தைகளாகப் போட்டு எழுதுவோம். 'வார்த்தை' என்பதே தமிழ் இல்லையே என்று என் தமிழ் மனம் உள்ளுக்குள் இடித்தது. அதெல்லாம் அப்புறம். இப்போது கதைதான் முக்கியம். வேறு மாதிரி எழுதலாம்.

''ஆகாய வீதியில் அழகான
வெண்ணிலா
அலங்காரத் தாரகையுடன்
அசைந்தானால்
ஆடுதே, ஆனந்தம் தேடுதே!''

அட பகவானே! இது ஏதோ சினிமா பாட்டல்லவா? ரேடியோவில் இப்போது தானே ஒலிபரப்பினார்கள்.

''நீலக் கடலில் நிலா இலங்கியது''—

இலங்கியது — இது என்ன சொல்? இதனுடைய 'ரூட்' என்ன? இலக்கமா? இயக்கமா? ஆமாம், இப்போது எதற்கு இந்தத் தமிழ்ச் சொல்லாராய்ச்சி! இதில் தலையிட்டுக் கொள்ளக் கூடாது. அப்புறம் தமிழ்ப் புலவர் பெருமக்களின் தாக்குதலை நம்மால் சமாளிக்க முடியாது! கதையைத் தொடர்வோம்.

''நிலவின் அமைதியுடன் தமிழ்ப் பாட்டு ஒன்று மிதந்து வந்தது. சேந்தன் அமுதன் என்னும் உத்தம சோழர்தான் பாடிக் கொண்டிருக்கிறார். நாமும் கேட்கலாம். 'உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்' என்ற கம்ப ராமாயணப் பாட்டை மிக உருக்கமாகப் பாடிக் கொண்டிருக்கிறார்.''

ஒரு யோசனை வந்து முளைத்தது. கம்ப ராமாயணமா? உத்தம சோழர் காலம் என்ன? சரித்திரப் புத்தகத்தைப் புரட்ட வேண்டியதுதான். யாருடைய புத்தகத்தைப் பார்க்கலாம்? சாஸ்திரியாரையா, பண்டாரத்தாரையா? — ஒன்று நினைவுக்கு வருகிறது. கி. பி. 985-ல் ராஜராஜன் பட்டத்துக்கு வந்தான். அதற்கு முன்புதான் உத்தம சோழர். அப்படியென்றால் பத்தாம் நூற்றாண்டு. கம்பர் எந்த நூற்றாண்டு? தமிழ்க் கவிஞர்கள் விஷயத்தில் இன்னும் கால ஆராய்ச்சி முடிந்தபாடில்லை. 'எண்ணிய சகாப்தம் எண்ணூற்று ஏழின் மேல்' என்ற பாட்டைக் கொண்டு அவர் ஒன்பதாம் நூற்றாண்டு என்ற ஓர் ஆராய்ச்சி உண்டே. அப்படி என்றால் உத்தம சோழருக்கு முன்தான்! நல்ல வேளை 'அனக்கிரானிசம்' ஒன்றும் நிகழ்ந்து விடவில்லை. வாழ்க தமிழ்க் கவிஞர் கால ஆராய்ச்சி!

ஆனாலும் முடிவு செய்யப்படாத காலத்தில் போய் நான் ஏன் சரடு விட வேண்டும்? எந்தப் புலவர் காலம்தான் முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்கிறீர்களா? நமக்கு ஏன் இந்த வம்பு?

சரி கம்ப ராமாயணத்திலிருந்து ஒரு பாட்டும் உத்தம சோழர் பாட வேண்டாம். தேவாரத்திலிருந்து ஒரு பாட்டு எடுத்துக் கொண்டால் போயிற்று. எந்தப் பாட்டைப் போடலாம்?

''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே''—

ஆகா! இது திருவாசகமல்லவா? ஏதடா! நம்முடைய மூளைக்கு இன்று சரியான வேலைதான்.

'' காடுடைய சுடலைப் பொடி பூசி
என் உள்ளம் கவர் கள்வன் ''—

முதலடி தெரியவில்லையே! இன்னொரு தேவாரம் நினைவுக்கு வருகிறது. அதற்கும் முதலும் முடிவும் தெரியவில்லை. அப்பாடி!

''நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா!'' — ஆமாம்! இது யாருடைய தேவாரம்? அப்பரா, சம்பந்தரா? பாட்டு நினைவுக்கு வருவதற்குள்ளேயே தேவாரம் என்று எப்படிக் கண்டு பிடிப்பது? தேவாரம் வீட்டில் இல்லை. சரி, நாளை லைப்ரரிக்குப் போய்ப் பார்த்துக் கொள்வோம்.

''பாட்டு முடிந்தது. பக்கத்தில் குந்தவை, அருண்மொழி வர்மர், பூங்குழலி, வல்லவரையன் வந்தியத்தேவன் நின்று கொண்டிருந்தனர்.'' —

ஆமாம், வல்லவரையனு, வல்லவரையனு? 'வ' உடன்படு மெய் போலும். அட நமக்குக் கூடத் தமிழ் இலக்கணம் பிடிபடுகிறதே!

''என்னு! உங்களிடம் ஒன்று தெரிவிக்க வேண்டும்'' என்றுள் பூங்குழலி.

'என்னு' என்று அந்தக் காலத்தில் கணவன்மாரை மனைவிமார் அழைத்திருப்பார்களா? நான்பாட்டிற்கு இருபதாம் நூற்றாண்டுத் தமிழை, பத்தாம் நூற்றாண்டுத் தமிழாக எழுதுவது தவறல்லவா? பிறகு எப்படி அழைப்பதாகப் போடலாம்?

''சக்கரவர்த்தித் திருமகனே!''—அப்படி ஒரு புத்தகம் வந்து விட்டது.

''இந்தாங்க உங்களைத்தானே''—அட! இது சமூக நாவலுக்குத்தான் சரி.

''என் உயிரே!'' — அப்பா, ஒரே விரசம்!

''நாதா!'' —ரொம்பப் பழசு. ஆனாலும் அதைத்தான் போட்டுவைப்போம்.

வந்தியத்தேவன் குறுக்கிட்டான்.

''அரசே! பாடுகின்ற போது தங்கள் முகம் எவ்வளவு காமாக இருக்கிறது''—

ஐயோ! என்ன எழுதினேன். காம் — ஆங்கிலமல்லவா? வந்தியத்தேவன் ஆங்கிலச் சொல்லையா சொன்னுன்? செத்தேன்.


ஐயா! இந்த எழுத்துக்கு ஒரு கும்பிடு. நமக்கும் இதற்கும் கட்டி வராதய்யா!



இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸைச் சேர்ந்த திரு எஸ். டி. எம். நரசிம்மன் அவர்களின் மருமான் செள. சாருமதிக்கும் திரு சம்பத்துக்கும் விவாகம் நடைபெற்றது.



சென்னை மஹிந்திரா அண்ட் மஹிந்திரா கம்பெனியைச் சேர்ந்த திரு எல். வி. பாலசுப்பிரமணியத்துக்கும் செள. சாந்தாவுக்கும் விமரிசையாகத் திருமணம் நடந்தது.



கடலூர் டாக்டர் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களின் குமாரர் திரு அபராஜிதனுக்கும் செள. கோமதிக்கும் சென்னையில் சிறப்பாகக் கல்யாணம் நடந்தேறியது.



நந்தவனம்

சோமு


27. வில்வநாதனுக்கு விலங்கா?

“இரண்டொரு வழக்குகளில் குற்றவாளிகள் அகப்படாமல் தலைமறைவாக இருந்து வருகிறார்கள். அந்த வழக்குகளில் இந்தப் பையன் வில்வநாதனை மாட்டி விட்டால் என்ன?'' என்று கேட்டார் வக்கீல் குமாஸ்தா பஞ்சவர்ணம். அவருக்கு அருகிலே வெற்றிலைச் செல்லத்தை நகர்த்தி வைத்தவாறு வல்லாளவேலர் சொன்னார்:

''அது சரி! ஏற்கனவே உள்ள வழக்குகளில் இந்தப் பையனை மாட்டி விடுவதைவிட, இவனுக்காகவே ஒரு புதிய வழக்கை உற்பத்தி செய்ய வேண்டும் பிள்ளைவாள்! அதற்கு என்ன வழி இருக்கிறது என்று சொல்லுங்கள்!''

களிப்பாக்கை எடுத்து வாயிலே போட்டுக் கடித்துக் கொண்டே பஞ்சவர்ணம் யோசனை செய்தார். வல்லாளவேலர் தொடர்ந்து பேசினார்:

''முடியுமானால், கடலை யாண்டியையும், வேணுலிங்கத்தையும் இந்தப் பையனையும், மூன்று பேரையுமே சேர்த்து மாட்ட முடியுமா என்று யோசியுங்க!''



''அப்படியே செய்து விடுவோம் எசமான்!'' என்று சொல்லி வெற்றிலை யிலே சுண்ணும்பைத் தடவினர் பஞ்ச வர்ணம்.

''மூன்று பேரையும் சேர்த்து ஒரே வழக்கில் மாட்டிவிட வேண்டுமானுல், அது சரியான கிரிமினல் வழக்காகத் தான் இருக்க வேண்டும்!'' என்று சொல்லி வெற்றிலையை வாயிலே போட்டுப் பூர்வாங்கமாக ஒரு சிறு அரைப்பு அரைத்தார் பஞ்சவர்ணம்!

''கிரிமினல் தான்! அதிலும் சந்தேகமா! சிவில் வழக்குக்கு யோசனை கேட்கவா உங்களை வரவழைத்திருக்கிறேன்! காட்டுக்குள்ளே கூட்டிக் கொண்டுபோய் அந்தப் பெண் செண்பக சுந்தரியைக் கொலை செய்து, அவளுடைய நகைகளையும் ரத்தினங்களையும் கொண்டு போய் விட்டார்கள் இந்த மூன்று பேரும் என்று ஒரு பெரிய போடாகப் போட வேண்டும். அதற்கு வழியைச் சொல்லுங்கள் குமாஸ்தா பிள்ளைவாள்!'' என்ருர் வல்லாளர்.

''எசமான்! நான் என்னவோ எசமானை லேசாக நினைத்தேன்! பெரிய கிரிமினல் மூளை எசமானுக்கு! நாங்கள் எல்லாம் அவ்விடத்திலே பிச்சை எடுக்க வேணும்!'' என்று சொல்லிக்கொண்டே புகையிலையை இடது உள்ளங்கையிலே வைத்து வலது கையால் தேய்த்துக் காரம் ஏற்றினுர் பஞ்சவர்ணம்!

''அப்படியானுல் நாமே ஆட்களை வைத்து அப்படி ஒரு கொலையை நடத்தி விடலாமா?'' என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டே, காரம் ஏறிய புகையிலையை வாயிலே போட்டுக் குதப்பினுர் பஞ்சவர்ணம்!

''சே! சே! அப்படியெல்லாம்செய்யக் கூடாது குமாஸ்தாப் பிள்ளைவாள்! அந்தப் பெண் எப்பேர்ப்பட்ட அழகு! என்ன முகம்! என்ன நெற்றி! என்ன நிறம்! எலுமிச்சம் பழம் மாதிரி! அப்படிப்பட்ட பெண்ணை....'' என்று வார்த்தைகளை இழுத்தார் வல்லாளர். அப்போது அவருடைய முகத்தில் விளையாடிய ஆசாபாசங்களை நன்ருகக் கவனித்தார் பஞ்சவர்ணம். கவனித்துக் கொண்டே சொன்னுர்:

''ஓகோ! எசமானுக்கு இப்படி ஒரு எண்ணம் மனசுக்குள் இருக்கிறதா! பலே! எசமான்! இப்பத்தான் எசமானுடைய மனசு புரியுது! ரொம்பச் சரி! அப்படியானுல் அந்தப் பெண்ணை வேறு யாருக்கும் தெரியாமல் நாமே கடத்திக் கொண்டு வந்து, எசமானுடைய வட்டாரத்திலே ஒளித்து வைத்துவிட்டால் என்ன? வில்வநாதன் அந்தப் பெண்ணை எங்கேயோ கொண்டு போய்க் கொலை செய்து நகைகளையெல்லாம் திருடிக் கொண்டு விட்டான் என்று ஒரு வழக்கு ஜோடனை செய்து விடலாம்! எப்படி என்னுடைய யோசனை?''

வல்லாள வேலர் மீசையைத் திருகி விட்டுக் கொண்டே சொன்னுர்:

''குமாஸ்தாப் பிள்ளைவாள்! அந்தப் பெண்ணைப் பற்றிப் பேசும் போது, உரக்கப் பேசாதீக! மெதுவாகக் காதும் காதும் வைத்த மாதிரியே பேசுங்க! வீட்டுக்குள்ளே இந்தச் சத்தம் கேட்கக் கூடாது! தெரிந்ததா? நம்முடைய வீட்டு அம்மாள் இருக்கிருளே, ரொம்பச் சாது! ஆனுலும் இந்த மாதிரிக் காரியங்களில் கோபம் வந்தது என்ருல், கண்ணகி மாதிரித்தான்!'' என்ருர் வல்லாள வேலர்.

''கண்ணகியா? அதென்ன அப்படிச் சொன்னீக எசமான்? கதையிலே வருகிற கண்ணகி அப்படியா கோபப்பட்டாள்? முன் கண்ணகி, பின் கண்ணகி என்று இரண்டு உண்டு எசமான்! முன் கண்ணகி ரொம்ப அடக்க ஒடுக்கமானவள்! கணவனுக்கு வேண்டியபடி, கணவனுடைய மனசுப்படி — ''

''குமாஸ்தாப் பிள்ளைவாள்! அந்தக் கதையை யெல்லாம் ஏன் பேசுறீக இப்ப? ஒரு உதாரணத்துக்குச் சொல்ல வந்தேன். அவ்வளவுதானே தவிர — ''

''அதுக்குச் சொல்லலே எசமான்! உதாரணம் எந்த இடத்து வரைக்கும் பொருந்துது என்பதைச் சொன்னேன். மற்றப்படி எசமானுடைய பயம் எனக்குப் புரியுது!'' என்ருர் பஞ்சவர்ணம்.

''பயமா! எனக்கா? குமாஸ்தாப் பிள்ளைவாள்! இது பயமில்லே ஐயா! அதாவது இது ஒரு — ''

''எசமான்! கருத்துப் புரியுது அப்ப மூன்னு ஒரே வார்த்தையிலே சொல்லி விட்டேனே! நம்முடைய குரலின் கதியையும் அந்த விநாடியிலே இருந்து குறைத்து விட்டேனே! நம்முடைய வீட்டு அம்மாளுக்கு இது தெரியக் கூடாது! அவ்வளவுதானே! அது சரி! மேற்படி நபரை மேற்படி இடத்தி லிருந்து கடத்திக்கொண்டு வர வேண்டியது! அதுதான் விஷயம்!'' என்று சொல்லி, வெற்றிலையை இடது புறமாக ஒதுக்கிக் குதப்பினுர் பஞ்சவர்ணம்!

''அதெல்லாம் சரி குமாஸ்தாப் பிள்ளைவாள்! மேற்படி ஆளை அங்கே இருந்து கடத்திக் கொண்டு போவது என்ருல் அது நடக்கிற காரியமில்லே! குமுதவல்லி இருக்கிருளே, அவள் அல்லி ராணி, ஐயா, அல்லி ராணி!''




பளுவான
போக்குவரத்து
சாதனங்களுக்கு
சியெட் டயர்கள்
டிரக் ஓட்டிகள் சியெட் டயர்களை நம்பு கிறார்கள்.... ஏனெனில், அவை தொடர்ந்த கடு மையான ஓட்டத்திலும் தேய்மானம் மற்றும் பழு தாகாதபடி அதிக உறுதியானவை. வழுக்குதலில் லாத அமைப்புடைய, தனிப்பட்ட ஆழ்ந்த டிரெட் கொண்டவை சியெட் டயர்களே—அதிக வேகம் மற்றும் மிகக் குறைந்த செயலாக்கச் செலவு களுக்கென்றே பிரத்தியேகமாய் உருவாக்கப் பட்டிருக்கின்றன.
சியெட்
நெடுஞ் சாலைகளில் உங்கள் உறுதுணைவன்.
CT.G.26

வல்லாள வேலர் இப்படிச் சொன்னதும், வக்கீல் குமாஸ்தா பஞ்சவர்ணம் எழுந்து வாசலுக்குப் போய் வெற்றிலையைத் துப்பி விட்டு வந்து உட்கார்ந்தார். பக்கத்தில் இருந்த கூஜாவிலிருந்து, தண்ணீர் எடுத்து அதில் ஒரு மடக்குக் குடித்தார். அப்படியே ஞானோதயம் வந்தவர் போல் பேச ஆரம்பித்து விட்டார்.

''எசமான்! குமுதவல்லியையுமே நம்முடைய திட்டத்துக்கு உடந்தையாக இருக்கும்படி செய்து விட்டால் என்ன? இந்தத் தாய்க் கிழவி எப்போதும் பணத்திலே குறியாக இருக்கிறவள்! அதோடு, எசமானுடைய வார்த்தைக்குக் கட்டுப்படக் கூடிய ஒரு குடும்பந்தானே அது?''

இப்படி வக்கீல் குமாஸ்தா பஞ்சவர்ணம் சொன்னதும் வல்லாள வேலர் அவருக்கு அருகிலே நெருங்கி வந்து உட்கார்ந்து கொண்டார்.

''பிள்ளைவாள்! இதில் இன்னொரு பெரிய நுட்பமும் இருக்கிறது! குமுதவல்லிக்கு எப்போதுமே ஜமீந்தாருடைய உறவில் ஒரு சபலம்! நம்முடைய பொன்னுத்துரையை



எப்படியாவது தனது வலைக்குள்ளே பிடித்துப் போட்டுவிட வேண்டும் என்று நீண்ட நாளாகவே ஒரு ஆசை அவளுக்கு! இந்த அசட்டுப் பையன்தான் குதிரையிலேயே, வகானும் கையுமாகக் காலத்தைக் கழித்து விட்டான்! என்ன செய்ய! எப்பேர்ப்பட்ட பெண் அந்தச் செண்பகசுந்தரி! யார்தான் அவளுடைய அழகில்.......''

''எசமான்! அதெல்லாம் அப்பவே புரிந்து கொண்டு விட்டேனே. எசமான் தான் வர்ணித்து வர்ணித்து உரக்கப் பேச ஆரம்பிச்சுட்டீக!''

''நல்ல வேளை! பிள்ளைவாள் சரியான சமயத்திலே ஞாபகப் படுத்தினீக!'' என்று சொல்லி இன்னும் அருகிலே வந்து, மேலும் நெருங்கி உட்கார்ந்து கொண்டார் வல்லாளவேலர்.

''எசமான்! என்னுடைய திட்டத்தை இப்போ சொல்லட்டுமா? நல்லா கவனமாகக் கேளுங்க. முதலில், குமுதவல்லியிடம் போய் ஒரு சிறு பொய் சொல்ல வேண்டும். அதாவது பொன்னுத்துரைக்குச் செண்பக சுந்தரியிடம் அபிமானம் விழுந்திருப்பதாகச் சொல்ல வேண்டும்! அப்படிச் சொல்லி அந்தப் பெண்ணை அங்கிருந்து இரவுக்கு இரவே கடத்திக் கொண்டு வந்து, எசமானுடைய எல்லையில் இரகசியமான ஒரு இடத்தில் காவலில் வைக்க வேண்டும். வில்வநாதன் என்ற ஏழைப் பையனால் ஒரு பயனுமில்லை யென்றும், அவன் இருக்கும் வரை குமுதவல்லியின் குடும்பத்துக்கு நல்ல காலம் இல்லை என்றும் குமுதவல்லியிடம் சொல்லி, விரோ



நந்தை உண்டுபண்ணி வில்வநாதனைப் போலீஸில் மாட்டி விட வேண்டும்!''

''அது எப்படிச் செய்ய முடியும் குமாஸ்தாப் பிள்ளைவாள்?'' என்று ஆவலோடு சேர்ந்த குழப்பத்திலே கேட்டார் வல்லாளவேலர்.

''குமுதவல்லியைக் கொண்டே வழக்குத் தொடுக்கும்படி செய்ய வேண்டும்! மகளைக் காணவில்லை என்றும், தனக்குச் சந்தேகம் அந்த வில்வநாதனிடம் தான் என்றும் குமுதவல்லி போலீஸுக்கு எழுத வேண்டும்! பயலை உடனே விலங்கு மாட்டிக் கையிலே கொண்டு போய் விடுவார்கள்! வழக்கு முடிகிற வரையில் செண்பக சுந்தரி என்ன ஆனுள் என்பது யாருக்கும்

தெரியக் கூடாது! கப்சிப்! கோர்ட் இருக்கிறது, கேஸ் கட்டு இருக்கிறது! ஒரு கை பார்த்து விடுவோம்!'' என்றார் பஞ்சவர்ணம்.

''குமாஸ்தாப் பிள்ளைவாள்! இந்த மாதிரி ஒரு பொய் வழக்கு நடத்த நமக்கு யார் உதவி செய்வார்கள்?'' என்று கேட்டார் வல்லாளவேலர், தலையைச் சொறிந்துகொண்டே!

''உதவியா! நமக்கு எதற்கு அது? இந்தப் பஞ்சவர்ணத்தினுடைய மண்டையில் இருக்கிறது எல்லா உதவியும் எசமான்! இந்த மாதிரி வழக்குகளுக்கு என்றே நம்முடைய கையில் சில தனிப்பட்ட ஆட்கள் இருக்கிறார்கள்! நம்முடைய திவான்பகதூர் ஐயாவிடமா போவார்கள் இதற்கு? இதற்கெல்லாம் வேறு ஒரு மூளை வேண்டும் எசமான்! நான் கொண்டு வருகிறேன் சரியான ஆசாமி ஒருவரை! அது என் பொறுப்பு!'' என்று சொல்லி, அடுத்தபடியாகப் பாக்கை எடுத்து வாயிலே போட்டுக் கொண்டு கடிக்க ஆரம்பித்தார் பஞ்சவர்ணம்!

''சரி, அப்படியானால் வெற்றிலையைப் போட்டு விட்டுக் கிளம்புங்கள். குமுதவல்லியைப் போய்ப் பார்ப்போம்!'' என்று சொன்னார் வல்லாள வேலர்!

செண்பக சுந்தரி காணாமற் போனதற்குக் காரணமாக இத்தனை நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன என்பது வில்வநாதனுக்கு எப்படித் தெரியும்?

குமுதவல்லியின் வீட்டிற்குள்ளே வில்வநாதன் நுழைந்த அவசரம் என்ன? ஆவல் என்ன? ஆனால் இப்பொழுது அங்கே நடந்தது என்ன?

எத்தனை ஆவலோடும், எத்தனை பரபரப்போடும் சுந்தரியைத் தேடினான் அவன்? நந்தவனத்திற்கு அவள் வரவில்லை என்றதும் அவனுடைய உடம்பும் உள்ளமும் எப்படியெல்லாம் துடிதுடித்தன? எத்தனை வேகமாக அவன் மலைப்படிகளிலே இறங்கினான்? எத்தனை வேகமாகத் தெருவீதிகளையெல்லாம் கடந்து ஓடோடி வந்தான்? அவளைக் காணோமே என்று அவனுடைய இதயத்திலே எத்தனை துயரம்! எத்தனை தவிப்பு! ஆனால் இங்கே வந்ததும் அவனுடைய செவிகளிலே விழுந்த சொற்கள்? குமுதவல்லி பேசிய அந்தக் கொடிய மொழிகள்!

''அம்மா! ஊஞ்சலை விட்டு எழுந்து நான் எங்கே ஓடி விடுவேன்! என்னைப் பற்றி உங்களுடைய எண்ணம் இதுவா! சுந்தரியைக் காணோம் என்று தெரிந்த பிறகு உங்களை இந்த நிலையில் இப்படியே விட்டு விட்டு ஓடி விடுவேனா நான்!'' என்று உடம்பெல்லாம் பதறியவாறு கேட்டான் வில்வநாதன்.

''நீ எதுவும் செய்வாய் துரோகி! சுந்தரியை எங்கோ கொண்டு போய்க் கொலை செய்து விட்டு வந்திருக்கிறாய் நீ! தெரியும் எனக்கு! நீ என்னிடம் உண்மையைச் சொல்ல மாட்டாய்! இன்னும் கொஞ்ச நேரத்தில் உன்னுடைய கையிலே விலங்கை மாட்டி, உன்னைப் போலீஸ்காரர்கள் அழைத்துப் போகும் போது — அப்போதுதான் உனக்குத் தெரியும்! அப்போதுதான் நீ செய்த துரோகம் இந்த உலகத்துக்கும் நன்றாகத் தெரியும்!''

இப்படிச் சொல்லும் போது குமுதவல்லியின் முகத்தில் இருந்த கடுமையும், இராக்கதமும் வில்வநாதனை நெருப்பாக எரித்தன.

''அம்மா! நீங்கள்தானா இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்! ஐயோ! இதில் ஏதோ சூது இருக்கிறது. இதில் ஏதோ வஞ்சகம் இருக்கிறது. நாம் சந்தோஷமாக, ஒற்றுமையாக, அன்னியோன்னியமாக வாழ்வதைக் கண்டு சகிக்காத யாரோ வஞ்சகர்கள் ஏதோ சூழ்ச்சி செய்திருக்கிறார்கள் அம்மா! சத்தியமாகச் சொல்லுகிறேன். இந்த உலகத்தில் என்னுடைய உயிருக்கும் மேலாக நான் மதிக்கிற பொருள் ஒன்று உண்டு என்றால், அது நீங்கள் பெற்றெடுத்த அந்தச் சுந்தரச் செல்வந்தான். இதை உறுதியாக நம்புங்கள். செண்பகசுந்தரிக்கு ஏதாவது தீங்கு நேருமானால், அந்த வினாடியே இந்த உயிர் என் உடம்பில் தங்காது. நீங்கள் ஏதேதோ பேசுகிறீர்கள். என்னென்னவோ சொல்லி என்னைப் பழிக்கிறீர்களே! ஐயோ! அத்தனையும் அபாண்டமான வார்த்தைகள்! நான் ஒரு பாவமும் அறியாதவன். சுந்தரியைக் காணவில்லை என்று தவித்துத் துடித்து இங்கே ஓடி வந்தேன். இது சத்தியம். பொய் இல்லை. வஞ்சகம் இல்லை. என்னை நம்புங்கள். அநியாயமாக என்னைக் குற்றம் சாட்டாதீர்கள். சுந்தரியை யாரோ எங்கோ கொண்டு போய் மறைத்து வைத்திருக்கிறார்கள் போல் தோன்றுகிறது. ஐயோ! அந்த நினைவையே என்னால் தாங்க முடியவில்லை. அம்மா, பெற்ற தாயிடம் சொல்லுவது போல் சொல்லுகிறேன். வாழ்வில் பெரியோர்கள் தடுத்த காரியத்தை, என் தந்தையின் அன்புக் கட்டளையை, மீறினேன். அன்புக்கும் கட்டளைக்கும் நடுவிலே நின்று தடுமாறினேன். விதி என்னைத் தண்டித்து விட்டது! பெரியோர்களுடைய சாபம் என்னைப் பற்றிக்

கொண்டது! ஆனாலும், ஆனாலும் சுந்தரி என்ன செய்தாள்! அவள் ஒரு பாபமும் அறியாதவள்! அவள் செய்த ஒரே தவறு அவன் என்னிடம் பிரியமாக இருந்தாள் என்பது தான். நான் செய்த தவறு அவளை முழு மனத்தோடு நேசித்தேன். இந்தத் தவறுகளுக்காக எங்களுக்கு இப்படி ஒரு தண்டனையா! அம்மா வேண்டாம்! விபரீதமான எண்ணங்கள் வேண்டாம்! அநியாயமாக என்னைப் பழிப்பதை விட்டு விடுங்கள்! சுந்தரி எங்கு போனாள், அவள் எங்கு இருக்கிறாள் என்பதைக் கண்டுபிடித்து, அவளை உங்களிடம் சேர்ப்பேன். அதன் பிறகு நீங்கள் என் தவறுகளுக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வேன். இது சத்தியம்!'' இவ்வாறு வில்வநாதன் உள்ளம் உருகி நின்ற போது, வெளியே சத்தம் கேட்டது.

''என்ன தம்பி, டயலாக்கா பேசுறே? புறப்படு அப்பனே புறப்படு!'' என்று சொல்லிக் கொண்டே, வீட்டினுள்ளே நுழைந்தார் ஒரு போலீஸ்காரர். அவரைப் பின்தொடர்ந்தார் அடுத்த வீரர்.

''ஐயா! வந்துட்டீகளா!'' என்று சொல்லிக் கொண்டே போலீஸ் வீரர்களை நோக்கிக் கதறினாள் குமுதவல்லி!

''ரொம்ப, அழுவாதீக அம்மா பாவம்!'' என்று சொல்லிக் குமுதவல்லியை ஆறுதல் செய்தவாறு, கையிலிருந்த குண்டாந்தடியைத் தரையிலே தட்டினார் முதலாவது போலீஸ் வீரர்!

''குழந்தை எப்போம்மா வீட்டிலிருந்து வெளியே போச்சு?'' என்று கேட்டார் இரண்டாவது வீரர்.

''அதானே தெரியலே ஐயா! ராத்திரி படுத்திருந்த பொண்ணு, காலையிலே பார்த்தாக் காணலேயே மகாராசனே!'' என்று சோகக் குரல் கொடுத்தாள் குமுதவல்லி!

''தம்பி, பலே ஆளுதான் நீரு! சித்திரத்திலேயே கொண்டு போயி மறைச்சு வச்சிட்டீரு போலே!'' என்று வில்வநாதனைப் பார்த்து எகத்தாளமாகக் கேட்டார் முதல் போலீஸ் வீரர்!

''ஐயா! ஏற்கனவே நொந்துபோன மனம் இது. நீங்கள் மேலும் இந்த — ''



"வாசலில் சைக்கிளை வைத்துவிட்டு 'ஷேவ்' செய்து கொண்டு வந்து பார்த்தால் என் சைக்கிள் திருட்டுப் போய் விட்டிருக்கிறது. இனி மேல் என்ன செய்வது?"

"பேசாமல் தாடி வளர்த்து விடுங்கள்!"

''தம்பி! அதானே வேண்டாம்னேன். நிறுத்து. டயலாக்கை நிறுத்துன்னேன்.''

இவ்வாறு சொன்னார் இரண்டாவது போலீஸ் வீரர்! குமுதவல்லி மேலும் புலம்ப ஆரம்பித்தாள்:

''ஐயா இந்த அநியாயத்தை நீங்கதான் கேக்கணும். இந்தப் —'' என்று குமுதவல்லி ஆரம்பிப்பதற்கு முன்பு இடைமறித்தார் முதலாவது வீரர்:

''அம்மா! நீங்க பேசாம இருங்க. எல்லாச் செய்தியும் எங்களுக்குத் தெரியும்! தம்பி, புறப்படும் எங்களோடு!''

இப்படிச் சொல்லிக் கொண்டே முதலாவது போலீஸ் வீரர், தமது தோழரைப் பார்த்தார். உடனே அவர் தமது அங்கியின் பைக்குள்ளிருந்த விலங்குகளை வெளியே எடுத்தார்.

''தம்பி! சித்திரம் வரைகிற கையை இப்படிக் கொஞ்சம் நீட்டுங்க!'' என்றார் முதலாவது போலீஸ் வீரர். இரண்டாவது வீரர் வில்வநாதனின் கைகளில் விலங்குகளைப் பூட்டினார்.

''அம்மா! உங்க சாட்சிகள் யார் யாருன்னு எங்களுக்குத் தெரியும். எல்லாரையும் ஸ்டேஷனுக்கு வரச் சொல்லுங்க. நாங்க இந்த நல்ல முகூர்த்தத்திலேயே இவரைக் கொண்டு போகிறோம்!''

போலீஸ் வீரர் இப்படிச் சொன்னதும் வில்வநாதனுக்கு ஆத்திரம் வந்தது. ''ஐயா! இது ஒரு பெரிய அநீதி! அக்கிரமம்! சுந்தரியைக் காணோம் என்று மற்ற யாரையும் விட எனக்குத்தான்—''

''தம்பி! அதெல்லாம் அங்கே வந்து சொல்லும் ஐயா! உம்மோடு பேச வேண்டிய செய்திகள் ஏராளமா இருக்கிறது நமக்கு! வாரும்!''

துயரமும், குழப்பமும், ஆத்திரமும், மனித இதயத்தின் சோக உணர்ச்சிகள் அத்தனையும் ஒருமித்துத் தாக்கிய நிலையிலே, போலீஸ் வீரர்களின் காவலிலே வெளியே நடந்தான் வில்வநாதன்! அவனுடைய கண்கள் கலங்கின.

''புறப்படு தம்பி, மேலே நட!'' என்று சொல்லி, வில்வநாதனை வேகமாக நடத்திக் கொண்டு போனார்கள் போலீஸ் வீரர்கள்!

(தொடரும்)

வெட்கமில்லை?

நித்யானந்தம்


கதை எழுதியாவது பிழைக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார், சமீபத்தில் ஒரு தினசரிப் பத்திரிகையிலிருந்து விலக்கப்பட்ட ஓர் உழைக்கும் பத்திரிகையாளர். அதன்படி ஒரு கதையையும் எழுதினார். கதை எந்த லட்சணத்தில் இருக்கிறதோ என்ற சந்தேகம் அவருக்கு. தம் மனைவியிடம் அதைக் கொடுத்து அபிப்பிராயம் கோரினார்.

மனைவியும் கதையை ஆவலோடு படித்தாள்:

மாம்பழத் தெய்வம்
தனிகாசலம்

மயிலாப்பூர் லஸ்ஸை அடைந்ததும் கால்கள் தடுமாறின. ஆகவே சற்று நின்று ஆசுவாசப்படுத்திக் கொண்டேன்.

'பொழுது சாய்வதற்குள் எப்படியும் வீட்டுக்குப் போய்விட வேண்டும்; வெறும் கையோடு போகாமல் ஏதாவது எடுத்துக் கொண்டு போக வேண்டும்!



ஆயிரத்தோராவது தடவையாக நான் எண்ணினேன்.

சென்னை மாநகரின் செல்வின் பகுதியிலிருந்து மயிலாப்பூர் வரை நடந்தே வந்ததால் களைப்பு மிகுந்திருந்தது. வழியில் தென்பட்ட சிலராலும், நான் விரும்பிப் பார்த்த ஓரிருவராலும் எந்த விதமான அநுகூலமும் ஏற்படவில்லை.

ஒன்றும் புரியாமல் குழம்பிய நிலையில் நின்றபடி இருந்த எனக்கு ஞானோதயம் ஏற்பட்ட மாதிரி முகுந்தன் நினைவு வந்தது.

லஸ்ஸில் நின்றபடியே ஒரு நோட்டம் விட்டேன். தெரிந்தவர் எவரும் கண்ணில் படவில்லை. கூவம் நதிதான் தெரிந்தது. சரி, அதன் கரை ஓரமாக ஒட்டமாக நடந்தால் அபிராமபுரத்தைச் சீக்கிரமாக அடைந்துவிடலாம். அபிராமபுரத்தில் ஓர் அழகிய பங்களாவில்தானே முகுந்தன் வசிக்கிறான்.

ஆபீஸிலிருந்து இந்நேரத்துக்கு முகுந்தன் வந்திருப்பான். மீண்டும் வெளியே கிளம்புவதற்குள் அவனைப் பிடித்துவிட வேண்டும். இந்த ஒரு மனிதனும் கையை விரித்து விட்டால் வெறும் கையோடுதான் திரும்பிப் போக வேண்டும்!

பஸ், லாரி, டாக்ஸி, ஆட்டோ, கார் இவைகளிடமிருந்து ஒருவாறு தப்பிக் கூவம் நதிக் கரையில் பிரவேசிக்க இருந்த சமயம் 'மிஸ்டர் தனிகாசலம்' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

''இங்கே வாய்யா'' என்று அழைத்தான் ரங்கசாமி.

ரங்கசாமி என் நண்பன். மனம் விட்டுப் பேசத் தகுந்த நண்பன். அவன் அருகே நெருங்கினேன்.

''பார்த்து ரொம்ப நாளாச்சே. சௌக்கியமா?'' என்றான்.

''சௌகரியமில்லே; அது ரொம்பக் கம்மியாகி விட்டது'' என்றேன் நான்.

நண்பன் சிரித்தான். ஏதோ நான் தமாஷ் செய்து விட்டதாக நினைத்துச் சிரித்தான்.

''என்ன ரங்கசாமி, சிரிக்கிறே! நிஜமாகவே ரொம்பக் கஷ்டம்தான். போன மாசம் வேலே போய் விட்டது. இது வரை வேலே ஒன்றும் கிடைக்கவில்லே. நமக்கென்ன சொத்து பத்து, நகை நட்டு ஏதாவது இருக்கிறதா? வீட்டிலே இருக்கிற தட்டுமுட்டுச் சாமான்களை வைத்து இது வரையில் சமாளித்து விட்டேன். இனி எப்படி ஓட்டுவது என்று தான் புரியவில்லே.

''அப்படியா! எனக்குச் சொல்லவே இல்லேயே நீ!''

''நாம இப்பத்தானேடா பார்க்கிறோம், ரங்கசாமி! இன்னிக்கு என் நிலைமை படு மோசம். எப்படியாவது பிள்ளைகள் வரையிலாவது இன்று பட்டினி போடாமல் சோறு போட்டுவிட வேண்டும் என்பது என் ஆசை.''

''அப்படியா! ஏன்டா தணிகாசலம், உனக்கு எத்தனே பசங்க?''

''நாலு!''

''நாலும்....''

''நாலும் ஆண் பிள்ளைகள்தான்.''

''நான் நினைச்சேன். என்ன இருந்தாலும் நீ கொடுத்து வைச்சவன்தான்டா.''

''என்னத்தைக் கொடுத்துவைச்சவனோ..'' என்று முடிப்பதற்குள், ''அப்படிச் சொல்லாதே. நாலும் ஆணுய்ப் பிறப்பது பூர்வ ஜன்ம பூஜா பலன்!'' என்றான் ரங்கசாமி.

அவனே தொடர்ந்து, ''என்னேப் பார். மூணேயும் பெண்ணுப் பெத்து வைச்சிருக்கிறேன். தலேப் பெண்ணுக்கு இன்னும் கொஞ்ச நாள் போனுல் எல்லாம் செய்தாகணும்'' என்றான்.

''உனக்கு என்ன ரங்கசாமி, வசதி உள்ளவன். என்னேப் போலவா! வீட்டிலே ஒரு மணி அரிசி இல்லே. கட்டை இல்லே. எல்லாம் தேடியாகணும். இருபது நாளேக்கு வீட்டுக் கவலே இல்லாமல் இருந்தால் எப்படியாவது ஒரு வேலே தேடிப் பிடிச்சுடலாம். அதுக்கு உதவி இல்லே. பார்க்கிற நண்பர்களிடத்திலெல்லாம் விஷயத்தைப் பக்குவமாகச் சொன்னேன். ஒருத்தனும் விஷயத்தைச் 'சீரியஸா' எடுத்துக்க மாட்டேங்கறான்.''

''மாட்டான்; மாட்டான்.''

''நாலு குழந்தைகளே வைத்துக் கொண்டிருக்கிறனே, இல்லுமுல்லு செய்யத் தெரியாதவனுச்சே, அவனுக்கு எப்படியாவது ஒரு வழி பண்ணணுமென்னு யாரும் எண்ணிப் பார்க்க மாட்டேங்கிறாங்க. மனசுக்குக் கஷ்டமாகத்தான் இருக்குது. என்ன செய்யறது?'' என்று உரிமையோடு கூறிவிட்டு நண்பனேப் பார்த்தேன்.

''நீ இன்னும் ரெண்டு நாள் பொறுத்து வாயேன்.''

''எதுக்கு ரங்கசாமி?''

''அதென்ன அப்படிக் கேட்கிறே? ஏதாவது வழி செய்யலாமுன்னுதான்.''

''என்ன வழி?''

''எல்லாம் நல்ல வழியாக நடக்கும். நீ வாயேன்'' என்று கூறி நடந்தான் நண்பன்.

இது வரை மறைந்திருந்த சுய மரியாதை திமிர் என்று விழித்துக் கொண்டது. நண்பனிடம் 'ஒரு ரூபாய்' கொடு என்று கேட்க மனம் துணியவில்லே.

இதற்கு மேலும் அபிராமபுரம் போகவோ, முருகேசனைக் கண்டு பேசவோ தெம்பில்லே!

நான் என் வீட்டுக்குள் நுழையும் போது இரவு ஒன்பது மணி ஆகிவிட்டது. வயிற்றில் பெரும் பசியும், நெஞ்சில் திகிலும் கொண்டவனும் நுழைந்தேன். என் மனைவி முகம் மலர என்னே அன்போடு வரவேற்றாள்.

ரொம்பப் பேருக்குக் கிடைக்காத இந்த அரும் பெரும் இன்பம்தான் எனக்குப் பூர்ணமாகக் கிடைத்த செல்வம்!

அறைக்குள்ளே எட்டிப் பார்த்தேன்.

குழந்தைகள் உறங்கிக் கொண்டிருந்தன. வயிற்றில் ஈரப்பசை பட்டபின் நிம்மதியாகத் தூங்குகின்றனவா, அல்லது—என்னுல் அதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லே.

''கை கால் கழுவிக் கொள்ளுங்கள்'' என்றாள் என் மனைவி வேணி.

''வேணி! பால்யத்தில் பழகியவர்களேயும், அவ்வப்போது பார்த்துப் பேசியவர்களேயும் நண்பர்கள் என்று எண்ணி ஏமாந்து விட்டோம். நமக்கு நண்பர்கள் யாருமில்லே. இருந்ததாகச் சொல்லுகிற சிலரும் நிம்மதியாக இல்லே.''

வேணி என்னே மிகுந்த கலவரத்தோடு பார்த்தாள்.

''வேணி, நான் கெட்டவன் என்றோ, பொல்லாதவன் என்றோ பெயர் எடுக்கவில்லே. நான் நல்லவன் என்றே பெயர் எடுத்து விட்டேன். இதனுல் நமக்கு எந்தவிதமான சுகமும் இல்லே! நட்பு என்பது....''

வேணி இடைமறித்தாள். ''சொல்வதைத் தெளிவாகச் சொல்லுங்கள்'' என்றாள்.

''நண்பர்கள் இருக்கிறார்கள் என்று கூறிக் கொள்வதைவிட, அவர்கள் இல்லே என்றே எண்ணி விடுவதுதான் நல்லது என்று படுகிறது. அதைவிட விரோதி என்று எவரையாவது ஒருவரைத் தேடிக் கொள்ளாமல் போய் விட்டோமே என்றும் தோன்றுகிறது. ஆமாம்! வேணி, வாய் விட்டுச் சொல்லியும் ஒருவராவது நமது அவல நிலேயைப் புரிந்து கொள்ளக் குறைந்தபட்ச அக்கறைகூடக் காட்டவில்லேயே என்ற வேதனே மேலிடுகிறது. பகைவன் என்று யாராவது இருந்தால், அந்தப் பகைவனிடத்தில் நமக்குள்ள கஷ்டத்தைக் கூறினுல் அந்தப் பகைவன் இளகி நிச்சயம் தயங்காமல் உதவி புரிவான்.''

''வேண்டாம், வேண்டவே வேண்டாம்.'' மனைவி அழுத்தம் திருத்தமாக மறுத்தாள்.

''நீ என்ன சொல்லுகிறாய், வேணி?''

''உங்களுக்குத் தெரியாததா சொல்லப் போகிறேன்? நல்ல வேளே நமக்கு விரோதிகள் என்று எவரும் இல்லே. உங்களுடைய நேர்மையான வாழ்க்கையின் வெற்றி என்றே இதை எண்ணுகிறேன். நண்பர்கள் என்று நமக்குப்

பவர் இருக்கிறார்கள். அவர்களால் நமக்குப் பயனில்லை. ஆனால் அவர்களுக்கு நம்மால் ஏதாவது பயன் ஏற்பட வழி இருந்தால் அதைத் தடுத்து நிறுத்த முடிவு கட்டுவது கொடுமை! பிரதிபலன் கருதாமல் அன்பைச் செலுத்திக் கொண்டே விருப்போம். இப்படி நேசித்துக் கொண்டிருக்கிறோம் என்ற நினைப்பே....''

''நமக்கு உணவாகட்டும் என்கிறாயா?'' நான் சிரித்துக் கொண்டே கேட்டேன்.

''ஆமாம்.'' — கொஞ்சமும் சலனமின்றி அவள் பதில் அளித்தாள்.

''சரி!'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டுப் படுக்கலாம் என்று உள்ளே சென்றேன்.

''இங்கே வாருங்கள்.''

''எங்கே?''

''சாப்பிட?''

''சாப்பாடா?''

''ஆமாம், அறுசுவையுடன்.''

''கோபித்துக் கொள்ளாதே. தாயோடு அறுசுவை போம் என்றார்களே!''

''நான் தாயாகி விட்டேன் என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன்.''

''வேணி!''

பதில் சொல்லவில்லை அவள். உண்மையின் பேருருவாய், பெண்மையின் திருவுருவாய் என் முன்னே காட்சி அளித்தாள். நான் குழந்தையைப் போல் நின்றேன்.

சாப்பாட்டைப் பரிமாறிக் கொண்டே அவள் சொன்னாள்: ''திருமாங்கல்யம் என்ற ஒன்று நம்மிடம் இருக்கிறதல்லவா?''

''ஆமாம்; அது உன்னை என்றும் அலங்கரித்தபடியே இருக்கட்டும்.''

''அது எங்கிருந்தாலும் ஒன்றுதான் என்று....''

''என்று.....''

வேணி மேலே பேசவில்லை. எனக்குப் புரிந்து விட்டது. என் கண்களில் நீர் சுரந்தது. நிமிர்ந்து வேணியைப் பார்த்தேன்.

''நாற்பத்தைந்து ரூபாய் கிடைத்தது. இன்றையச் செலவுக்கு ரெண்டு ரூபாய் ஆகி விட்டது. மீதி நாற்பத்து மூன்று ரூபாய் பெட்டியில் வைத்திருக்கிறேன்.''

''சரி.''

''நாளைக்கு அதை எடுத்துக் கொண்டு போங்கள். நல்ல மாம்பழமாகப் பார்த்து மூந்நூறு வாங்குங்கள். அதோடு இரண்டு கூடையும் வாங்குங்கள்......''

நான் நிமிர்ந்து பார்த்தேன். நிஜமாகவே எனக்குப் புரியவில்லை.

''இரண்டு கூடைகளில் அதைச் சரிசமமாகப் போடுங்கள். ஒரு கூடையை நீங்கள் தூக்கிக் கொள்ளுங்கள்.''

''மற்றொரு கூடை?''

''என் தலை சுமக்கட்டும்!''

''வேணி!''

வேணி உணர்ச்சி வசப்பட்டுப் பேசினாள்.

''மாம்பழம், மாம்பழம் என்று வீதி தோறும் கூவுவோம். வீடுதோறும் கேட்போம். நம் வயிறு நிரம்பி விடும். 'மாம்பழத் தெய்வம்' நமக்குத் துணை புரியும். ஆம்; மாம்பழத்துக்காக ஆண்டியான குமரனும் அவன் பக்தர்களும் இருக்கும்வரை நமக்கு ஒரு குறையும் வராது.''



சென்னை பரங்கிமலை போலீஸ் அதிகாரி திரு கணபதி நாடார் அவர்களின் பேத்திகள் பானு, சசி கலா இவர்களது பரதநாட்டிய நிகழ்ச்சி சமீபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நான் கையைக் கழுவிக் கொண்டு நிம்மதியாகப் படுத்தேன்.

''கதை எப்படி?'' என்றார் மனைவியிடம் வறுமையில் வாடும் அந்த உழைக்கும் பத்திரிகையாளர்.

''என் அபிப்பிராயத்தை அதிலேயே எழுதியிருக்கிறேன்'' என்றாள் மனைவி அலட்சியமாக.

ஆவலோடு படித்தார் அந்தக் கதாசிரியர்.

''என்னை ரொம்பவும் புகழ்ந்திருக்கிறீர்கள். என்னைப் புகழாவிட்டால்தான் உங்களுக்குத் தூக்கமே வராதே!

அர்த்தத்துடன், அவசியத்துடன் புகழுவதில் நீங்கள் ரொம்பவும் சமர்த்தர்தான். ஆனால் இன்று அது பயனற்றதாய்ப் போய் விட்டது.

என்ன செய்வது?

நீங்கள் ஒரே ஒரு முறைதானே என் கழுத்தில் தாலி கட்டினீர்கள். அதுவும் ஒரு தாலிதானே கட்டினீர்கள்! நாலு மாசத்துக்கு முந்தி ஏதோ பெரிசாகப் புரட்டிக் கொண்டு வருவதாகக் கூறி என் தலையிலே வெண்ணெயை வைத்து என் கழுத்திலே கையை வைத்தீர்கள்! இன்னும் டிக்குப் போனீர்கள்!

இப்போது என் தலையிலேயும் உங்கள் தலையிலேயும் மாம்பழத்தை வைக்கத் நிர்மானித்திருக்கிறீர்கள்! பரவாயில்லை. ஏதோ பாடுபட்டுப் பிழைக்க வேண்டும் என்ற எண்ணம் வந்திருப்பது விசேஷந்தான்! ஆனால் தாலி எங்கே இருக்கிறது?

இன்னொரு முக்கியமான விஷயம்:

எதற்கெடுத்தாலும் தாலியா? தாலியைக் கொண்டுதான் ஒரு முறை உங்கள் ஆசையை நிறைவேற்றிக் கொண்டீர்களே! விண்டிக்கும் தாலி, கதைக்கும் தாலி! தாலியை விட்டால் பிழைக்க உங்களுக்கு வேறு வழியே தெரியாதா? சே! சே! வெட்கமில்லே உங்களுக்கு? —மனைவி கமலா.''



போர்முனை

அத்தியாயம் 25

தியாகத்தின் பொருள்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கொடுங்கோன்மையில் சிக்கித் தவித்த போதிலும், நம்மை நசுக்குகிற வெள்ளையனுக்குத் தலை வணங்குகிற சில தேசத் துரோகிகளைப் பற்றி உமாகாந்த் குறிப்பிட்டார் அல்லவா? தன்மானத்தைத் துறந்து, தன்னலனைக் கருதி அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள் என்றும் அம்மாதிரியான கபட நாடகங்கள் போடத் தமக்குத் தெரியாதென்றும் சொன்னாரே. அதைப் பற்றி எண்ணிப் பார்த்தான் வடிவேலு. 'மனைவியை இவர் ஏய்க்கிறாரே, அது கபடமில்லையா? சுயநலனை மனத்தில் கொண்டுதானே அவர் அவளுடைய கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்க மறுக்கிறார்?'

இப்படி ஒரு சந்தேகம் உருவான அடுத்த கணமே அதற்கு உள்ளத்தில் இடம் கொடாமல் உதறித் தள்ளினான் வடிவேலு. 'சே! என்ன கோணல் புத்தி எனக்கு? ஆட்சிபீடத்திலுள்ளோரின் மகிழ்ச்சிக்கு ஆளாகும் நோக்கத்துடன் அவர்களுடைய தாசானுதாசர்களாகக் காலத்தை ஓட்டும் உதவாக்கரைகளுக்கும் தேச சேவையையே உயிர் மூச்சாகக் கொண்டுள்ள உமாகாந்துக்கும் என்ன சம்பந்தம்? அவர் தமக்கென்று வாழாதவர்; நாட்டு மக்களுக்கு உரியவர். அவர்களை உய்விக்க அவர் ஒரு சிறு பொய்யைச் சொல்ல நேர்ந்தால் அதைப் பெரிது படுத்திக் கொண்டிருக்கலாமா நான்?'

டாக்சி ஒன்றைத் தேடிப் பிடித்து அவர்கள் தங்கியிருந்த முதல்தரமான ஆனால் ஆடம்பரம் அதிகமற்ற ஹோட்டலின் வாசலில் நிறுத்தி விட்டு மாடிப் படிகளிலேறி அவர்கள் அறையை மீண்டும் அடைந்தான் வடிவேலு.

கதவு சாத்தப்பட்டிருந்த போதிலும் உள்ளேயிருந்து பேச்சுக் குரல் கேட்டது.

பேச்சுக் குரலா அது? சாதாரணமாக அவர்கள் வார்த்தையாடிக் கொண்டிருப்பார்களேயானால் வெளியே ஓசை கேட்குமா? இருவரும் உரக்கக் கத்திப் பலமாகச் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் சத்தமல்லவா அது!

கதவைத் தட்டினான் அவன். உள்ளே வருமாறு அனுமதி கிடைத்ததும் திறந்து கொண்டு சென்றான். "ஆரம்பித்து விட்டீர்களா, மறுபடியும்?"

உமாகாந்த் சிரித்தார். "எங்களுக்கிடையில் இது முடிவில்லாத பிரச்னை. விடுதலை பற்றிய கவலையின்றி வீட்டுக்குள் நான் முடங்கிக் கிடக்க வேண்டுமென்று இவள் விரும்புகிறாள்; நாட்டுப் பற்றை அவள் நெஞ்சில் நிலைக்கச் செய்ய நான் நினைக்கிறேன்!"

"எனக்கொன்றும் நாட்டுப் பற்று இல்லாமல் போகவில்லை. வீட்டுப்பற்றும் உங்களுக்கு இருக்க வேண்டும் என்று கோருகிறேன், அவ்வளவுதான்!"

"குடும்ப நலனில் எனக்கு எப்போதுமே மிகுந்த அக்கறை உண்டு, தாரா! அதனால்தான்....."

"அப்படியானால் நான் சொல்கிறபடி கேளுங்கள். தேசத்துக்காக நீங்கள் உழைத்தது போதும். இனி சிறிது காலமேனும் எனக்காக வாழ்ந்து காட்டுங்கள்" என்றாள் தாரா.

"உனக்காகவும் உன் வயிற்றில் உருவாகியுள்ள நம் மகனுக்காகவும் தான் நான் பாடுபடுகிறேன். ஒரு நாள் இல்லையானால் ஒரு நாள் நான் பட்டிருக்கிற சிரமத்துக்கெல்லாம் பிரதி பலன் கிடைக்காமல் போகாது. இந்தியா சுதந்திரம் பெறும் நாள் அதிக தூரத்திலில்லை. அப்போது விடுதலை வீரர் உமாகாந்தை எல்லாரும் கொண்டாடுவார்கள். நன்றி மறவாத மக்கள் அவரைக் கௌரவிப்பார்கள். உயர் பதவியில் வைத்துப் போற்றுவார்கள். அதைக் கண்டு நீ பெருமைப்பட மாட்டாயா? உன் மகனை மடியில் வைத்துக் கொண்டு அவன் அப்பா அந்த உன்னத நிலையை அடையுமுன்னர் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தார் என்பதைக் கொஞ்சம் கர்வத்துடன் கதை கதையாகக் கூறி ஆனந்தப்பட மாட்டாயா?"


"அப்படிச் சொல்லுங்கள்!" என்று புதிதாக எதையோ உணர்ந்து கொண்டவள் போல் எழுந்தாள் தாரா. "உங்கள் அந்தரங்க அபிலாஷை என்னவென்பது இப்போது அம்பலமாகி விட்டது, பார்த்தீர்களா? நாலு தலைமுறைகள் ஆண்டு வரக் கூடிய அளவுக்கு ஏராளமான சொத்து இருந்தும் உங்களுக்குப் போதவில்லை. அன்பு மனைவியாக வாய்த்து அழகான குழந்தையாக அவன் பெற்றெடுத்துக் கொடுத்தாலும் திருப்தி அடைய மாட்டீர்கள்! பேருக்கும் புகழுக்கும் பேராசைப் படுகிறீர்கள்! மக்களெல்லாம் வியந்து பாராட்டுகிற மாபெரும் தலைவராக விளங்கவேண்டுமென்பது தானே உங்கள் லட்சியம்?"

"அத்தகைய நோக்கம் எனக்கு இருந்தால் அதில் தவறென்ன?"

"தவறுதான்" என்றாள் தாரா. "எல்லாரும் தலைவர்களாகி விட முடியாது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். முன்னுக்கு வரக்கூடியவர்கள் ஒரு சிலர்தான். மற்றவர்கள் எவ்வளவு முயன்றாலும் அடித்தளத்திலேயே கிடந்து உழல வேண்டியதுதான். இவர்களுடைய எண்ணிக்கை தான் அதிகம். விடுதலைப் போராட்டத்தில் கணக்கற்ற பேர்கள் உடலை வருத்திக் கொள்ளலாம்; எத்தனையோ ஆயிரம் மக்கள் மடிந்து சாகலாம். ஆனால் அவர்கள் அனைவருமே பிரசித்தி பெற்று விடுகிறார்களா? இல்லை! அவர்கள் அனைவருடைய துன்பங்களும் ஒன்றாய்த் திரண்டு புகழாக மாறி, அவர்களை நடத்திச் செல்கின்ற தலைவனைத்தான் சென்றடைகின்றன! சீரும் சிறப்பும் பெறாத் தொண்டன் ஏங்கினால் இறுதியில் ஏமாற்றம்தான் நெஞ்சைப் பிளக்கும்!"

"என்னுடைய அந்தஸ்து மேம்படுவதில் உனக்கு இஷ்டமில்லை; நாலு பேர் என்னை உயர்வாக மதிப்பது உனக்குப் பிடிக்கவில்லை. அதுதானே உன் போக்குக்குக் காரணம்? அதற்கு இவ்வளவு பெரிய பிரசங்கம் எதற்கு? சுலபமாய்ச் சொல்லி விட்டுப் போகலாமே?"

"முன்னுக்கு வர வேண்டும் என்கிற அரிப்பு இருப்பதில் குற்றமில்லை. ஆனால்



நம் தகுதியையும் திறமையையும்அளந்து வைத்துக் கொள்ள வேண்டும். இதோ இவரைக் கேட்டால் பொருத்தமாக, 'எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விட வேண்டாம்' என்பார்!''

''டாக்ஸி காத்திருக்கிறது'' என்றான் வடிவேலு.

படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார் உமாகாந்த்.

''சற்று இருங்கள்'' என்ற தாரா, கலைந்திருந்த அவரது தலையைச் சீவி விட்டாள். சட்டைப் பித்தான்களைப் போட்டாள், சுருக்கங்களைத் தடவிக் கொடுத்துச் சரிப்படுத்தினாள். கடைசியாகக் கதர்க் குல்லாயையும் தலையில் அணிவித்து, ''உம், போகலாம்'' என்று உத்தரவு கொடுத்தாள்.

நண்பனை அணைத்துக் கொண்டு செல்வது போலப் பாவனை செய்து, வடிவேலுவின் தோள் மீது கை போட்டு நடந்தார் உமாகாந்த். உண்மையில் அன்பு மிகுதியினால் அவர் அவனைத் தழுவிக் கொள்ளவில்லை; நோவைத் தாள முடியாமல் தள்ளாடுகிற உடலுக்கு ஊன்றுகோலாக அவனைப் பயன்படுத்திக் கொள்கிறார் என்பதைத் தாரா சற்றேனும் சந்தேகிக்கவேயில்லை.

''பாவி! என் மனைவி எவ்வளவு சாமர்த்தியசாலி பார்த்தீர்களா? தலைவனாக நான் தகுதியற்றவன் என்பதை நொடிப்பொழுதில் தீர்மானித்து விட்டாளே!'' என்று மனம் நொந்து கூறியபடியே படிகளில் இறங்கினார் தேசபக்தர் உமாகாந்த்.

''இதென்ன சோதனை? என்னை மறுபடியும் அழவிடப் போகிறீர்களா?'' என்று தாரா கேட்ட போது, கண்ணீர் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது அவள் விழிக்கோணங்களில். ''வாழ்க்கையில், திருப்தியும் நிறைவும் நிலவ வேண்டும், கிடைக்காததற்காக மனம் குமையாமல் கிடைத்ததற்காகச் சந்தோஷப்படுகிற மனப்பாங்கை வளர்த்துக் கொள்வது நல்லது என்றால் உங்களுக்குப் புரிய மாட்டேனென்கிறது. நான் கூறுவது எதிலுமே உங்களுக்குச் ச்ரத்தையில்லை. அதுதான் உண்மை!''

தட்டுத் தடுமாறிக் காரில் ஏறினார் உமாகாந்த். பதற்றத்துடன் ''என்ன? என்ன?'' என்று வினவிய தாராவிடம் காரின் 'புட்போர்ட்' தடுக்கி விட்டதாகப் புளுகினார். வண்டி நகர்ந்ததும் உமாகாந்த் சர்ச்சையைத் தொடங்கி விட்டார்.

''ஒரு தடவை சுபாஷ் பாபு சொன்னது எனக்கு நினைவுக்கு வருகிறது:- 'நன்றாக முற்றி மலர்ந்த ரோஜாவின் நறுமணம் உனக்கு வேண்டுமா? அப்படியானால் அந்தச் செடியில் முட்கள் இருப்பதை நீ ஒப்புக் கொண்டுதானாக வேண்டும். புன்னகையுடன் புலரும் காலைப் பொழுதின் இனிமையில் நீ லயிக்க வேண்டுமா? அப்படியானால் இரவு முழுதும் இருளில் நீ வாழ்ந்துதானாக வேண்டும்! சுதந்திரம் அளிக்கும் ஆனந்த சுகத்தை, விடுதலை தரும் ஆறுதலை நீ அடைய வேண்டுமா? அப்படியானால் அதற்குரிய விலையை நீ கொடுத்துத் தானாக வேண்டும்! சுதந்திரத்தின் விலை -துன்பம்! தியாகம்!' தியாகம் புரியாமல் என்னால் இருக்க முடியாது, தாரா!''

''தியாகமாம் தியாகம்! நீங்கள் தியாகம் செய்யவில்லை; தியாகத்தை உங்கள் மீது திணித்துக் கொள்கிறீர்கள்!''

உமாகாந்த் கோபப்படவில்லை. தனக்குச் சமானமான பலமுள்ள ஒருவனோடு குஸ்திச் சண்டையிடும் வீரன் எதிரி எந்தக் கணத்தில் ஒரு தவறு செய்வான், அதைப் பயன்படுத்திக்கொண்டு அவனைத் தாக்கலாம் என்று உன்னிப்பாக அவனுடைய ஒவ்வோர் அசைவையும் கவனிப்பது போல் இவரும் தாராவின் வாதத்தில் பலவீனம் ஏற்படுமா என்று எதிர்பார்ப்பவராகக் கூர்ந்து கேட்டார்.

''தாரா! நீ கூறுவது வேடிக்கையாக இருக்கிறதே? தியாகத்தை என் மீது நானே திணித்துக் கொள்கிறேனா? அப்படியென்றால்....?''

''சர்க்கரை நிறைந்துள்ள டப்பாவில் உப்பு என்று பெயர் எழுதி ஒட்டி விட்டுக் கையை நுழைத்து அள்ளி எடுத்துத் தின்கிறவன், 'நான் உப்பைச் சாப்பிடுகிறேன், எல்லாரும் என்னைப் பார்த்துப் பரிதாபப் படுங்கள்' என்றால் அது நியாயமா....?''

''இல்லைதான்.''

''அதே போலத்தான் நீங்களும்! தியாகம் என்ற வார்த்தையின் அர்த்தத்தையே மாற்றி விடுகிறீர்கள். நமக்கு மிகவும் பிடித்தமான ஒரு பொருளைத் துறந்து விடச் சித்தமாயிருந்தால் அதைத் தியாகம் என்கிறோம் இல்லையா? நாட்டுக்காக நீங்கள் நலிவுறுவதை அந்தப் பெயரிட்டு எப்படி அழைப்பது? தேச சேவை உங்களுக்குக் கற்கண்டாக இனிக்கிற விஷயமாயிற்றே! ஊர்வலங்களும் அதனால் கிடைக்கும் ஜெயில் வாசமும் ஆர்ப்பாட்டங்களும் அதன் பலனாகப் போலீசாருடன் நடத்தும் போராட்டங்களும் இயக்கங்களும் அவை அளிக்கும் இன்னல்களும் உங்கள் ரத்தத்தில் ஊறிப் போயிருக்கின்றனவே! உங்களுக்கு மிகவும் பிடித்தமான, நீங்கள்



சீரான ஆகாரமில்லாததால்
நீங்கள்
மெலிந்திருக்கிறீர்களா?

ஆல்போஸாங் சாப்பிடுங்கள்

மிகச் சிறந்தது
சாதாரண உணவுடன் சேர்ந்து
சிக்கனமான, விஞ்ஞான முறையில்
ஊட்டமளிப்பது

தேநீர், காப்பி, பால், கஞ்சி, பழரசம் முதலியவைகளுடன் சேர்த்து அருந்தினல் மிக ருசியாக இருக்கும். சிறு குழந்தைகளுக்கும், வளரும் பிராயத்திலும், பிரசவகாலத்தில் தாய்மார்களுக்கும், சிந்திக்கும் தொழிலாளிகளுக்கும், முதியவர்களுக்கும், பலவீனம் இரத்தமின்மை மற்றும் நோயிலிருந்து தேறி வரும் போதும் ஆல்போ-ஸாங் சிறந்த டானிக் உணவாகிறது.



பௌடர் மற்றும் மாத்திரைகளாகவும் கிடைக்கிறது.

ஜே. & ஜே. டீஷேன்,
ஹைதராபாத்—டெக்கான்

மேற்கொள்ளத் துடிக்கின்ற இவற்றையெல்லாம் எனக்காக நீத்து விடுவீர்களேயானால் அதுதான் உண்மையான தியாகம். அப்படியின்றி அவற்றையே பின்பற்றிச் சென்றீர்களேயானால் அது முழுக்க முழுக்கச் சுயநலம்!''

வகையாகத் தன்னிடம் அவள் மாட்டிக் கொண்டு விட்டாள் என்கிற நினைப்பில் உமாகாந்த் புன்னகை பூத்தார். ''தாரா! நீ தோற்றுப் போனாய்'' என்று முடிவு கட்டிய பிறகே தம்முடைய கட்சியை எடுத்துக் கூறினார்:

''தேச சேவையைச் சுயநலம் என்று சுட்டிக் காட்டுகிறாய். நான் ஒப்புக் கொள்கிறேன். அதிலே ஓர் இன்ப போதை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அப்படிச் சுதந்திர தேவியின் திருப் பாதங்களில் என்னை நானே அர்ப்பணித்துக் கொள்ளும்போது சொத்துரிமைகளை, சுக போகங்களை, என் குடும்பத்தை — பெற்றவர்களை, உற்றார் உறவினர்களை, கட்டிய மனைவியை, அவள் சுமந்திருக்கும் என் அருமைக் குழந்தையை—இவற்றையெல்லாம் நான் மறந்து விட, துறந்து விடத் தயாராக இருக்கிறேன், இல்லையா? அதைத் தியாகம் என்று சொல்லாமல் வேறு என்ன பெயரிட்டு அழைப்பாய், தாரா?''

''துரோகம் என்பேன்!'' என்றாள் தாரா பளிச்சென்று.

முன் ஸீட்டில் உட்கார்ந்திருந்த வடிவேலு இந்த வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டவனாய்த் திரும்பினான். உமாகாந்தின் முகத்தில் பயம் குடி கொண்டிருப்பதைக் கண்டான்.



அத்தியாயம் 26

தலைவர் தரிசனம்

கல்கத்தா 'பிரஸிடென்ஸி' கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியர், 'ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர் நாம்' என்கிற ஆணவத்தில் இந்திய மாணவர்கள் சிலரை அவமதித்து விட்டார். ஆத்திர மடைந்தார்கள் இளைஞர்கள். அதிகாரிகளிடம் சென்றார்கள். தாறுமாறாகப் பேசிய அந்தப் பேராசிரியர் தமது நடத்தைக்காக மன்னிப்புக் கோராது போனாலும் வருத்தப் படுவதாகவாவது தெரி



விக்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை வெளியிட்டார்கள். கல்லூரித் தலைவர்களின் காதுகளில் இதெல்லாம் ஒன்றும் ஏறவில்லை. கண்மூடி மௌனிகளாய் இருந்து விட்டார்கள்.

மாணவர்களுள் ஒருவன் மற்றவர்களைக் காட்டிலும் தீவிரவாதி. நாளைக்கு நான்கு முறை நீதி கோரி மேலிடத்துக்கு நடந்தான். நன்மை பிறக்கவில்லை.

பொறுமை இழந்தான் அவன். பொறுக்கி எடுத்த சில நண்பர்களுடன் அவன் பேராசிரியருக்கே பாடம் கற்பிக்கத் துணிந்தான். அடிமையாகக் கிடக்கும் நாடுதான் என்றாலும் அதன் ஆன்மா செத்து விடவில்லை என்பதை அந்த ஆங்கிலேயர் அன்றைக்கு நன்றாக அறிந்து கொண்டார். அடியாவது அடி! அடேயப்பா!

யார் இந்தக் காரியத்தைச் செய்தது என்பதில் யாருக்குமே லவலேசமும் சந்தேகமிருக்கவில்லை. அவனைக் கூப்பிட்டு விசாரித்தார்கள் சரமாரியாகக் கேள்விகளை அடுக்கினார்கள். தன் சகாக்களைக் காட்டிக் கொடுத்து விடவில்லை அந்த வீர வாலிபன். முழுப் பொறுப்பையும் தானே ஏற்றுக் கொண்டான். தண்டனை பெறவும் அவன் தயாராக இருந்தான்.

பிரமித்தார்கள் கல்லூரி அதிகாரிகள். பின்னர் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, கனிவாகப் பேசுவது போல் நடித்தார்கள். கருணை காட்டுவது போல் குழைந்தார்கள். ''நீ செய்தது பெரிய தவறல்லவா? சகலரும் அறிய அதனை மறைக்காமல் ஒப்புக் கொண்டு விடு. உன்னை ஒன்றும் செய்யாமல் விட்டு விடுகிறோம்'' என்றார்கள்.

இந்தப் பசப்பு வார்த்தைகள் பரிகாசத்துக்கு இடமளிப்பதாய்த் தோன்றியது இளைஞனுக்கு. அநாயாசமாகச் சிரித்தான் அவன். அலட்சியமாக அவர்களைப் பார்த்து, ''அடித்தது உண்மை! அந்த அந்நியனுக்கு அது தேவைப்பட்டதும் உண்மை!'' என்றான் மிகவும் கண்டிப்பான குரலில்.

பட்டவர்த்தனமாக அவன் பேசியதைச் சகிப்பார்களா பதவியிலுள்ளவர்கள்? கல்கத்தா சர்வகலாசாலையிலிருந்தே அந்த மாணவனைத் துரத்திவிட்டார்கள்.

இன்றைக்குக் கலாசாலையிலிருந்து துரத்தப்படுகிறவன் நாளைக்கு ஆங்கிலேயனை இந்த நாட்டை விட்டே துரத்தி அடிக்க அடிகோலப் போகிறான் என்பதைப் பாவம், அந்தப் பேராசிரியர்கள் அப்போது உணரவில்லை.

அன்று முதல் சுபாஷ் போஸ் ஆட்சி பீடத்திலுள்ளோருக்குச் சிம்ம சொப்பனமாய் விளங்கினார். இல்லாமலா அவர் தாய் நாட்டில் அடியெடுத்து வைத்த மறுகணமே கைது செய்யப் படுவார் என்பதாகப் பிரிட்டிஷார் முன்கூட்டியே அலறிப் புடைத்துக் கொண்டு அறிவித்திருந்தார்கள்?

அப்பேர்ப்பட்ட தலைவரைக் காணப் போகிறோம் என்பதால் உண்டான உள்ளக் கிளர்ச்சி வடிவேலுவைப் பம்பாய் வந்து சேர்ந்தது முதலே ஊசி முனையில் நிற்க வைத்தது; உறக்கம் கூடப் பிடிக்காமல் உபத்திரவப் படுத்தியது. ஆனால் அவனுடைய உற்சாகமெல்லாம் தாராவுக்கும் உமாகாந்துக்கும் இடையே நடைபெற்ற வாய்ப் பூசல்களைச் செவியுற்ற பிறகு இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்தது. 'இவர்களிடம் அசட்டுத்தனமாக வந்து மாட்டிக் கொண்டோமே? இத்தனை சண்டை சச்சரவுகளுக்கிடையில் துறைமுகத்துக்குப் போகா விட்டால்தான் என்ன?' என்று வருத்தப் பட்டான். இவ்வளவுக்கும் இடையில் ஒருவித இன்பம். மல்யுத்தம் புரியும் இருவரைப் பார்க்கிற போது ஏற்படும் பரபரப்பு, மெய்சிலிர்ப்பு— யார் ஜெயிக்கப் போகிறார்கள்?' அவ்விருவரும் தொடுத்துக் கொண்ட சொல்லம்புகளின் அமைப்பையும் அவை பாயும் வேகத்தையும் தைக்கும் ஆழத்தையும் அனுமானிப்பதில் அவன் ஆர்வம் காட்டினான்.

தாராவுடைய கட்சியில் நிறைய நியாயம் இருப்பதாய்த் தோன்றியது அவனுக்கு. தேசத்தைக் காப்பாற்ற எத்தனையோ பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் எள் என்பதற்கு முன்னால் எண்ணெயாக நிற்க எண்ணற்ற மக்கள் இருக்கிறார்கள். ஆனால் தாராவுக்கு இருப்பது உமாகாந்த் மட்டும்தானே? கல்யாணமாகிய ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே கட்டிய மனைவியை, புருஷனை நம்பி அவன் நிழலில் ஒதுங்கியிருப்பவளை நட்டாற்றில் விட்டு விட்டு அதிலும் அவள் கர்ப்பிணியாக இருக்கும் சமயத்தில் அவள் கதி என்ன வானால் நமக்கென்ன என்கிற ரீதியில் இவர்பாட்டுக்குத் தேச சேவை என்றும் விடுதலைப் போராட்டம் என்றும் ஏற்கெனவே சீர்கெட்டிருக்கும் தமது உடலை மேலும் வருத்திக் கொள்வாரேயானால் அது துரோகமாகாதா?

ஒரே வார்த்தையில் உமாகாந்தை எவ்வளவு சாதுர்யமாக மடக்கி விட்டாள் தாரா?

வாயடைத்துப் போனவர் போலத் தான் மோட்டாரின் பின் புறத்தில் உட்கார்ந்திருந்தார் உமாகாந்த்.

இலவசம்

கவர்ச்சி மிகுந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்

தேவைக்கு ஏற்பத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மன மகிழ்வு பெறலாம்.



ஓ.கே. தயாரிப்புகளின் பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள்.

★ ஓ.கே. வனஸ்பதி ★ ஓ.கே. டபிள் ரிஃபைன்ட் ஆயில் ★ கோல்டன் ஸாலட் ஆயில் ★ ஓ.கே. சந்தன சோப் ★ ஓ.கே. ஓரியண்டல் ரோஸ் சோப் ★ ஓ.கே. கிங் சோப் ★ மியோகே சோப் ★ சோப் சிப்ஸ்

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு ஓ.கே. தயாரிப்புகளிலும் உள்ள பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள். அவற்றிற்குப் பதிலாக, உங்கள் அருகிலுள்ள ஓ.கே. வியாபாரியிடமிருந்து, நீங்கள் விரும்பும் அளவிலும், வடிவிலும் கவர்ச்சி மிகுந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களைப் பெறுங்கள்.

இந்த விசேஷமான பரிசுத் திட்டம் பற்றிய இதர விவரங்களை அறிய உங்கள் ஓ.கே. வியாபாரியிடமிருந்து, படங்களோடு கூடிய 'போல்டரை' (folder) வாங்கிப் பாருங்கள்.



EP-EAC-3-TAM

தயாரிப்பாளர்கள்:

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மதராஸ்-1

வாட்டர்பரீஸ்
சிவப்பு லேபில்
காம்பவுண்ட்

இருமல்,
ஜலதோஷங்களுக்கானது



நான்கு நல்ல காரணங்கள் இதோ

1	இருமலையும், ஜலதோஷத்தையும், இமைப் பொழுதில், கச்சிதமாகக் கரைக்கிறது வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்.	**2**	கபம் அறுத்து, நுரையீரலைச் சுத்தப்படுத்தும் கிரியோஸோட், க்வயகால் அடங்கியது வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்.	**3**	வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் வெறும் நோய் நிவாரணி மட்டுமல்ல, நம்பிக்கைக்குகந்த டானிக்குமாகும். நோயை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு உதவுகிறது.	**4**	வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் பசியைத் தூண்டுகிறது. ஜீரண சக்தியை வளர்க்கிறது. ரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறது. தாதுப் பொருள் நஷ்டத்திற்கு ஈடுசெய்கிறது.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
சிவப்பு லேபில்

வார்னர்-லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது)

எதையோ பறிகொடுத்து விட்டவர்போல் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு ஒரு மூலையில் ஒண்டிக் கொண்டிருந்தார். வெற்றிச் சிகரத்தில் தமது ஜெயக் கொடியை நாட்ட யத்தனித்தவர்; கீழ் நோக்கி, தோல்வி என்னும் அதள பாதாளத்துக்குத் தாம் நழுவி விழுந்து சென்று கொண்டிருப்பதாய்க் கருதுகிறாரா?

போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்து நிற்க வேண்டிய இடத்தில் மோட்டார் நிற்கும் வரையில் யாருமே நாவசைக்கவில்லை.

காரை விட்டிறங்கியதும் தாரா சுற்றுமுற்றும் பார்த்தாள். "எங்கே வந்து சேர்ந்திருக்கிறோம் நாம்?"

ஜன சமுத்திரம் திரண்டிருப்பதைப் பார்த்ததும் அவனுக்குத் திக்கென்றிருந்தது. சாரிசாரியாக இன்னும் பலர் வந்து கொண்டிருப்பதைக் கண்டதும் அவனுக்குச் 'சுரீர்' என்று இதயத்தில் ஏதோ தைத்துத் துன்பம் அளித்தது. அலையலையாகத் தென்பட்ட தலைகளுக்கு மேலாக அலைகடலின் மீது மிதந்து வந்த சில கப்பல்களின் பிரும்மாண்டமான புகைபோக்கிகளையும் தந்திக் கம்பங்களையும் நோக்கிய போது அவன் நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது.

கதர் கட்டியவர்கள் பலரும் கொடி பிடித்தவர்கள் சிலருமாய்ப் பாரத நாட்டின் தவப் புதல்வரை வரவேற்கச் சென்று கொண்டிருந்தார்கள்.

"நடப்போமா?" என்று கேட்டார் உமாகாந்த்.

தாரா பதறப் போகிறாள், கதறப் போகிறாள், அலறித் துடிக்கப் போகிறாள் என்று எதிர்பார்த்தான் வடிவேலு.

கண்ணீர் அருவி சொரியவில்லை, புலம்பலொலி பிறக்கவில்லை, புன்னகை மாறவில்லை,

"நன்றாக என்னை ஏய்த்து விட்டீர்களே?" என்றபோது விளையாட்டாகவா அவள் அந்த வார்த்தைகளைக் கூறினாள்?

உள்ளம் ஒடிந்து போகிற ஓசை;
வயிறு கலங்குகிற சத்தம்;
ஏமாற்றத்தின் எதிரொலி—
அந்தச் சொற்கள்!



பத்திரிகைக்குக் கதைகள் அனுப்பிய ஆரம்ப எழுத்தாளரின் அனுபவபூர்வமான கனவு:

"உங்கள் கதையைக் குப்பைக் கூடையில் போட்டு விட்டோமே என்று வருந்த வேண்டாம்."

இருப்பினும் கணவனின் கட்டளையைச் சிரமேற்கொண்ட மனைவியாக அவள் அவருடன் கரம் கோத்துச் சென்றாள். கடமையை எடுத்துக் கூறும் உரிமை பெற்றிருப்பதாய்க் கருதி அவருடன் தனித்திருக்கையில் தர்க்கத்தில் ஈடுபடத் தயங்காதவள், பொது விடத்தில் பெருக்கெடுக்கும் தன் ஏமாற்ற உணர்ச்சிகளையெல்லாம் மிகுந்த பிரயாசைப்பட்டு உள்ளடக்கிக் கொண்டு, புண்பட்ட இதயத்தின் வேதனையை மறைத்துக் கொண்டு அவர் மனம் கோணாமல் நடந்து கொள்கிற அற்புதத்தைக் கண்டு நெகிழ்ந்து போனான் வடிவேலு. 'பண்பின் சிகரம்' என்று வாய் முணுமுணுக்க அவர்களை முன்னே அனுப்பி விட்டுச் சற்றுத் தாமதித்து நின்று தன் கண்களை அவர்கள் அறியாதவாறு துடைத்துக் கொண்டான்.

பத்தடி எடுத்து வைப்பதற்குள், "நடப்பதற்குச் சிரமப்படுகிறீர்களே?" என்றாள் தாரா, கவலையோடு. உமாகாந்தின் உண்மை நிலை பக்கத்திலிருந்த போது அவனுக்கு நன்றாகப் புரிந்து விட்டது.

"வடிவேலு எங்கே?" என்று கேட்டார் உமாகாந்த். தமக்கு வலப்பக்கத்தில் அவனை வரச் செய்து தன் உடல் பளுவை அவன் மீது சுமத்தி, தாராவின் மீது பாரத்தைக் குறைத்துக் கொண்டு மேலே சென்றார்.

திடீரென்று ஜனங்களிடையே ஒரு சலசலப்பு. "அதோ! அதோ!" என்று வியப்புடன் சுட்டிக் காட்டுபவர்கள்; "எங்கே? எங்கே?" என்று ஆர்வத்துடன் கேட்பவர்கள்; முண்டியடித்துக் கொண்டு முன்னால் போக யத்தனிக்கிறவர்கள்; எம்பிக் குதிப்பவர்கள்; எட்டிப் பார்க்கிறவர்கள்.

மூவரும் அவசரப்பட்ட போதிலும் அங்குலம் அங்குலமாய்த்தான் நகர முடிந்தது. போலீஸ் பந்தோபஸ்து வேறு பலமாய் இருந்தது. காலடியில் கனமாக ஏதோ தட்டுப்பட்டது வடிவேலுவுக்கு. கல்லோ மரமோ எதுவென்று அவன் யோசிக்கவில்லை. அதன் மீது ஏறி நின்றான். தலைக்கு மேலே கரங்களை உயர்த்திக் கூப்பினான்.

வழுக்கைத் தலை, வட்டக் கண்ணாடி; தீர்க்கமான மூக்கு, தீட்சண்யமான பார்வை; மங்காத புன்னகை, மாசு மருவற்ற முகம்; நெடிதுயர்ந்த தோற்றம், நெஞ்சில் நிறைகிற தேஜஸ்.

விண்ணை முட்டும் வாழ்த்தொலிகள்; அத்துடன் விரவிப் பாயும் விடுதலைக் கோஷங்கள்.

தலைவரின் தரிசனம் கிடைத்து விட்டது வடிவேலுவுக்கு!

அதோ! அவர் தமது கைகளைத் தூக்குகிறார்; அமைதி நிலவச் செய்கிறார்! ஆ! அவர் அதரங்கள் அசைகின்றன; எதையோ கூறப் போகிறார்!

''இந்தியாவின் விடுதலைக் கொடியைப் பறக்க விட்டுக் கொண்டேயிருங்கள்!''

ஆம்! சதாசர்வ காலமும் உயரப் பட்டொளி வீசிப் பறந்து கொண்டேயிருக்க வேண்டும் விடுதலைக் கொடி! கணப் பொழுது கூடக் கண்ணயராமல் அது காற்றிலே படபடப்பது போல் அந்நிய ஆட்சிக்கு எதிராக நாம் நெஞ்சம் பதைபதைத்து எழ வேண்டும்! அதைத்தானே உணர்த்துகிறார் அவர்?

மேற்கொண்டு அவரைப் பேச விடவில்லை, கைது செய்து அழைத்துப் போக வந்த போலீஸ் அதிகாரிகள்.

திடுமென வடிவேலுவுக்கு அருகில் ஒரே களேபரம். ''சுபாஷ் பாபு! சுபாஷ் பாபு!'' என்று கத்திக் கொண்டு பித்துப் பிடித்த ஒருவனைப் போலக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னால் ஓடினார் உமாகாந்த்.

'ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் போதும் குத்து வலியை அனுபவித்தவர், இப்போது தலைதெறிக்க ஓட எங்கேயிருந்து தெம்பு பெற்றார்?' என்று ஒரு விநாடி அதிசயித்தான் வடிவேலு.

அடுத்துத் தீனக்குரலில் கணவனைக்கூவி அழைத்தபடியே அவர் பின்னால் போக முயலும் தாராவின் மீது அவன் பார்வை நிலைத்தது.

நின்ற இடத்திலிருந்து கீழே குதித்தான்; உமாகாந்தைத் துரத்திப் பிடிக்கப் பாய்ந்தான். இடித்துக்கொண்டும் மிதித்துக் கொண்டும் தள்ளிக் கொண்டும் முட்டிக் கொண்டும் வேகமாய் முன்னேறினான் வடிவேலு.

'ஐயோ! இரும்புத் தொப்பிகள் அணிந்து கைத் தடிகளையும் வைத்துக் கொண்டிருக்கிறார்களே இரு போலீஸ்காரர்கள்; அவர்களால் உமாகாந்துக்கு ஏதேனும் துன்பம் நேராதிருக்க வேண்டுமே?'

அவ்விருவரும் தேசபக்தர் உமாகாந்தைத் தடுத்து நிறுத்திவிட்டார்கள்.

'நல்ல வேளை' என்று நினைத்த வடிவேலுவின் நிம்மதி கணப் பொழுது கூட நீடிக்கவில்லை. பற்றிய கைகளிடமிருந்து தம்மை உதறி விடுவித்துக் கொண்டு சுபாஷ் பாபு ஏறியிருந்த போலீஸ் மோட்டாரை நோக்கித் தாவினார் உமாகாந்த்.

உயர்தரப் போலீஸ் உத்தியோகஸ்தன் ஒருவன் — ஆங்கிலேயன் — அப்போது அவர் முன்னால் எதிர்ப்பட்டான். எக்களிப்புடன் அவரை எட்டி நிற்குமாறு எச்சரிக்கை செய்தான்.

அவ்வளவுதான்! ''சுபாஷ் பாபுவின் மீது கைவைக்கத் துணிந்தவன்தானே நீ?'' என்று பயங்கரமாகக் கர்ஜித்தார் உமாகாந்த். கையை ஓங்கினார். அது மீண்டும் கீழிறங்கிய போது தமது பலமனைத்தையும் ஒன்று திரட்டி அந்தக் கரத்துக்கு அனுப்பி வைத்தார்.

அதிகாரியின் கையிலிருந்த தடி சுழன்றது.

உமாகாந்த் தரையில் உருண்டார்.

போலீஸ் உத்தியோகஸ்தரின் தடி சக்கர வட்டமாய் ஒருமுறை சுழன்று மீண்டும் அவரைத் தாக்கியது. (தொடரும்)



சந்தேகமேயில்லை...
கோத்தாரி மல்
மிகச் சிறந்தது

புது வெள்ளம்



அத்தியாயம் எட்டு

இரு சகோதரிகள்

ஒரு நாள் அதிகாலையில் முருகையன் தனக்குப் பயிற்சியளித்த கருப்பையாவைத் தேடிக் கொண்டு அவனுடைய வீட்டுக்குப் புறப்பட்டான். ஊரின் மறு எல்லையில் தோற்றுவிக்கப்பட்டிருந்த தொழிலாளர் குடியிருப்பில் கருப்பையாவின் வீடு இருந்தது.

குடிசைகளைப் போன்ற நூற்றுக் கணக்கான சின்னஞ் சிறு வீடுகள். கீற்றுக் குடிசைகள், தகரக் கொட்டகைகள், ஓட்டுத் தாழ்வாரங்கள் இப்படிப் பல் வேறு வகை உருவங்களில் அவை காட்சி யளித்தன. ஊருக்குள் இருந்த ஒழுங்கும் துப்புரவும் வசதிகளும் அங்கு கிடையா.

பெருமாள்சாமி தன்னிடம் கூறிய செய்திகளை நினைவுபடுத்திக்கொண்டான் முருகையன். உலகம் முழுவதுமே



அகிலன்

பெரும்பாலான உழைப்பாளர்களின் நிலைமை ஒன்றுபோல்தான் இருக்கும் போலும்! பெரியபாளையம் கிராமத்தின் உழவர்களின் தெரு. சென்னை நகரத்தில் வாழும் கூலிகளின் குடிசைகள், இங்கே தொழிலாளர்கள் வசிக்கும் குடியிருப்பு எல்லாம் ஒன்று போலத்தான் இருந்தன.

ஏற்கனவே தங்களுக்கு இருந்த வசதிக் குறைவுகளை அவர்கள் தங்களுடைய அறியாமையால் இன்னும் அதிகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். குப்பை கூளம், கழிவு நீர், கந்தல் துணி, இவற்றுக்கு நடைபாதையில் பஞ்சமில்லை. நான்கு பேர் ஓரிடத்தில் சேர்ந்து வாழும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகளை அங்கு யாருமே சட்டை செய்யக் காணோம். முருகையன் பெருமூச்சு விட்டுக்கொண்டே நடந்தான். தெருவில் தென்பட்டவர்களிடம் விசாரித்துக் கருப்பையாவின் வீட்டைக் கண்டுபிடித்தான்.

வீட்டுக்குள் நுழையும் போது யாரோ ஒரு பெண் பிள்ளை தன்னுடைய இரண்டு வயதுப் பையனின் முதுகில் பளீர் பளீரென்று அறைந்து கொண்டிருந்தாள்.



பையன் வீறிட்டழுதகுரல் கேட்டுக் கருப்பையா ஓடிச்சென்று அப்பெண் பிள்ளையைத் திட்டினான். எதிர்பாராத விதமாக முருகையனைக் கண்டவுடன் அவர்கள் இருவருக்குமே நிலைமை தர்மசங்கடமாகி விட்டது. கருப்பையா நாணித் தடுமாறிக்கொண்டு முருகையனை வரவேற்றான்: அந்தப் பெண் சிறுவனின் வாயைப் பொத்திப் பரபரவென்று உள்ளே இழுத்துக் கொண்டு சென்றாள். அவளுடைய அடங்காத ஆத்திரம் சமையல் அறைக்குள் முணுமுணுப்பாக வெளிப்பட்டது.

''ஒண்ணுமில்லே. என்னோட மருமகள் கொஞ்சம் முன்கோபக்காரி. அடிக்கடி இந்தப் பச்சைப் பாலகனைப் போட்டு அடிச்சப்புடறா. குழந்தையின்னு இருந்தால் தொல்லை கொடுக்காமல் இருக்குமா என்ன?''

அவனுடைய மகனைப் பற்றி விசாரித்தான் முருகையன். மகனும் தகப்பனாரைப் போலவே சுரங்கத்தில் வேலை பார்த்து வந்தானாம். மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் அவனுக்குக் கல்யாணம் நடந்ததாம். கல்யாணம் நடந்து ஒரு வருடத்துக்கெல்லாம்....

அந்தச் செய்தியைக் கருப்பையா முருகையனிடம் தெரிவித்த போது அவனுடைய குரல் தழுதழுத்தது. கவனக் குறைவின் காரணமாக அவன் சுரங்கத்துக்குள் விபத்துக்குள்ளாகி உடனடியாக இறந்து விட்டானாம். பேரன் பிறந்த மகிழ்ச்சியையே துக்க நினைவாக மாற்றி விட்டதாம் அவனுடைய மகனின் மறைவு. அதிலிருந்து அவனுடைய மருமகளின் குணமும் அடியோடு மாறிச் சிடுசிடுப்பும் ஆத்திரமும் கொண்டவளாக ஆகிவிட்டாளாம்.

''சுரங்கத்தில் அடிக்கடி விபத்து நடக்குமோ?'' என்று கேட்டான் முருகையன்.

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே. ஆயிரத்திலே ஒருத்தனோ ரெண்டு பேரோ கவனக் குறைவினாலே எப்போதாவது அடிபட்டு விழுந்திடுவாங்க. வயல் வரப்பிலே தெம்மாங்கு பாடிக்கிட்டே வேலை செய்யறாப்பிலே இங்கே நடந்துக்கிட்டா முடியுமா? கூடுமான வரையிலே நெஞ்சிலே பயத்தை வைச்சுக் கண்ணுங்கருத்துமா தொழில் செய்யணும். என்னோட மகன் இருந்தானே, அவனுக்குப் பொறுப்பும் பத்தாது. அலட்சியமா நடத்துக்கிட்டு ஆபத்தைத் தேடிக்கிட்டான்.''

தன் மருமகளைப் பற்றியும் கூறினான் கருப்பையா. ''சுரங்கத்திலே இப்போ பெண்களும் வேலை செய்யிறாங்களே, அவங்களைப் போல் இவளையும் நான் வேலைக்கு அனுப்பலாம். ஆனால் அது எனக்குப் பிடிக்கல்லே. வீட்டோட இருந்து பிள்ளையை வளர்த்துக்கிட்டு, எனக்குச் சமையல் செய்து போட்டால் போதும்னு நினைக்கிறேன்.''

சுரங்கத்தில் அப்போது ஆண்களுக்கு உதவியாகப் பெண்களும் வேலை பார்த்து வந்தார்கள். கணவனும் மனைவியுமாகக் குடும்பம் குடும்பமாய் வேலை பார்த்தவர்களும் உண்டு. ஆனால் முருகையனுக்கு என்னவோ பெண்கள் அவ்வளவு கடுமையான வேலையில் பங்கு கொண்டது பிடிக்கவில்லை. என்ன செய்வது? ஏழைகளுக்கு வருமானம் குறைவாகவும் வயிற்றுப் பசி அதிகமாகவும் இருந்து தொலைக்கிறதே! போதாக் குறைக்குக் குழந்தைகளையும் பெற்றுக் கொண்டு குடும்பத்தைப் பெருக்கி விடுகிறார்கள்.

வேலைக்கு நேரமாகி விட்டதால் கருப்பையா பழைய சோறு சாப்பிடுவதற்கு அடுக்களைக்குள் நுழைந்தான். அப்போது வாசற் பக்கத்தில் நிழலாடியது. திரும்பிப் பார்த்தான் முருகையன். சாந்தாவின் தங்கை கல்யாணி அங்கே நின்று கொண்டிருந்தாள். அவளை அந்த இடத்தில் கண்டவுடன் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''என்ன கல்யாணி, நீ எங்கே இங்கு வந்தாய்?''

''நான் தினமும் இங்கேதான் வந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் எங்கு இங்கே வந்தீர்கள்?'' கலகல வென்று சிரித்துக் கொண்டே உள்ளே வந்து உட்கார்ந்தாள் கல்யாணி. கருப்பையாவின் மருமகள் அவளை ஆவலுடன் வரவேற்றதிலிருந்து, அவர்களுக்குள் ஏற்கெனவே இருந்த பழக்கம் முருகையனுக்குப் புலப்பட்டது.

''இங்கு ஏதாவது வேலை பார்க்கிறாயா ?'' என்று கேட்டான் முருகையன்.

''ஒரு வேலையும் இல்லே; எனக்கு நானே சில வேலைகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறேன்'' என்றாள் கல்யாணி.

தொழிலாளர்களின் குடும்பத்துப் பெண்களை ஓய்வு நேரத்தில் கூட்டி வைத்து அவர்களுக்குத் தையல் வேலை கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தாளாம் அவள். அத்துடன் சாந்தாவிடமிருந்து அவள் கற்றுக்கொண்ட சுத்தம், சுகாதாரம், சிக்கனம் இவைகளைப் பற்றி யெல்லாம் அவர்களிடம் வற்புறுத்திக் கொண்டு வந்தாளாம். சிறிது சிறிதாக நல்லவிதமான மனமாற்றத்தை அங்கே ஏற்படுத்தி விட முடியுமென்று நம்பினாள் கல்யாணி.

'' சாந்தாவும் இங்குவருவதுண்டா ?''

'' அக்காளுக்கு அவள்



பார்க்கும் வேலைக்கே நேரம் சரியாக இருக்கிறது. சுரங்கத்தில் கரி அள்ளிப் போடும் பெண்களின் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு அவளுக்கு. காலையிலிருந்து சாயங்காலம் வரையில் அங்கு வேலை பார்க்க வேண்டும். எப்போதாவது விடுமுறை நாட்களில் அவளும் என்னுடன் இங்கு வருவாள்.''

''நல்ல பொது நலத் தொண்டு தான்'' என்றான் முருகையன்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை; அக்காளுக்குக் கம்பெனியில் சம்பளம் கொடுக்கிறார்கள். நானோ படிப்பு முடிந்து விட்டதால் என்னுடைய பொழுது போக்குக்காக இங்கு வருகிறேன். இதில் பொதுநலமில்லை; சுயநலந்தான்!''

''இந்த மாதிரிச் சுயநலம் வாழ வேண்டும்; வளர வேண்டும்!'' என்று கூறிச் சிரித்தான் முருகையன்.

நாழிகை ஆயிற்று. ஆண்கள் இருவரும் சுரங்கத்தை நோக்கிக் கிளம்பினார்கள். மற்றத் தொழிலாளர்களும் சிறு சிறு கூட்டமாக நடந்து கொண்டிருந்தார்கள். எல்லாருமே ஆரோக்கியமான உடல் வளத்துடன் காணப்பட்டனர் என்று சொல்ல முடியாது. ஒருசிலர் நிமிர்ந்த நடையும் கலகலப்பான பேச்சுமாக நடந்து கொண்டிருந்த போது இன்னும் சிலர் கூனிக் குறுகி இருமிக்கொண்டே வளர்ந்தார்கள்.

குழந்தைகளின் விடுதியைத் தாண்டித்தான் சுரங்க வாயிலுக்குள் செல்ல வேண்டும். திறந்திருந்த ஜன்னல் வழியாகத் திரும்பிப் பார்த்தான் முருகையன். உட்புறம் சாந்தா குழந்தைகளை விளையாடச் செய்து உற்சாக மூட்டிக் கொண்டிருந்தாள். அழுது அடம் பிடித்த ஒரு சிறுவனைத் தூக்கி வைத்துக் கொண்டு அவனுக்குச் சிரிப்பூட்டினாள். குழந்தையும் கையுமாக அவள் உலவிக் கொண்டிருந்த காட்சியை ஒரு கணம் நின்று பார்த்து விட்டு, கருப்பையாவைத் தொடர்ந்தான் முருகையன். விடுதிக்குள் இருந்த குழந்தைகளிடம் ஏழைமையும், நலிவும் காணப்பட்டாலும் அவற்றை விரட்டியடிக்கக் கூடிய அன்பும் அழகுமாக விளங்கினாள் சாந்தா.

'எங்கு போனாலும் இவளுக்குப் பொழுது போக்குவதற்குக் குழந்தைகள் கிடைத்து விடுகிறார்கள்!' என்று பெருமையுடன் நினைத்துக் கொண்டான் முருகையன்.

அத்தியாயம் ஒன்பது

நண்பனும் தோழியும்

சுரங்க வாயிலில் ஏற்கனவே பெரிய தொகு கூட்டம் உள்ளே போவதற்காகக் காத்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு முறை இயந்திரப் பெட்டி கீழ் நோக்கிச் சென்ற போதும் கூட்டத்தில் ஒரு பகுதியினரைத் தனக்குள் அடைத்துக் கொண்டு சென்றது. தங்களுடைய முறை வருவதற்குச் சிறிது நேரமாகும் என்று தெரிந்ததால் கருப்பையாவும் முருகையனும் ஒரு மண்டபத்தின் மீது உட்கார்ந்தார்கள்.

அருகிலிருந்த அலுவலகக் கூடத்தின் முன்னால் பரபரப்போடு சில தொழிலாளர்கள் நின்று கொண்டிருந்தனர். உள்ளிருந்து யாரோ இருவர் காரசாரமாகப் பேசிக் கொள்ளும் சத்தமும் கேட்டது. வந்த குரலில் ஒன்று பெருமாள் சாமியின் குரல் போல் இருந்ததால், முருகையன் அவசரமாக அங்கு எழுந்து செல்லப் பார்த்தான். ஆனால் கருப்பையா அவனை விடவில்லை. கையைப் பற்றித் தடுத்துக் கொண்டு, ''இதெல்லாம் இங்கே வழக்கமா நடக்கிற விஷயம் தம்பி!'' என்றான். ''ஆயிரக்கணக்கான பேர்கள் தொழில் செய்கிற இடத்திலே எப்பவும் ஏதாவது நடந்துக்கிட்டுத் தான் இருக்கும். இதையெல்லாம் நம்ப எதுக்குக் காதில் போட்டுக்கணும்?''

முருகையனின் காதில் கணீரென்று பெருமாள்சாமியின் குரல் விழுந்து கொண்டிருந்ததால், ''இதோ எட்டிப் பார்த்து விட்டு வந்து விடுகிறேன்'' என்று கிளம்பினான்.

அலுவலகத்தின் முன்னால் கட்டை குட்டையாக ஒரு மனிதன் நின்று கொண்டு பெருமாள்சாமியிடம் ஆத்திரமாகக் கத்தினான். அவனுடைய பேச்சு மொழி ஆங்கிலம், தமிழ், தெலுங்கு எல்லாம் கலந்த கதம்பமாக இருந்தது. மனிதனும் அப்படித்தான் இருந்தான். மேல் நாட்டாருக்கும் இந்தியருக்கும் பிறந்தவனாக இருக்க வேண்டும்.

''கன்னையன்! ஏன், எதற்கு, நியாயம், சட்டம் என்றெல்லாம் நீ என்னிடம் பேச வேண்டியதில்லை. இன்றைக்கு உனக்கும் உன் ஆட்களுக்கும் வேலை கிடையாது. நீங்கள் வீட்டுக்குப் போகலாம்....'' என்று இரைந்தான்.

''ஏன் வேலை கிடையாது?''

தரத்தில் உயர்ந்தது



ருசிக்கச் சிறந்த வகையில் கலவை செய்த ப்ரூக் பாண்ட் கபே பிராண்டு பிரெஞ்சு காபி இப்பொழுது எங்கும் கிடைக்கும். நறுமணத்தையும் சுவையையும் காக்க இவை ஸெலபோன் பைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. பிரெஞ்சு காபியில் நல்ல மணம், சுவை இவற்றைப் பெற ப்ரூக் பாண்ட் காபியையே விரும்பிக் கேளுங்கள். இதுவே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குச் சிறந்தது.



ப்ரூக் பாண்ட்

கபே பிராண்டு

பிரெஞ்சு காபி

JWTBB 403

''கரியை அள்ளிக் கொண்டு போக 'வாகன்' கள் வரவில்லை. மேலே எடுத்துச் சும்மா போட்டு வைக்க முடியாது. அதனால் தான் வாகன்கள் வரும் வரை கூலிகளுக்கு வேலை யில்லை என்கிறேன்.''

வேலை இல்லை யென்றால் கூலியும் இல்லை என்பது முருகையனுக்குத் தெரியும். அந்தப் பரங்கி மனிதனின் பேச்சில் நியாயம் இருப்பதாகவே முருகையனுக்குத் தோன்றியது. வேலை கொடுக்க முடியாத போது அவன் தான் பாவம் என்ன செய்வான்?

''வேலை இல்லை யென்றால் ஒவ்வொரு சமயமும் என்னையும் என்னைச் சேர்ந்த ஆட்களையும் தான் நிறுத்தி வைக்கணுமா? எதிலும் ஒரு முறை வைத்துக்கொண்டு அதன்படி செய்யக் கூடாதா? வேண்டும் என்றே எங்கள் வயிற்றில் அடித்து, எங்களை நீங்கள் தொலைக்கப் பார்க்கிறீர்கள்!''


''அது என் இஷ்டம்! எனக்கு எத்தனையோ பேர்கள் மேலதிகாரிகள் இருக்கிறார்கள். நீ எனக்கு அதிகாரி இல்லை....''

முருகையனின் மனத் தராசு இப்போது பெருமாள்சாமியின் பக்கம் சாய்ந்தது. காரணம் இல்லாமல் அங்கே உணர்ச்சிப் புகை சூழவில்லை. எங்கோ ஒரு நெருப்புத் துண்டு இருக்கத்தான் வேண்டும்.

''நாட்டுக்கு விடுதலை கிடைத்து விட்டது. ஆனால் இன்னும் மனிதர்களை அடிமைப்படுத்த வேண்டும் என்ற உங்களுடைய ஆசை அழியவில்லை. பணத்தையும் இயந்திரங்களையும் வைத்துக் கொண்டு எங்களை நசுக்கப் பார்க்கிறீர்கள்.''

''நாங்கள் இங்கே சுரங்கத்தை ஏற்படுத்தியிருக்கா விட்டால், உங்கள் இத்தனை பேருக்கும் பிழைப்புக் கிடைத்திருக்காது. நீ நன்றி கெட்டவன். பேசாமல் இங்கிருந்து போய்விடு. இல்லாவிட்டால் மேலதிகாரிகளுக்குப் புகார் செய்ய வேண்டியிருக்கும்.''

கன்னையன் வேடத்தில் இருந்த பெருமாள்சாமி தன் தாடியைத் தடவி விட்டுக் கொண்டே அங்கிருந்து சட்டென்று திரும்பி நடந்தான். முருகையனை அவன் கவனிக்கவில்லை. கன்னையனைச் சேர்ந்தவர்களும் அவனைச் சூழ்ந்து கொண்டு சென்றார்கள். எல்லோருமாகக் குழந்தைகள் விடுதிக்கு எதிரில் இருந்த மரத்தடியில் உட்கார்ந்து ஏதேதோ பேசினார்கள்.



''சம்பள உயர்வு வேணும்னு கேட்டாயே? அடுத்த வாரம் என்னை வந்து பாரு – அதுவரைக்கும் நீ இங்கே இருந்தால்.''

வெளியில் காத்துக் கொண்டிருந்தவர்களில் பலர் இவ்வளவையும் கவனித்துக்கொண்டிருந்தார்கள். சிலருக்குக் கன்னையனின் செய்கை பிடித்திருந்தது; சிலருக்குப் பிடிக்கவில்லை; சிலர் எதுவுமே நடக்காதது போல் உள்ளே செல்லத் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

சிந்தனையோடு கருப்பையாவிடம் வந்தான் முருகையன். கருப்பையாவுக்குக் கன்னையன் மீது கோபம் பற்றிக் கொண்டு வந்தது.

''தம்பி! இந்தப் பயலைக் கொஞ்சம் பார்த்து வைத்துக் கொள். இவனுடைய சிநேகமும் உனக்கு வேண்டாம்; விரோதமும் வேண்டாம். பொல்லாத முரட்டுப் பயல்!''

''என்ன விஷயம்?'' என்று கேட்டான் முருகையன்.

''வெள்ளைக்காரன் வந்துதான் நம்முடைய காலுக்கு அடியிலே என்ன பொருள் புதைஞ்சு கிடக்குதுன்னு காட்டிக் கொடுத்தான். அவனுடைய ஆட்களும் சாமான்களும் வந்ததினாலே தான் இங்கே இத்தனை ஆயிரம் பேருக்குப் பிழைப்புக் கிடைச்சிருக்கு. பட்டினி கிடந்து சாகிறதுக்குப் பதிலாகக் கால் வயித்துக்கோ, அரை வயித்துக்கோ கஞ்சி கிடைச்சால் அது போதாதா?''

முருகையன் பதில் அளிக்காமல் மௌனமாக இருந்தான்.

''என்ன தம்பி, பேச மாட்டேங்கிறீங்க?''

''எனக்கு இன்னும் முழு விவரமும் தெரியவில்லை. எதையும் விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் கஷ்டப்பட்டு உழைக்கிற மனிதர்களுக்கு அவர்களுடைய உழைப்புக்குத் தெம்பு கொடுக்கிற அளவுக்காவது உணவு வேண்டும். நம்முடைய பொருளை நமக்குக் காண்பித்து விட்டு, அதன் பலனையெல்லாம் அவர்கள் நாட்டுக்குக் கொண்டு போகக் கூடாதல்லவா?''

''தம்பி! நீங்க இப்பத்தான் இங்கே வந்திருக்கீங்க. நான் ரொம்ப காலம் இங்கேயே இருக்கிறவன். வாயை மூடிக் கிட்டு நீங்க உண்டு, உங்க வேலை உண்டு

டுன்னு காலத்தைத் தள்ளுங்க. நாளாக நாளாக எல்லாம் சரியாகப் போயிடும். நான் வேலைக்கு வந்த காலத்திலே இதில் பாதிச் சௌகரியம் கூடக் கிடையாது.''

பெருமாள்சாமி இருந்த திசையைப் பார்த்தான் முருகையன். அவனைச் சூழ்ந்து கொண்டிருந்தவர்கள் யாரும் இப்போது அங்கு இல்லை. அவன் மட்டும் விடுதியின் வாசலில் நின்று சாந்தாவுடன் பேசிக் கொண்டிருந்தான். கையில் ஒரு குழந்தையை வைத்துக் கொண்டு சாந்தா கதவருகில் நின்றாள்.

அந்தக் காட்சியைக் கண்டவுடன் முருகையனின் நெஞ்சுத் துடிப்பு ஏனோ இருமடங்காகியது. வைத்த கண் வாங்காமல் அவர்கள் இருவரையுமே பார்த்துக் கொண்டிருந்தான். அவர்கள் இருவரும் என்ன பேசினார்கள் என்பது அவனுக்குத் தெரியாவிட்டாலும், இருவரும் ஏற்கனவே பழக்கமானவர்கள் என்பதை மட்டிலும் அவன் தெரிந்துகொண்டான்.

'சாந்தாவிடம் பெருமாள்சாமிக்கு என்ன பேச்சு? அவனுக்கு அவளை எப்படித் தெரியும்? அவனுடைய மற்ற நண்பர்களை அனுப்பி விட்டு, அவன் மட்டிலும் அவளிடம் தனியாக எதற்குப் பேச வேண்டும்? அவளும் அவனுடன் சரி சமமாக நின்று பதில் சொல்லிக் கொண்டிருக்கிறாளே?'..... இந்தக் கேள்விகளெல்லாம் எதற்காகத்தான் தன்னுடைய மனத்தில் எழும்புகின்றன என்ற ஒரு முக்கியமான கேள்வியை மட்டிலும் அவன் தன்னிடமே கேட்டுக் கொள்ளத் தவறி விட்டான்.

சாந்தாவிடம் அவனுக்கு எந்தவிதமான உறவும் இல்லை; உரிமையுமில்லை; சாந்தாவின் முன்னிலையில் அவனிடம் சித்திரா வரிந்து உரிமை கொண்டாடியிருக்கிறாள். அப்படியிருக்கும்போது...

சுந்தரத்தின் மனைவி மீனாட்சி தன் கணவனிடம் பேசிக் கொண்டிருந்த விஷயங்கள் இப்போது அவனுடைய நினைவுக்கு வந்தன. சித்திராவைப் பற்றிச் சாந்தா ஏற்கனவே மீனாட்சியிடம் பேசியிருக்கிறாள். மீனாட்சிகூட அன்றைக்குச் சாந்தாவையும் அவனையும் சேர்த்து வைக்கத் திட்டம் போடவில்லையா?

ஒரு வேளை... ஒரு வேளை... அதையெல்லாம் கேட்டதால்தான் இப்போது இந்தக் காட்சி மனத்தில் சஞ்சலம் எழுப்புகிறதா?

சுரங்கத்துக்குள் முருகையன் கருப்பையாவுடன் ஒன்றாகச் சென்று கொண்டிருந்த போது, அவனுடைய மனம் மட்டிலும் மாறி மாறிச் சாந்தாவையும் பெருமாள்சாமியையும் சுற்றத் தொடங்கியது. (தொடரும்)



கடிதமும் காதலும்

அட்டைப்படக் கதை

நந்தகுமார் சொல்கிறான்:

அன்னையையும் தந்தையையும் அறியாத பருவத்திலேயே விழுங்கி விட்ட நான் என் சிறிய தகப்பனார் வீட்டில் வளர்ந்தேன். வளர்ந்தேன் என்று சொன்னேன்? இல்லை. கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து கொண்டு வந்தேன். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கொஞ்சம் படித்தேன். சித்தப்பா வீட்டில் வஞ்சனையில்லாமல் உழைத்தேன். உதை, அடியுடன், சித்தி கொஞ்சம் அவ்வப்போது சோறும் போட்டாள்.

காஞ்சீபுரத்துக்கு உற்சவம் பார்க்க ஒரு சமயம் என் சித்தப்பா, சித்தி, குழந்தைகளுடன் சென்றார். நானும் அவர்களுடன் கூடப் போனேன். அப்போது எனக்கு ஒன்பது வயது. திருவிழாக் கூட்டத்தில் அவர்களை விட்டுப் பிரிந்து விட்டேன். தொண்டை கிழிய, ''சித்தப்பா! சித்தப்பா!'' என்று கதறினேன். ஒன்றும் பயன் இல்லை. என்னால் முடிந்த மட்டும் காஞ்சீபுரத்து வீதிகளில் சுற்றிச் சுற்றி வந்தேன். அந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் தலைநகரிலே, கலை வளர்த்த காஞ்சீபுரத்திலே என்னை ஏன் என்று கேட்பாரில்லை. நடந்தேன், நடந்தேன் – நடந்து கொண்டேயிருந்தேன். ஓடினேன், ஓடினேன், ஓடிக் கொண்டே யிருந்தேன். கடைசியில் ஒரு வீட்டின் விசாலமான திண்ணையில் ஏறிப் படுத்தேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். பசிக் களைப்பினாலும், அலைச்சலினாலும் அயர்ந்து தூங்கி விட்டேன்.

''நீ யார் தம்பி? உன் பெயர் என்ன?'' என்ற அன்பான குரல் கேட்டதும் என் செவிகளையே என்னால் நம்ப முடியவில்லை. என் வாழ்நாளிலேயே இதுதான் முதல் தடவை, இத்தனை அன்புக் குரலைக் கேட்பது. 'தடியா, கடன்காரா, மூதேவி!' என்பன போன்ற சொற்கள் தான் நான் என் சித்தியிடம் கேட்டுப் பழகியவை. அந்தச் சொற்களோடு அடிகளும் விழும்.

''தம்பி, ரொம்பக் களைத்துப் போயிருக்கிறாய். எழுந்திரு. முகம் கழுவிக் கொண்டு பலகாரம் சாப்பிடலாம்'' என்று கனிவோடு என் முகத்தருகே குனிந்து சொன்ன திருமுகத்தை உற்றுப் பார்த்தேன். விபூதியும், குங்குமமும் நெற்றியில் பளிச்சென்று துலங்கின. எனக்கிருந்த பசியிலும் களைப்பிலும் அவருக்கு நன்றி சொல்லக் கூடத் தோன்றவில்லை. உடனே அவரோடு உள்ளே சென்று, பல் விளக்கி, முகம் கழுவிக் கொண்டு பலகாரம் சாப்பிட்டேன்.

அவர் பெயர் சிவகுருநாதன். நாடகக் கம்பெனி யொன்றில் உபாத்தியாயராயிருந்தார். எனக்கு அன்னமிட்டு ஆதரித்ததுமல்லாமல், நாடகக் குழுவில் என்னைச் சேர்த்து விட்டு வாழ்க்கைக்கும் வழி காட்டி விட்டார். அவருடைய அன்பினாலும், நாடகக் கம்பெனி உரிமையாளரின் ஆதரவினாலும் கொஞ்சம் கொஞ்சமாக நடிப்புக் கலையில் முன்னேற்றம் அடைந்தேன்; அவன் ராஜபார்ட் நடிகனுமானேன். இது நாடக உலகத்தில் கவர்னர் பதவி மாதிரி. அலைஅலையாகப் படிந்து, பத்து நயாபைசா நாணயம் மாதிரி நெளிவுகளைக் கொண்டு பளபளப்பாக இருந்த என் 'கிராப்பு' என்னையே கிறங்க வைத்தது. என் உடம்பில் ஒரு மினுமினுப்பும் மெருகும் ஏறியிருந்தன. முன்பு இருந்த அசட்டுக் கறுப்பு நிறம் மாறிப்போய் மாநிறமாகி விட்டேன். அவன் ராஜபார்ட் நடிகன் என்றால் நாடகக் கம்பெனியில் தனி மரியாதைகளும், விசேஷச் சலுகைகளும், பலவிதமான சௌகரியங்களும் உண்டு. சாப்பாட்டில் நாலு ஸ்பூன் நெய் விடுவார்கள். குளிப்பதற்கு வெந்நீர் கிடைக்கும். இரவில் பசும் பால் தருவார்கள். இதைத் தவிர நல்ல உடைகளும் தருவார்கள். இந்த வசதிகள்தான் என்னைப் புது மனிதனாக்கி விட்டன. சாதாரண நடிகனாயிருந்தபோது பட்ட சிரமங்களையும், அநுபவித்த அசௌகரியங்களையும் நான் மறந்துவிடவில்லை.

நாடக உபாத்தியாயர் சிவகுருநாதனின் நற்போதனையால் என் உள்ளத்தில் நல்ல பாத்திரங்களை ஏற்று நடிப்பதில் ஒரு தனி ஆர்வம் ஏற்பட்டது. அதாவது நற்குணமுள்ள பாத்திரங்களையே ஏற்று நடித்தேன். சம்பூர்ண ராமாயண நாடகம் நடந்தால் அதில் நான் தான் ஸ்ரீராமன். ''பாஞ்சாலி சபத''த்தில் நான் தரும புத்திரனாக வருவேன். சரித்திர நாடகங்களில் கொடுமை புரிந்து கொக்கரிக்கும் கொடுங்கோல் மன்னனை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றி விட்டு நல்ல ஆட்சியை நிறுவும் நல்லவனாக வருவேன். சமூக நாடகமானால், வழுக்கி விழுந்த சகோதரிக்கு வாழ்வளிப்பவனாக வருவேன். புல்லர்களைப் 'பூ' வென்று ஊதுவேன்; நல்லவர்களை நயந்து கொண்டு நல்வாழ்வளிப்பேன்; கடைசியில் மனமொத்த மங்கைக்கு மாலையிடுவேன்.

சில வருஷங்களில் நான் ஒரு பிரபல நடிகனாகி விட்டேன். வானவில் நாடக மன்றம் என்று ஒரு நாடகக் கம்பெனியை நிறுவி அதை நானே நிர்வகித்து வந்தேன். ஊர் ஊராகச் சென்று நாடகங்கள் நடத்துவதில் எத்தனையோ சிரமங்கள் இருந்தும் நான் அவை

களை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. ஆயிரக்கணக்கான மக்களுக்கு எதிரில் மேடையில் தோன்றுகிறோம் என்ற பெருமிதம் என்னை ஒவ்வொரு நாளும் புது மனிதனாக்கியது. எத்தனை புகழ் மாலைகள்! எத்தனை பாராட்டுரைகள்! எனக்கென்னவோ சினிமாவில் நடிக்க வேண்டுமென்ற ஆசையே உண்டாகவில்லை. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. நாடக மேடையில் நடிக்கும்போது மக்களின் உற்சாகத்தையும் கரகோஷ ஆரவாரத்தையும் நேருக்கு நேர் கண்டு மகிழலாம். சினிமாவில் அது முடியாதே! இந்தப் புகழ்வெறி ஒரு போதைப் பொருளாக என் தலைக்கு ஏறியது.

சில படாதிபதிகள் ஒரு புதுப் படம் தயாரித்தால் முதலில் தென்னாடெங்கும் வெளிவிட்டு விட்டுப் பிறகு சென்னையில் வெளியிடுவது போல், நானும் வானவில் நாடக மன்றத்தின் புகழைத் தென்னாடெங்கும் நன்கு நிலைநாட்டி விட்டுச் சென்னை நகருக்கு வந்தேன்.

சென்னை நகரத்து நாடக ரசிகர்களைக் கவருவதற்காகவே ஏராளமான பொருட்செலவில் விசேஷமான சீன்களும், விலை உயர்ந்த உடைகளும் தயாரித்திருந்தேன். சினிமாப் படம் பார்ப்பது போலவே தோன்றும்படி நாடகக் காட்சிகளை மிகவும் சிரமப்பட்டு அமைத்திருந்தேன். பின்னணி வாத்தியங்களுடன் பின்னணிப் பாடகிகள், பாடகர்களுக்கும் ஏற்பாடு செய்திருந்தேன். சென்னையில் வெற்றிக் கொடி நாட்டிவிட வேண்டும் என்பது என் நெடுநாளைய அவா.

வானவில் நாடக மன்றம் நடத்தும் நாடகங்களுக்குச் சென்னையில் நல்ல வரவேற்பு இருந்தது. எனக்கு உற்சாகம் பிடிபடவில்லை.

அழகும், முகவெட்டும் உள்ள சில நடிகைகளையும் சேர்த்திருந்தேனாதலால், எங்கள் நாடகங்களுக்குத் தனி 'மவுசு' ஏற்பட்டு விட்டது. பல பணக்காரக் குடும்பத்தினர் தினசரி நாடகத்துக்கு வரத் தொடங்கினர். நாடகக் கொட்டகையின் முன் வரிசை ஆசனங்களில் ஒரே வைரமாக ஜொலித்துக் கொண்டிருக்கும் பணக்காரப் பெண்களைப் பார்க்கும்போது எனக்கு ஏற்படும் உற்சாகத்தை அளவிட்டுக் கூற முடியாது.


அந்தப் பெண்கள் கூட்டத்தில் ஒரு முழு மதியை நிகர்த்த வதனம் என் கவனத்தைக் கவர்ந்தது. தினம் தவறாமல் அவள் வருவாள். சில சமயம் பெற்றோர்களும் உடன் வருவார்கள். அவள் தனியாகவும் வருவாள். விண்மீன்களுக்கு இடையே தண்மதி தனியாட்சி செலுத்துவது போல், இந்தப் பெண்மானும் மற்றப் பெண்கள் கூட்டத்தில் தனியாட்சி செலுத்தினாள்.

நான் மேடையில் என் நடிப்புக்கு இடையில், லாகவமாக அவளைப் பார்ப்பேன். அவளும் என்னையே விழுங்கி விடுவது போல் பார்ப்பாள்.

காஞ்சனா சொல்கிறாள்:

ஆம்! வானவில் நாடக மன்றம் ஒரு நாள் கூட நான் இல்லாமல் நாடகம் நடத்தியதில்லை. தினசரி கொட்டகையில், முன் வரிசையில் ஆஜராகி விடுவேன். நந்தகுமாரின் நடிப்பில் நான் கொஞ்சம் கொஞ்சமாக என்னையே இழக்கத் தொடங்கியிருந்தேன். உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்து விட்டுத் தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் பயின்று வந்த எனக்கு நாடகம் பார்க்கத் தினமும் அவகாசம் இருந்தது. மேலும், என் பெற்றோருக்கு நான் ஒரே பெண். என் தகப்பனார் ஒரு கம்பெனியில் மானேஜராக உயர் பதவி வகித்து வந்தார்.

என் விருப்பம்தான் என் தகப்பனார் விருப்பமாக இருந்தது. நாடகம் பார்ப்பதில் எனக்கு



ஸோமாஸ்

இருந்த அளவுகடந்த ஆர்வத்தைக் கண்ட என் தகப்பனார் நான் தினசரி நாடகத்துக்குப் போவதைச் சிறிதும் ஆட்சேபிக்கவில்லை.

இப்பொழுது நினைத்தாலும் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. முதலில் நந்தகுமாரின் நடிப்பில் ஈடுபட்ட என் மனம் என்னை அறியாமலே அவரிடமே ஈடுபடத் தொடங்கியது. மேடையில் அவரைப் பார்த்ததுமே என் உடம்பெல்லாம் புளகம் உண்டாகும். அவரும் ரொம்பப் பொல்லாதவர்; தம் நடிப்புக்கு இடையே என்னை ஊடுருவிப் பார்ப்பார்.

அவரோடு சேர்ந்து நடித்த விமலாவைப் பார்க்கும்போது மட்டும் என் உள்ளம் விம்மும். அவளும் தேர்ந்த நடிகைதான். காதல் காட்சிகளில் அவள் நந்தகுமாரைப் பார்க்கும் பார்வையே போதும். ஆனால் எனக்கென்னவோ அவள் நடிப்பைப் பாராட்டத் தோன்றியதேயில்லை. அவளிடம் ஒரு பொறாமைதான் வளர்ந்து வந்தது.

''சாகுந்தலம்'' நாடகம் நடந்தது. நந்தகுமார்தான் துஷ்யந்தன். கேட்பானேன்? விமலா சகுந்தலை— நன்றாகத்தான் நடித்தாள். ஆனால் என் மனக்கண் முன் வேறொரு 'சாகுந்தலம்' நடந்து கொண்டிருந்தது. அதில் ஒரே ஒரு மாறுதல். விமலாவுக்குப் பதிலாக நான் சகுந்தலையாக நிற்கிறேன்! ஆகா! என்ன பொருத்தம்! ஆனால் இது ஒரு கணந்தான் மனதில் நின்றது. மறுகணம் மறைந்து விட்டது. அந்தப் பாவி விமலாதான் சகுந்தலையாக நடித்துக் கொண்டிருந்தாள்.

என் மனச்சாட்சி, ''நீ விமலாவைக் கண்டு பொறாமைப்படுவது கொஞ்சமும் நியாயம் இல்லை. அவள் எவ்வளவோ நன்றாய் நடித்தும் நீ அதை ஒப்புக் கொள்வதில்லை. உன்னையே நீ ஏமாற்றிக் கொள்கிறாய்!'' என்று சினிமாவில் வருகிற மாதிரி பல முறையும் எதிரொலித்தது. ஆனால் என்னால் அதை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. எனக்கு மட்டுமே உரிமையுள்ள ஒரு பொருளை விமலா அபகரிக்க முயல்வதாகத் தோன்றியது.

என் உள்ளம் நந்தகுமாருக்குச் சொந்தமாகி விட்டது. இனி அதை யாரும் அசைக்க முடியாது. விமலா என்ன, என்னாலேயே அதை ஒன்றும் செய்ய முடியாதே! நான் மானசீகமாக என்னை அவருடன் பிணைத்துக் கொண்டு விட்டேன். நந்தகுமார் இதைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதை நான் நினைத்துப் பார்க்கவே யில்லை. பார்க்க வேண்டுமென்று தோன்றவும் இல்லை. அவர்தான் சதா என் இதய ஒலியோடு சேர்ந்து ஒலிக்கிறாரே !

நந்தகுமார் சொல்கிறான் :

எனக்கே காஞ்சனாவைப் பார்க்கும்போது வியப்பாகத்தான் இருந்தது. ஆம். அவள் பெயரை எனக்கு அவள் தகப்பனார் கூறினார்.

''காஞ்சனாவுக்கு நீங்கள் நடிக்கும் நாடகம் என்றால் போதும். அன்ன ஆகாரம் எதுவும் வேண்டாம்!'' என்று ஒரு சமயம் நாடகம் முடிந்ததும் தியேட்டரில் வேஷம் போட்டுக் கொள்ளும் 'கிரீன் ரூம்'க்கே காஞ்சனாவுடன் வந்து கூறினார்.

நானும் எனது இருபது வருட நாடக மேடை அனுபவத்தில் எத்தனையோ பேர்களுடைய பாராட்டுரைகளைக் கேட்டிருக்

கிறேன். ஆனால் காஞ்சனாவைப் போல் கனிவும் கசிவும் கொண்டு என்னையே பூஜித்துப் போற்றும் ரஸிகசிகாமணியைக் கண்டதில்லை.


காஞ்சனா நல்ல அழகி. பெயருக்கேற்ற பொன்னிறம். கொஞ்சம் வசதியுள்ள குடும்பத்தினருக்கே உரிய வாளிப்பான உடல். தாழம்பூ மேனியில். கடைசல் பிடித்தமாதிரி அங்கங்கள். அவளது கரிய பெரிய விழிகளில் அத்தனை வசீகரம் எங்கிருந்து வந்தது? முழுமதியின் பார்வைக்கு ஏங்கும் நட்சத்திரங்களைப் போல் காதுகளில் வைரங்கள் சுடர்விட்டு மின்னின. ஒரு நாளைக்கு ஓர் உடையில் தோன்றுவாள். மஞ்சள் சில்க் புடவையும். மயில் கழுத்து நிறச் சோளியுமாக ஒருநாள் வந்தால், மறுநாள் வெள்ளைக் கலை உடுத்தி. தலையில் மல்லிகைச் சரம் ஒரு புறம் சரிந்து தொங்க, கறுப்பு நிறச் சோளியணிந்து கொண்டு வருவாள். கறுப்புப் பட்டுப் புடவை அவளுக்கென்று எப்படித்தான் அவ்வளவு அழகாக அமைகிறதோ! அவள் தினம் நாடகத்தில் என்னைப் பார்க்க வந்தாள். நான் தினம் முன் வரிசையில் அவளைப் பார்ப்பதற்காகக் காத்திருந்தேன்.

ஒரு நாள் மிகவும் சுவையான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. 'காதல் பாதை' என்னும் சமூக நாடகம் நடந்து கொண்டிருந்தது. நான்தான் கதாநாயகன் என்பது நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. தியேட்டரில், முன் வரிசை ஆசனத்தில் வனப்பின் வடிவமாகக் காஞ்சனா அமர்ந்திருப்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம். சில நாட்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுவதற்காக நான் இரண்டொரு நாடகங்களில் பங்கெடுத்துக் கொள்ள மாட்டேன். நான் பங்கெடுத்துக் கொள்ளாத நாடகம் என்பதைத் தியேட்டர் முன் வரிசை ஆசனத்தில் காஞ்சனா இல்லாததைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

வானவில் நாடக மன்றத்தின் நாடகங்களில் ''காதல் பாதை'' மிகவும் சிறந்த நாடகம். காஞ்சனாவுக்கு மிகவும் பிடித்தமான நாடகம். அது பல முறை சென்னையில் நடிக்கப்பட்டு விட்டது. காஞ்சனாவும் ஒரு தடவை கூடத் தவறாமல் அந்நாடகத்தைப் பார்த்துக் கொண்டு வந்திருக்கிறாள்.

அன்று அந்த நாடகம் மிகவும் வாய்ப்பாக அமைந்து விட்டது. நான் என் காதலியின் கரம் பற்றி இழுத்துக் கொண்டு உள்ளே ஓட வேண்டிய கட்டம். அவள் தகப்பனாரின் முகத்தைப் பார்த்துச் சிறிது தயங்குகிறாள். அந்த இடத்தில் பிரமாதமான 'டயலாக்' நான் பேசுகிறேன்....விமலாதான் என் காதலி.

''குமாரி, நான் மலர்; நீ மணம்; நான் உடல்; நீ உயிர். நீ என் கண்; நான் கண்ணின் இமை. உன் கரம் பற்றுவதற்கு எதிராக இந்த வையகத்து மாந்தரெல்லாம் எதிர்த்து நின்றாலும் நான் அஞ்ச மாட்டேன். உனக்கும் எனக்கும் இடையில் இமயமே வந்து நின்றாலும் நம்மைப் பிரிக்க முடியாது. உனக்காக என் இல்லக் கதவு மாத்திரம் அல்ல; உள்ளக் கதவுகளும் திறந்திருக்கின்றன. வா, அன்பே! வா. சமூகத்தின் சாக்கடை நாற்றம் வீசாத இன்ப உலகிற்குச் செல்வோம். அங்கு நீயும் நானும் மட்டும் தான் இருப்போம். அங்கு ஒளி வீசும் வெண் மதி என்றும் முழு மதியாகவே இருக்கும். காற்று தென்றலாகவே



நிருபர்: நீங்கள் பணக்காரரான பிறகு ஏழையாயிருந்தபோது நண்பர்களாக இருந்தவர்களெல்லாம் வந்து நச்சரிக்கிறார்களோ?
பணக்காரர்: நான் ஏழையாயிருந்தபோது எனக்கு நண்பர்களே கிடையாதே!

தவழ்ந்து வரும். அதில் இலேசான காதல் கீதம் கேட்கும். பகலவனின் கதிர்கள் பால் நிலவைப் பொழியும். எழுந்திரு, என் அன்பே! எழுந்திரு. ஒரு விநாடிகூடத் தாமதியாதே!''

இந்த வசனத்துக்காகவே ரசிகப் பெருமக்கள் காத்திருப்பார்கள். நான் வசனம் பேசிக் கொண்டே விமலாவின் கரம் பற்றுவேன்; தகப்பனுரை எதிர்த்துக் கொள்ள முடியாத நிலையில் அவள் தவிப்பாள்.

என் நடிப்புக்கு இடையில் கடைக்கண்ணுல் காஞ்சனுவைக் கவனித்தேன். அவள் பரவசமடைந்த நிலையில் இருந்தாள்.

காஞ்சனு சொல்கிருள்:

நந்தகுமாரின் உணர்ச்சி பொங்கும் வசனங்களைக் கேட்டதும் நான் என்னை மறந்து விட்டேன். நான் எங்கிருக்கிறேன் என்பதையும் மறந்து விட்டேன். நந்தகுமாரின் பேச்சைக் கேட்டும் நகராமல் சோபாவில் கிடக்கும் விமலாவின் மீது எனக்கு ஆத்திரம் வந்து விட்டது. ''அவள் கிடக்கிருள், சாகஸக்காரி! இதோ நான் வந்து விட்டேன், நந்தகுமார்! என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்!'' என்று ஆவேசம் வந்தவள் போலப் பலமாகக் கூறிக் கொண்டே ஆசனத்தில் மயங்கி, உணர்விழந்து விழுந்து விட்டேன். எனக்கு மூர்ச்சை தெளிவித்து நாடகத்தை மீண்டும் தொடங்குவதற்குச் சிறிதுநேரம் தாமதமாகி விட்டதாம். அன்று என்னுடன் நாடகத்துக்கு வந்திருந்த என் தோழி இதைச் சொன்னுள். நல்ல வேளையாக நான் உணர்ச்சி பரவசத்தில் பேசியது ஒன்றும் தெளிவாயில்லாததால் அவளுக்குப் புரியவில்லை. நான் சொன்னது மட்டும் அவள் காதில் சரியாக விழுந்திருந்தால்... அப்பப்பா! அவ்வளவுதான்! என்னைத் துளைத்தெடுத்து விடுவாள்.

அன்றைய தினத்திலிருந்து புதுத் தெம்பும், உற்சாகமும் என் உடம்பிலும், உள்ளத்திலும் பொங்கின. இனியும் மௌனமாயிருப்பதில் பயனில்லை யெனத் தீர்மானித்து விட்டேன். எப்படியோ வெள்ளமெனப் பொங்கும் என் உள்ளத்துக் காதலையெல்லாம் அவரிடம் கொட்டி விட நினைத்தேன். என் உள்ளக் கிடக்கையைக் காட்டி அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அப்பா என் விருப்பத்துக்கு நிச்சயம் இணங்குவார் என்பதில் எனக்குத் துளியும் சந்தேகம் இருக்கவில்லை.

இரண்டொரு நாட்களில் நந்தகுமாரிடமிருந்து எனக்குப் பதில் கடிதம் வந்தது.

கடிதத்தை ஆவலோடு பிரித்தேன்:

''அன்புள்ள சகோதரி,

உன் கடிதம் கிடைத்தது. நீ என் நடிப்பைப் பாராட்டும் விசிறிகளில் ஒருத்தியாகத் திகழ்வதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சிதான். ஆனுல் நீ என்னைக் காதலிப்பதுதான் எனக்கு வியப்பாயிருக்கிறது.

இதுவரையில் நான் உண்மையான காதலைப் பற்றி நினைத்ததேயில்லை; நினைப்பதற்கு அவகாசமும் இருந்ததில்லை. அதுவும் உன்னைப் போன்ற ஓர் உயர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணின் இதயத்தில் எனக்கு இடம் கிடைக்கும் என்று கனவில்கூட எண்ணியதில்லை. ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காக என்னவெல்லாமோ வேஷம் போட்டேன். என் வாழ்க்கையே வேஷமாகப் போய் விட்டது. ஆனுல் உன் கடிதத்தைப் பார்த்த பிறகு உன்னை ஏமாற்றி நல்லவன் மாதிரி வேஷம் போட எனக்குச் சிறிதும் மனம் வரவில்லை. இது நாள் வரையில் நான் வாழ்ந்து விட்ட அவல வாழ்வைப் பற்றி நான் சிந்தித்ததேயில்லை. ஆனுல் உன் கடிதம் என்னைச் சிந்திக்க வைத்து விட்டது. என்னை நம்பி நீ மோசம் போவதை ஒருகாலும் நான் சம்மதியேன். காஞ்சனு, உன் களங்கமற்ற உள்ளத்தை உன் கடிதத்தில் கண்டு என் உடம்பெல்லாம் பதறுகிறது.

நாடகங்களில் என் நடிப்பைக் கண்டுவிட்டு நீ என்னை மிகவும் உயர்வாக நினைத்து விட்டாய். என்னுடைய நட்பும், நயமும், பண்பும், பரிவும், பாசமும், நேசமும் உன்னைப் பரவசப்படுத்தி விட்டதாக எழுதியிருக்கிருய். ஆனுல் மேற்படி குணநிசயங்களெல்லாம் நாடக மேடையோடு சரி. என் உண்மையான வாழ்க்கைக்கும் அந்த நற்குணங்களுக்கும் எள்ளளவு சம்பந்தமும் கிடையாது. என் வாழ்க்கையில் நான் எப்படியெல்லாமோ இருந்திருக்கிறேன். அதையெல்லாம் உனக்கு எழுதும் துணிவு எனக்கு என்றுமே உண்டாகாது. என்னைப் பற்றி உன்னிடம் சொல்லிக் கொள்ளும்படியாக என்னிடம் நடிப்பைத் தவிர வேறு எதுவும் இல்லை. நீ படித்த பெண். நான் பள்ளிக்கூடத்தையே பார்த்தறியாதவன். என் வாழ்க்கையே நடிப்பு, காஞ்சனு. நடிப்பு! அதில் உண்மைக்கே இடமில்லை. தயவு செய்து என்னை மறந்து விடு. உன் படிப்புக்கும் பண்புக்கும் ஏற்ற கணவனைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள். இந்தக் கடிதம் உன் கைக்கு வந்து சேர்வதற்குள் வானவில் நாடக மன்றத்தாருடன் நான் வேலூர் சென்று விடுவேன். ஆனுல் உன்னையும், உன் உயர்வான ரசிகத் தன்மையையும் என்றும் மறக்க மாட்டேன்.

உன் நல்வாழ்வைக் கோரும்
நந்தகுமார்''

கடிதத்தைப் படித்து முடித்த நான் சிலையாகச் சமைந்து விட்டேன்.

நந்தகுமார் இவரா?

இருக்காது. ஒருநாளும் இருக்காது. என் நலனில் அக்கறை கொண்டுதான் அவர் இப்படி ஒரு நாடகம் நிகழ்த்தி யிருக்கவேண்டும். இன்றும் என் மனம் இப்படியே எண்ணுகிறது.



ஹ்யூலெட்ஸ் மிக்சர்

அஜீரணத்தை விரைவில் அகற்றுகிறது



கட்டிப்போட்டாற்போல், ஒரே இடத்தில் அமர்ந்தவாறே உங்கள் அலுவல்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் உங்கள் வேலை அப்படியானது. இக்காரணத்தினால் உங்களைப் போன்றவர்கள் அடிக்கடி அஜீரணத்தினால் அவஸ்தைப்பட நேரிடுகிறது. ஆனால் நீங்கள் அவ்வாறு கஷ்டப்படத் தேவையில்லை. ஹ்யூலெட்ஸ் மிக்சர் வயிற்று உபாதையை விரைவில் போக்கி, நிரந்தரமாக குணமளிக்கிறது; வலியுண்டாக்கும் அமிலங்களை அகற்றி, ஜீரணகோசத்திற்கு அதன் வேலையை சரிவர செய்வதற்கேற்ப பாதுகாப்பளிக்கிறது.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்கும் கூட உத்தமமானது. வயிற்றுப் போக்குக்கு அபினி சேர்ந்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்கு சிறந்தது

C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
86/A, லைனியப்ப நாயக் தெரு, மதறாஸ்-3

JWT/CJH-1938-



அஞ்சுகம்

கல்யாணி

எழும்பூர் ஸ்டேஷனில் வண்டி ஏறும் போது மாரிக்கு ஒரே குஷி. சொந்தக் கிராமத்துக்குப் போகிறோம் என்ற பெருமை அவன் முகத்தில் நன்றாகத் தெரிந்தது. ரயில் கிராமத்தை நோக்கிப் போகப்போக அவன் நினைவு பழைய கொத்தவால்சாவடிப் பக்கம் போய்க் கொண்டிருந்தது. குதுப்மினாரின் உச்சியிலிருந்து தரை மட்டத்தைப் பெருமிதத்தோடு நோக்குவது போல் தான் வளர்ந்துவிட்ட உயரத்திலிருந்து அன்றைக்கிருந்த தரை மட்டத்தை நினைக்கும்போது அவனுக்குக் கர்வம் கூட வந்தது. வளர்ச்சி என்று எண்ணும்போது அவன் மனத்தில் அஞ்சுகம் அப்படியே நிறைந்து நின்றாள்.

கறுப்பென்றாலும் அஞ்சுகம் அழகு தான். மாரி அவள் அழகைவிடக் குணத்தில்தான் முதலில் மயங்கினான். கொத்தவால்சாவடியில் சுற்றிச் சுற்றி வரும் மாரிக்கு அழுகல் பழங்களை வாங்கிப் போய் மூக்கு முனையை அறுத்து விட்டு வியாபாரம் பண்ணுவது, இரவில் ஏதாவது மூலையில் படுப்பது என்பதுதான் மாமூல் வாழ்க்கை. அஞ்சுகத்தைப் போல் அவனும் ஓர் அனாதை. ஆனால் அஞ்சுகத்தின் விஷயம் வேறு. அவளுக்குத் 'தனித் தைரியம்' ஒன்று இருந்தது. அவளும் மார்க்கெட்டுக்குக் கூடை தூக்கி வந்து காய்கறி வாங்கித் தெருத் தெருவாக அலைந்து விற்பவள்தான். ஆனால் அவள் தனக்கென்று ஒரு குடிசை வேய்ந்திருந்தாள். தனியாகத்தான் வாழ்ந்தாள். ஒரு பயல் அவள் வம்புக்குப் போக முடியாது. தனக்குத் தற்காப்பாக அவள் வைத்திருந்ததெல்லாம் வாய் தான். எவனாவது அவளை அப்படி ஒரு பார்வை பார்த்தால் பக்கத்தில் நிற்கும் சண்டியன், 'டேய், சோமாரி! கூடம் பார்த்துச் சாமியாடுடா. அவள் பெரிய வாயாடி!'' என்பான்.

அதி காலையில் கொத்தவால் சாவடிச் சந்தடியில் அஞ்சுகமும் மாரியும் ஒருவரை யொருவர் அமைதியாகப் பார்த்துக் கொள்வார்கள். யாரிடமும் எந்த வம்புக்கும் போகாமல் தன் பாட்டுக்கு வியாபாரத்தில் குறியாக இருக்கும் பொறுப்புத் தன்மை மாரியிடம் ஒரு நல்ல எண்ணத்தை அவளுக்கு ஏற்படுத்தியதில் வியப்பில்லை. மயிலாப்பூரிலிருந்து காலை கிழக்கு வெளுக்கு முன் கொத்தவால் சாவடிக்கென்றே ஒரு பஸ் புறப்



படும். அதில்தான் அஞ்சுகம் கடை சகிதம் வருவாள். எங்கேயாவது ஒரு மூலையில் படுத்துக் கிடக்கும் மாரியை ஏதோ ஓர் உணர்ச்சியின் நெகிழ்ச்சியோடு பார்ப்பாள். அதே பார்வை அவன் மார்க்கெட்டை விட்டுப் போகும்போதும் விழத் தவறுவதில்லை. ஒருவர் போக்கு ஒருவருக்குப் பிடித்தது. இரு மனமும் கலந்து ஒரு நாள் திருமணமும் நடந்தது.

அடேயப்பா! அவர்கள் கல்யாணத்துக்குத்தான் எவ்வளவு தடை? மாரியின் நண்பர்கள் மாரியைத் துளைத்துவிட்டனர். 'அவள் அழகாய் இருக்கிறாள். அதோடு இத்தனை நாட்கள் தனியாக இருந்திருக்கிறாள். இது வரையில் எப்படியோ? இனிமேலும் எப்படியோ?' இப்படி யெல்லாம் பேசினார்கள். மாரி ஒரே பிடிவாதமாக அவளைத்தான் மணந்து கொள்வேன் என்று சொல்லி விட்டான். சாமர்த்தியம் என்று எடுத்துக் கொண்டால் மாரியைவிட எவ்வளவோ கெட்டிக்காரி அஞ்சுகம். உலகத்தை நன்றாக அறிந்தவள். நாலும் தெரிந்தவள். தெருவில் விற்பதை நிறுத்தி விட்டு அஞ்சுகத்தின் புதுக் குடிசைக்கு அருகில் இருக்கும் திருவல்லிக்கேணி கோயிலுக்கு எதிரில் ஒரு சின்னக் கடை போடலாம் என்று அவர்கள் முடிவுசெய்தனர்.

வாடிக்கைக்காரர்களுக்குத் தக்கபடி பேசி அவர்களை எந்த நாளும் தன் கடைக்கே வரும்படி செய்வதில் அஞ்சுகம் கெட்டிக்காரி. நல்ல வியாபாரம். புருஷனும் மனைவியும் ஒருவர் மாற்றி ஒருவர் கடையைப் பார்த்துக் கொண்டனர். வாழ்க்கை எவ்வளவோ சந்தோஷமாக அமைந்தது. இருவரும் தங்களுடைய எதிர்காலக் குடும்ப வாழ்க்கைக்கு என்று அஞ்சும் பத்துமாகச் சேர்க்கும் அளவுக்குக் கடை பெரிதாகிக் கொண்டிருந்தது. மாரிக்கு நிலைகொள்ளவில்லை. எங்கேயோ பாதை ஓரத்தில் சாப்பாடு தூக்கும் பெண்களிடம் எச்சில் சோற்றை விலைக்கு வாங்கித் தின்ற நாட்கள் எங்கே? இப்போது ஓர் அழகியையும் அடைந்து முதலாளி ஸ்தானத்தில் கல்லாவில் உட்கார்ந்திருப்பது எங்கே?

இந்த நிலையில்தான் மாரிக்குத் தன் சொந்த ஊரை, பிறந்த மண்ணைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை குடைந்து கொண்டிருந்தது. பிறந்த ஊரைப் பார்ப்பதே இன்பம். அதிலும் நல்ல நிலையில் இருக்கும் போது ஊருக்குப் போவதென்றால் நிச்சயம் அது பேரின்பம் தானே! கடையைப் பூட்டிக் கொண்டு இருவருமே போகலாம் என்றிருந்தனர். அஞ்சுகம் தான் 'கடையைப் பூட்டினால் வியாபாரம் கெட்டுப் போகும். வாடிக்கைக்காரர்களை வேறு வியாபாரிகள் இழுத்துக் கொள்வார்கள்' என்று திட்டமாகச் சொல்லி விட்டாள். அஞ்சுகம் ஸ்டேஷனுக்கு வந்து சிரித்த முகத்தோடு வழி அனுப்ப மாரி மட்டும் ரயிலில் புறப்பட்டான்.

ஓடிக் கொண்டிருந்த மாரியின் சிந்தனை ரயில் ஒரு ஸ்டேஷனில் நின்றதும் நின்று விட்டது. இன்னும் ஐந்து மணி நேரம் கடந்தால் ஊர் வந்து விடும். ஸ்டேஷனிலிருந்து இரண்டு மைல் வயல் வரப்பில் நடக்க வேண்டும். ஊருக்குப் போய்க் கொண்டிருக்கிறோம் என்பதை நினைக்க நினைக்கப் பூரிப்பாக இருந்தது. காலை மடக்கி உட்கார்ந்தான். அஞ்சுகம் அவன் முன்னே வளைய வளைய வந்தாள். இந்தப் பிரயாணம் அஞ்சுகத்தோடு இருக்குமானால் அதன் இன்பமே வேறுதான். அவள் வந்தால் இதற்குள் நாலு தடவையாவது சாயக் கூஜாவின் இறுக மூடியைத் திறந்து 'தண்ணி குடிக்கிறியா மச்சான்?' என்று கேட்பாள். என்ன செய்வது? ஒரு நாள்கூடக் கடையைச் சாத்தக் கூடாது என்று ஒரே பேச்சாகச் சொல்லி விட்டாளே என்பதை நினைக்க நினைக்க அவனுக்கு வருத்தமாகத் தான் இருந்தது.

ஒரு வழியாக இறங்க வேண்டிய ஸ்டேஷன் வந்தது. சிறையிலிருந்து விடுதலையானவன் வெளியுலகுக்குக் குதூகலமாக வருவதைப் போல் ரயிலிலிருந்து இறங்கியவன் தன் போக்கில் சீட்டியடித்துக் கொண்டு ஒற்றையடிப் பாதையில் நடையைக் கட்டினான். நாலு பக்கமும் அண்ணாந்து பார்த்துக் கொண்டே வந்தவன் டீக் கடைக்குள் புகுந்து, 'ஸ்ட்ராங்காக ஒரு 'சிங்கிள்' அடித்து விட்டுப் பிள்ளையார் கோவில் திண்ணையில் படுத்தான். மாரியின் சதைப் பிடிப்பையும் கையில் கிடந்த மோதிரத்தையும் பார்த்து விட்டு அவன் தூரத்து உறவுக்காரர் ஒருவர் 'என்னப்பா, மாரி! நாங்கள் எல்லாம் இருக்கிறது மறந்து போச்சா என்ன?' என்று உரிமையோடு கடிந்து கொண்டு அவனைத் தம் வீட்டுக்கு அழைத்துப் போனார். அவன் சம்பாத்தியத்தைப் பற்றிக் கேட்டதும் ஒரேயடியாக வாயடைத்துப் போனார்.

மாரி வந்ததனாலோ என்னவோ ஒரே மாரி: மழையோடு காட்டாற்று வெள்ளமும் சேர்ந்து கொண்டது. ஒரே வெள்ளக் காடு: மக்கள் தவித்தனர். மாடு கன்றுகள்கூட அங்கங்கே நீரில் மூழ்கின. மாரிக்கு ஒரே வருத்தமாகப் போய் விட்டது. அஞ்சுகத்தை நினைத்து நினைத்துப் பதறினான். தண்ணீர் தேங்கக்கூட இல்லை; வந்து கொண்டேயிருந்தது. கழுத்தளவுக்காவது நடந்து செல்லும் அளவுக்குத் தண்ணீர் வடியப் பல நாட்கள் ஆகிவிட்டன. அதுவரையில் அவன் தவித்த தவிப்பைச் சொல்லி முடியாது. அஞ்சுகத்தை அவன் எத்தனை நாட்கள் பிரிந்திருக்க முடியும்?

தூக்கிய கையில் சட்டையைக் கழற்றி வைத்துக் கொண்டு உள்ளி உள்ளி நடந்து ஸ்டேஷனை அடையும் போது இருட்டி விட்டது. வண்டி வரும்போது மாரி ஒருவன்தான் அதில் ஏறினான். பட்டணம் எப்போது வரும் என்று தவித்துக் கொண்டிருந்தான்.

பட்டணத்தில் வெய்யில் கன்னென்று அடித்தது. பத்து மணி வெய்யில் உச்சி வெய்யிலாக இருந்தது. பஸ்ஸை விட்டு இறங்காமல் குதித்தவன் ஓட்டமும் நடையுமாகத் திருவல்லிக்கேணிக் கடையை நோக்கி விரைந்தான்; விரைந்தவனுக்கு இடிதான் காத்திருந்தது: கடை சாத்திக் கிடந்தது. குடிசைக்கு ஓடினான். அவளே தூக்கில் தொங்குவது போல் பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது.

பாரம் தாங்காமல் மாடு உட்கார்ந்துவிடுவது போல் அப்படியே திண்ணையில் உட்கார்ந்து விட்டான். சினிமாவில் தனியாக இருப்பவன் காதில், அவள் முன்பு கேட்ட வசனங்கள் விழுவதுபோல் மாரியின் காதில் பழைய பேச்சுக்கள் விழுந்தன,

'ஒருநாள்கூடக் கடையைச் சாத்தவிட மாட்டேன்!'

'ஒருநாளைக்குக் கடையைச் சாத்தினாலும் வாடிக்கைக்காரர்களைப் பிறத்தியார்கள் பிடித்துக் கொள்வார்கள்!' இவை அஞ்சுகத்தின் சொற்கள்.

'அவள் அழகாய் இருக்கிறாள். அதோடு இத்தனை நாட்கள் தனியாய் இருந்திருக்கிறாள். இதுவரை எப்படியோ?' — நண்பர்களின் முகம் பயம் காட்டியது.

இரண்டையும் முடிபோட்டு மாரி தனக் கெட்டிய வரை எதை எதையோ சிந்தித்தான். என்னுத என்னை மெல்லாம் அவன் மனத்தில் தோன்றி அவனைப் பயமுறுத்தியது. ஒருவேளை அப்படியும் இருக்குமா? நண்பர்கள் சொன்னது போல் அஞ்சுகம் எப்படியோதான் இருந்திருப்பாளா? இல்லாவிட்டால், கடையைச் சாத்தக்கூடாது என்று சாக்குச் சொன்னவள் இன்று கடையைச் சாத்திக்கொண்டு போவானேன்? அப்படியே காய்கறிகள் அனைத்தும் விற்றிருந்தாலும் அவள் வீட்டில் அல்லவா இருக்க வேண்டும்? கடையிலும் இல்லாமல், வீட்டிலும் இல்லாமல் இருந்தால் என்ன அர்த்தம்? உள்ளம் குமுறிய மாரி இனி அவள் சம்பந்தமே வேண்டாம் என்று தீர்மானித்தவனும், துண்டை உதறிப் போட்டுக்கொண்டு எழுந்தான். கொத்தவால் சாவடிக்குப் போய் வழக்கமாக வாங்கும் வியாபாரியிடம் காய்கறி வாங்கினான். கூடையைத் தலையில் வைத்துக் கொண்டு தெருவில் குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டான்.

மாம்பலத்தில் தெருவோடு வரும்போது ஒரு வீட்டிலிருந்து 'ஏய் காய்கறி' என்று யாரோ கூப்பிட்டார்கள். வாசலில் போய்க் கூடையை இறக்கியவன் நெருப்பை மிதித்தவன் போலானான். எதிர் வீட்டில் அஞ்சுகத்தின் சிரிப்பொலி கேட்டது. இந்த நேரத்தில் இந்த வீட்டில் அஞ்சுகத்துக்கு என்ன வேலை? மாரியின் தீர்மானம் மேலும் உறுதிப்பட்டது. ஆள் பலே கைகாரிதான் என்று முடிவுக்கு வந்தான்.

"தோட்டம் போட்டு, அங்கிருந்து காய்கறி கொண்டு வருகிறீர்களா? இல்லே, மார்க்கெட்டில் வாங்கி....."

"இல்லேங்க. கொத்தவால்சாவடியில் தான் வாங்கி விற்பது."

"இன்றைக்கு வாங்குகிற காய் விற்க வில்லை யென்றால் என்ன செய்வீர்கள்?"

"மறுநாளைக்கு விற்க வேண்டியது தானுங்க!"



லீலா: நான் கலியாணம் பண்ணிக்கொள்ளப்போகும் பையனுக்குப் பாடத் தெரிய வேண்டும், நிறைய விஷயம் சொல்ல வேண்டும், வீட்டிலேயே இருக்க வேண்டும். என்னை மிரட்டக் கூடாது!

விமலா: நீ சொல்வது பையனில்லே, ரேடியோ!

"ஆமாம், நீ இப்போ இங்கே வந்திருப்பது உன் புருஷனுக்குத் தெரியுமா?"

"அவருதான் ஊரில் இல்லிங்களே! இருந்தால் கடையிலே உக்காத்தி வச்சிட்டு வந்திருப்பேன்."

"பலே கெட்டிக்காரி தான்! வியாபார நினைவாகவே இருக்கியே!"

அதற்கு மேல் அந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்க மாரிக்குப் பொறுமையில்லை.

அஞ்சுகம் தன்னை விடப் பெரிய ஆளாகப் பிடித்துவிட்டாள் என்ற ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது அவனுக்கு. கூடையைத் தூக்கித் 'தக்'கென்று தலையில் வைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான். கண்ணீர் கசிந்தது. ஒரே வெறி. 'சீ, இவளும் ஒரு பொண்ணு?' என்ற விரக்தி ஏற்பட்டது. அவன் தன்போக்கில் ஊர்சுற்றிக் கொண்டிருந்தான்.

திருவல்லிக்கேணி பஸ் ஸ்டாப்பில் இறங்கியவள், "மச்சான்!" என்ற குரல் கேட்டு நின்றான். அஞ்சுகம் அகம் குளிர எதிரில் வந்தாள். மாரி தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். "என்ன மச்சான், கோபம்?" என்று திகைப்புடன் கேட்டாள் அஞ்சுகம்.

"எங்கிருந்து வருகிறாய்?" — உறுமினான்.

"மயிலாப்பூரிலிருந்து!"

'சீ! ஒழுக்கம் கெட்ட கழுதை. உன்னை மாம்பலத்திலே அல்லவா பார்த்தேன்?" என்று கூறி ஒரு தள்ளுத் தள்ளினான் மாரி.

"மச்சான்! உன் சத்தியமாச் சொல்றேன். மயிலாப்பூர்ல ரேடியோ ஸ்டேஷன்லேயிருந்து தான் வாரேன்.!"

"ஏ, நாயே! உன் குரலைத்தான் இன்னிக்கு மத்தியானம் அந்த மாம்பலத்து மாடி வீட்டிலே கேட்டேனே! எவனோ பெரிய மனுஷனோட பேசிக்கினு இருந்தியே?"—மாரியின் கண்கள் சிவந்தன.

"மச்சான்! நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு. தொழிலாளிங்களுக்குன்னு கொஞ்சம் நேரம் வெச்சிருக்காங்களாம் ரேடியோவிலே. அதுலே 'காய்கறிக்காரியோடு பேட்டி' ன்னு என்னவோ இருக்குது. அதுக்குத்தான் போயிருந்தேன்! நிசமா, அத்தான்!" என்றாள். அதற்குச் சான்றாக ரேடியோக்காரர்கள் கொடுத்த 'செக்'கையும் காண்பித்தாள்.

விஷயத்தை மாரி புரிந்து கொள்ளக் கொஞ்ச நேரம் பிடித்தது. புரிந்துகொண்ட பின் அவனுக்குப் பெருமை பிடிபடவில்லை. அவன் அன்புப் பிடிப்பில் சிக்கிய அஞ்சுகத்துக்கும் ஆனந்தம் பிடிபடவில்லை.

மயக்கம் தெளிந்தது!

டி.எஸ்.கே

இப்படி ஒரு மனிதர் இருக்கக்கூடும் என்று நான் கனவில் கூட எண்ணிப் பார்த்ததில்லை!

வேறொரு குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தால், நான் அவரைக் கடுகளவு கூட மதித்திருக்க மாட்டேன். மதிப்பதா!.... அவர் தன்மையைப் பிறரிடம் சொல்லி, கை கொட்டி நகைத்திருப்பேன்.

ஆனால், வாழ்க்கை என்னும் நீண்ட நெடும் பாதையில் என்னுடன் கைகோத்துக்கொண்டு உலவுகிறவர் ஆயிற்றே, அவர்? அவரைப் பற்றி அக்கம்பக்கத்தாரிடம் கூறினால், மட்டமாக நினைக்க மாட்டார்களா, அவரை? பெற்றோரிடம் சொன்னால், எனக்காக வருந்த மாட்டார்களா?

மௌனமாகப் பொறுத்துக் கொண்டு போவதைத் தவிர வேறு வழியொன்றும் தோன்றவில்லை, எனக்கு.

* * *

அன்றைக்கு, அலுவலகத்திலிருந்து அவர் வீடு திரும்பிய போது மணி ஏழே கால். நான் எதிர்பார்த்தது தான். தமிழ்த் திரையுலகின் தனித் தாரகை தமயந்தி நடிக்கும், 'ஹலோ! அத்தான், வாருங்கோ!' என்ற படம் அன்றைக்குத் தான் திரையிடப்படவிருக்கிறது. அந்தப் படத்தின் முதல் காட்சியைப் பார்க்கா விட்டால் இவர் மண்டை வெடித்து விடாதா?

வீட்டுக்குள் நுழையும் போதே முகத்தில் ஆனந்தம் பொங்கிக் கொண்டிருந்தது. அன்று பார்த்த சினிமாவில் காதுக்கு இனிய பாட்டு ஒன்றின் மெட்டை, நாக்கின் நுனி உற்பத்தி செய்து, உதடுகளின் வழியே வெளியே அனுப்பிக் கொண்டிருந்தது.

நான் இத்தனை நேரமாகக் காத்துக்கிடந்ததும், எதிரே, அவர் உதட்டசைவை எதிர்பார்த்து நின்றதும் ஒரு பொருட்டல்ல, அவருக்கு— 'ஹலோ! அத்தான், வாருங்கோ!' மயக்கம் இரும் வரை!

காலிலிருந்து கழற்றப்பட்ட பூட்ஸ், அறையின் மூலைக்குத் தாவி ஓடிற்று. கழுத்துப் பட்டையும், சட்டையும், கால் சட்டையும் நாற்காலியின் மேல் குவிந்தன.

''காப்பி கொண்டு வரட்டுமா?....''

இம்மாதிரி நான் கேட்கப் போவதை எதிர்பார்த்து கேட்டதும், தாம் எப்படிப் பதிலளிக்க வேண்டும், முகத்தில் எந்த உணர்ச்சிகளையெல்லாம் வரவழைத்துக் கொள்ள வேண்டும் என்று முன்கூட்டியே நிர்மாணித்து ஒத்திகை பார்த்துக் கொண்டு விட்டதைப் போலப் பார்த்தார்!

நான் பயப்படவில்லை—ஆறு மாதங்களாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேனே!

''ஐயோ, சாவித்திரி, ஐயோ!...காற்றால் மலையெனப் பருத்திருக்கும் பலூனில், கூர்மையான கத்தியால் சிறு கீறல் போட்டு, வீசம் விநாடியில் அத்தனை காற்றையும் வெளியேற்றுவதைப் போல....''

அந்த நீண்ட பேச்சுத் தொடரை நான் ரசிக்கிறேனா, இல்லையோ என்று அறிய விரும்புவதற்கே போல், ஒரு விநாடி நிறுத்தினார். பின்னர், ''.......மகிழ்ச்சியால் ததும்பிக் கொண்டிருக்கும் என் மனக் குடத்தில் உன் கேள்வியாகிற குண்டைத் தூக்கிப் போட்டு, அதை உடைத்து விட்டாள்!....சேச்சே!...'' என்று முடித்தார்.

என்னுள் ஆத்திரம் பொங்கிக் கொண்டிருந்தது. பிறருடைய உணர்ச்சிகளை மதிக்காமல், தம் உணர்ச்சிகளை மட்டுமே மதிக்கப் பழக்கப்பட்டிருக்கும் அவருக்கு என்ன பதிலைச் சொல்வது? நாய் வாலை நிமிர்த்த முடியுமா?

நான் பெண். பலரறிய அவருக்கு மனைவியாக்கப்பட்டேன். நாற்பது கோடிப் பேர்களில் இந்த 'சத்புருஷ'ரைத் தேடிக் கண்டு பிடித்து, என்னை அவர் காலில் கட்டுவதற்குள் என் தந்தை எவ்வளவு சிரமப்பட்டுவிட்டார்! சொஜ்ஜியும் பஜ்ஜியும் தின்று விட்டு, அப்பாவும் அம்மாவும் பிள்ளையும் பெண்ணுமாய் ஆயிரம் குறுக்குக் கேள்விகள் போட்டு, கன்



னில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு என்னை ஏற இறங்கப் பார்த்து விட்டு, 'சரி' என்று தலையை அசைப்பதற்குள்....

'மனைவியாக வருகிறவளும் ஒரு மனித ஜன்மம் தான். அவள் மரக்கட்டை அல்ல; அவளுக்கும் உணர்ச்சிகள் உண்டு என்பதைச் சிறிதும் புரிந்து கொள்ளாதவர்' என்று, இவர் முகத்தில் அப்போது எழுதியிருக்க வில்லையே!..

ஆறு மாதங்களுக்கு முன் செய்த தவற்றை இப்போது எண்ணிப் பார்ப்பதில் எள்ளளவும் லாபமில்லை. அவருடைய இரக்கமற்ற ஏளனங் களுக்கு நான் ஆளாக வேண்டியது தான். என் வாழ்வோடு பிணைந்து விட்டவர், அவர். அவரை நீக்கி எனக்குப் பெருமை யில்லை. நிம்மதி இல்லை.

"மணி ஏழரைக்கு மேல் ஆகி விட்டதே என்று கேட்டேன். இப்போது காப்பி அருந்தி னால், சாப்பாட்டுக்கு நேரமாகி விடாதா?..."

அவர் என்னைப் பார்த்துப் புன்னகை செய்தார், 'அடப் பைத்தியமே!' என்ற இளப்பம் தோன்ற.

"நீ என்றைக்குத்தான் திருந்தப் போகி றாயோ, சாவித்திரி? கஷ்டம், கஷ்டம்.... கேட்கும் போது குரலில் ஒரு குழைவு, கண் களில் ஓர் ஆவல், உடலில் ஒரு நெளிவு இருக்க வேண்டாம்? இன்றையக் காட்சியில் தமயந்தி ஓர் இடத்தில் ஒரு குலுக்குக் குலுக்கி னள் பார், மனத்தை விட்டுப் போகவே இல்லை!... ஒய்யாரமாக, ஒரு புறமாகச் சாய்ந்து கொண்டு, வீணையொலி போன்ற இன்குரலில்...."

வர்ணித்துக் கொண்டே போக அவருக்கு அலுக்காது. கேட்டுக் கேட்டு எனக்குப் புளித்துப் போய், கசந்து போய் விட்டது! நான் மெல்லத் திரும்பினேன், சமைய லறையை நோக்கி.

"சாவித்திரி.....நில்...."

நின்றேன்.

"நீ என்னை அவமானப் படுத்துகிறாய். நான் பேசிக் கொண்டே யிருக்கையில் நீ திரும்பிப் போனால், அதற்கு என்ன அர்த்தம்? சே!....தெய்வமாகக் கருத வேண்டிய கண வனை, இப்படி அவமானப் படுத்துவதற்கு உனக்கு வெட்கமாயில்லே? மனம் கூசவில்லே?"

அவர் எதிரே, எனக்குப் பதிலாகத் தமயந்தி நின்றிருந்தால், அடுக்குச் சொல்லில் அழகாகப் பதிலளித்திருப்பாள். ஆனால், நானோ, கேவலம் ஒரு குடும்பப் பெண். கணவனின் களங்கமற்ற அன்புக்காக ஏங்கித் தவிக்கும் சாதாரணப் பெண்.

நான் என்ன பதில் சொல்லுவேன்?

'தமயந்தியைப் போல், பணத்துக்காகப் பகட்டாகக் காட்சி தருவதற்கு, நான் சினி மாக்காரி அல்ல. குடும்பத்தையே மையமாகக் கொண்டு சுழலும் சராசரிப் பெண். என் னிடம் குறையும் நிறைவும் உண்டு; ஆசா பாசங்கள் உண்டு. நான் மனைவியாக வாழ விரும்புகிறேன். நடிக்க அல்ல...' நெஞ்சில் கிளர்ந்தெழுந்தன சிந்தனைகள். வாய்க் கதவை இறுகப் பூட்டி நின்றேன்.

மீண்டும் அவர் தான் பேசினார்.

"அதோ, பார்..!"

அவர் விரல் வழியே என் கண்கள் நடந் தன. சுவரில், தமயந்தி! — ரவிவர்மாவின் எழில் நங்கை அல்ல; இவ்வளவு நேரமாகப் புகழுரைகளால் இவர் அருச்சித்துக் கொண் டிருந்தாரே, அவள்!... அந்த....அந்த..வேண் டாம். அவளை எதற்காகத் திட்ட வேண்டும்?

"தினமும், அந்தப் படத்துக்கு முன்னால் நின்று கொண்டு, கன்னத்தில் போட்டுக் கொள். 'உன்னைப் போல், பெண்மைக்குப் பெருமை தேடித் தருபவளாக என்னையும் ஆக்கு. உன் அழகிய கடைக்கண்களால் என் மேல் நவீன நாகரிகத்தைப் பொழி' என்று வேண்டிக் கொள். அப்போதாவது நீ நல்ல படியாகத் திருந்துகிறாயா என்று பார்க்





கச்சேரி கேட்கும் ஒருவர்: இதென்ன எல்லோரும் சேர்ந்து பாடுகிறார்கள்?
மற்றவர்: பிரதர்ஸ் என்றும் இரண்டு பேர் மட்டும்தான் பாடணும் என்று எங்கே சொல்லியிருக்கு? இவா எல்லோருமே 'பிரதர்ஸ்' தான்.

கிறேன்!...'' என்னைக் கேலி செய்வதில், மட்டம் தட்டுவதில் தான் அவருக்கு எத்தனை ஆனந்தம்!

புராண காலத்துப் பெண்ணாக இருந்திருந்தால், 'இந்த வகையிலாவது என்னால் அவருக்கு ஆனந்தத்தைத் தரமுடிகிறதே!' என்று எண்ணி. புளகாங்கித மடைந்திருப்பேன். ஆனால், இருபதாம் நூற்றாண்டுப் பிறவி யாயிற்றே, நான்! ஓரளவு பள்ளிக்கூடத்தில் படித்தவள்; இளம்பெண்களோடு பழகியவள்; அக்கம் பக்கத்தினரைப் பார்த்துப் பார்த்து ஆயிரம் கனவுகளை வளர்த்துக் கொண்டவள். நான் எப்படிச் சுரணையில்லாதவளாக இருக்க முடியும்?

என் மனம் உடைந்து தான் போயிற்று, அவர் பேச்சைக் கேட்டு. ஆனால் அதற்காக அனுதாபம் தெரிவிப்பவர் யார்? தெரிவிப்பதற்குப் பாத்தியம் உடையவர் தான், கண்ணைக் கட்டிக் கொண்டு, காட்டு வழியில் நடந்து கொண்டிருக்கிறாரே?

* * *

சலிப்பு, வெறுப்பு, விரக்தி — இவற்றின் எல்லையில் வந்து நிற்கிறேன் நான்.

அவருடைய அன்பைப் பெற வேண்டும் என்பதற்காக நான்செய்த செயல்கள் எல்லாம் அவருடைய ஏளனத்துக்கு என்னை ஆளாக்கினவே தவிர, எனக்கு வெற்றியைத் தேடித் தரவில்லை.

தமயந்தியின் படத்துக்கு முன் நின்று நான் கன்னத்தில் போட்டுக் கொள்ளவில்லை என்பது என்னவோ உண்மைதான். அவள் படத்துக்கு முன் நின்று, அவளைப் பற்றி யோசித்தேன். ஆண் ரசிகர்களைக் கவருவதற்காக என்றே அவள், அதற்கேற்ப நடிக்கிறாள். அவளைப் போல் மாறுவது ஒரு குடும்பப் பெண்ணுக்கு ஆகாத காரியம். ஆனால், அவளைப் போல் ஓரளவாவது ஆகலாந்தானே, இவருடைய கட்டுக் கடங்காத மனத்தைத் திருப்ப முடியும் போலிருக்கிறது?

ஆம், நானும் தமயந்தியாக மாற வேண்டும். இன்றே. இப்பொழுதே. மாறப் போகிறேன்!

வேதப் புத்தகங்களைப் போல் அவர் புனிதமாகப் போற்றும் சினிமாப் பத்திரிகைகளை அள்ளிக் கொணர்ந்து என் முன்னே பரப்பிக் கொள்கிறேன். தமயந்தியைப் பற்றிய செய்திகள்,—அவள் கூந்தல் அலங்காரங்கள், எழில் கொஞ்சும் வண்ண உடைகள், பேச்சு, நடை — அனைத்தையும் கரைத்துக் குடிக்கிறேன்.

ஒரு மணிக்குப் பின்பு, என்னை எனக்கே புரியவில்லை! அத்தனை மாறுதல்!

பால்காரன் குரல் கேட்டு வெளியே வருகிறேன். அவன் வியப்போடு விழித்துப் பார்க்கிறான். கன்னத்தில் பளாரென்று கொடுக்க மாட்டோமா என்று உள்ளம் தவிக்கிறது.

பாத்திரத்துடன் உள்ளே போகத் திரும்புகையில் 'சாவித்திரி' என்ற குரல் கேட்கிறது. கமலா நுழைகிறாள்.

''என்ன?''

''இன்றைக்கு என்ன விசேஷம்?''

''ஒன்றுமில்லையே!''

''அலங்காரம் படு பிரமாதமாக இருக்கிறதே!'' என்று வியக்கிறாள்.

பெருமிதத்துடன் திரும்புகிறேன். 'நன்னாயிருக்கு. சினிமாக்காரி மாதிரி கொண்டையும் மண்டையும்!' — கமலாவின் அம்மா மெல்லிய குரலில் விமர்சனம் செய்வது இலேசாகக் கேட்கிறது.

'ஆ!...இதுதான் என் வெற்றி! அவருடைய அன்பு நோக்குக்காக, இவர்களுடைய நூறு ஏளனங்களை நான் வரவேற்கத் தயாராக இருக்கிறேன்!'

மணி ஆறரை.

அதோ, தெருக்கோடியில் வருவது அவர் தான்.....அவர் தான்...

நெஞ்சு படபடக்கிறது. இன்று அவர் என்னைக் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கப் போகிறார்!.....

'கண்ணே, சாவித்திரி! உன்னுடைய சாமர்த்தியத்தை யெல்லாம் இத்தனை நாட்களாக எங்கே ஒளித்து வைத்திருந்தாய்?...இன்ப மயமாகக் கழிந்திருக்க வேண்டிய எட்டு மாதங்களைப் பாழாக்கி விட்டோமே!...'

வீட்டுப் படியில் அவர் காலை வைக்கிறார்? என் உதடுகள் — உதடுகள் மட்டுமா? உள்ளமும் தான்! — மலர்கின்றன.

''வாருங்கள். ஏன் இன்றைக்கு இவ்வளவு நேரம்? நான் உங்களுக்காக எவ்வளவு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறேன், தெரியுமா?.....''

அவர் என்னைக் கவனியாமல் உள்ளே போகிறார். காரியாலயத்தில் அதிக வேலையோ? 'புள்ளிமான் போல்' என்பார்களே; அப்படித் துள்ளிக் கொண்டு அவரைப் பின் தொடர்கிறேன். உல்லாசத்துடன் தெரிந்த வண்ணம் அவருடைய கழுத்துப் பட்டையைத் தளர்த்த முற்படுகையில்...

''சாவித்திரி....''


இடியா, என்ன?

இல்லை அவர்தான். அவரா? ஏன் இப்படி அலறுகிறார்? முகம் ஏன் சிவக்கிறது? கண்களில் ஏன் அனல் பறக்கிறது?...

உடம்பு சரியில்லையோ என்ற கவலையுடன் நெற்றியில் கையை வைத்துப் பார்க்கையில்...

அவருடைய முரட்டுக்கரம் என் கையைப் பிடித்துத் திருகுகிறது. நான் தவிக்கிறேன், ஒன்றும் புரியாமல்.

''என்ன? என்ன, உங்களுக்கு?...''


மாணிக்கத்தின் முன்யோசனை
"அவன் ராமுதானே? எங்கே போகிறான்?"
"பாலிடெக்னிக் படிப்பிற்காக பட்டணம் போகிறான்"
"அவனுக்குப் பணம் எங்கிருந்து கிடைத்தது? மாணிக்கம் இறந்து இப்பொழுது வருடமாகின்றது ஆச்சு ஆண்டுகளையே! ராமுவின் தாய் சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டு வேலை செய்துகொண்டிருக்கிறாளே!"
"மாணிக்கம்தான் முன் யோசனையுள்ள மனிதராயிற்றே! தன் மகனுடைய கல்விக்கான ஆயுள் இன்ஷூரன்ஸ் பாலிசி இருந்தது எடுத்திருந்தார் அவர். பாலிசியின்படி வருடாந்திரம் இப்பொழுதிலிருந்து 4 வருடங்களுக்கு மாதா மாதம் ரூ. 50 ஐ ராமு பெற்று வருவான்."
இது ஆயுள் இன்ஷூரன்ஸால்தான் முடியும். ராமுவின் தந்தை இறந்து வருடங்கள் ஆகின்றன. தன் மகனுக்கென்று எதையும் விட்டுச் செல்லவில்லை அவர். என்றாலும் அவனுடைய சொந்த தொழில் நுணுக்கக் கல்வி தங்கு தடையின்றி நிறைவேறும் ஆயுள் இன்ஷூரன்ஸ் உதவியால்.
ஆயுள் இன்ஷூரன்ஸ் போல
ஆதரவு தருவது எதுவுமே இல்லை
4SP/LIC/86 · TAM

"சீசீ! இந்தச் சாகசமெல்லாம் என்னிடம் நடக்காது!....."

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"சொல்வதற்கு என்ன இருக்கிறது? இது வீடா, நாடக மேடையா? கன்னாராவியாய் அலங்காரம் பண்ணிக் கொண்டு, நாலு பேர்கள் பார்த்து இளிக்கும்படியாகத் தெருவில் வந்து நிற்க வெட்கமாயில்லே? வாசற்படியிலேயே நின்று கொண்டு கொஞ்சுவதற்குக் கூசவில்லே?...."

பதில் சொல்லவில்லை, நான். ஓடிச் சென்று படுக்கையில் விழுந்து குமுறுகிறேன்.

குமுறல் அடங்க இரண்டு நாட்கள் ஆகின்றன. இதுவரை கண்ட தோல்வி அதைரியத்துக்குப் பதிலாகப் பிடிவாதத்தைத் தருகிறது. நான் எப்படியும் அவரை என்னுடையவராக்கிக் கொள்ள வேண்டும். ஓ! கடைசியாக, 'இப்படியும் செய்து பார்த்து விட்டால் என்ன? ஆனால்? ஆனாலாவது, போனாலாவது? தயக்கமே கூடாது. மனத்தில் மாசு படியாத வரையில் நான் எவரைக் கண்டு பயப்பட வேண்டும்?

ஃ ஃ ஃ

ஞாயிற்றுக் கிழமை. அவருக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தேன்.

"இன்றைக்கு மத்தியானம் சினிமாவுக்குப் போனீர்கள் அல்லவா?"

"ஆமாம்...."

"நானும் வரட்டுமா?"

"அடி சக்கைன்னான்!... எத்தனை நாட்களாக இந்த ஆசை?...."

"..........."

"உன்னையும் என்னுடன் அழைத்துக் கொண்டு போனால், 'இவள் என்னுடைய மனைவி!' என்று பெருமையோடு நாலு பேரிடம் அறிமுகப்படுத்தி வைக்கத் தகுந்த பெண் பார், நீ!....."

"உங்களுக்கு இஷ்டமில்லா விட்டால் வேண்டாம்...கமலா கூட மாட்டினிக்குப் போகிறாளாம்...."

"நீயும் அவளோடு போவதில் எனக்கு ஆட்சேபனை இல்லே!...."

"நிசமாகவா?"

"நிசமாகத்தான். அவளோடு போய்வா."

இந்த அளவுக்கேனும் அனுமதி கொடுத்தாரே என்று என் மனம் துள்ளியது.

மாலையில் அவருக்கு முன்பாகவே நான் வீட்டுக்குத் திரும்பி விட்டேன். அவர் நுழைந்ததும் நுழையாததுமாய், "இன்றைக்கு நாங்கள் பார்த்த சினிமா ரொம்பப் பிரமாதம்!" என்றேன்.

"எந்தப் படம் பார்த்தாய்?"

"ராஜாவில் ஓடுகிறதே..."

"...அதையே தான் நான் விஜயாவில் பார்த்தேன்! தமயந்தி எப்படி நடிக்கிறாள், பார்த்தாயா?....நான் அவளைப் புகழ்ந்தால் உனக்குக் கோபம் கோபமாக வருமே; இப்போது நீயே தெரிந்து கொண்டிருப்பாய்! இல்லையா?"

"தமயந்தி மட்டும் தானா? பிரபாகர் கூடத் தான் நன்றாக நடிக்கிறார்!....."

"ஆமாம். கல்லூரிக்குப் புறப்படுவதற்கு முன், அழகாக டிரஸ் பண்ணிக் கொண்டு தமயந்தி புறப்படுகிறாளே? மனத்தை அள்ளிக் கொண்டு போகவில்லே, அந்தக் காட்சி?..."

"பிரபாகர், பாண்டும் ஸ்லாக்கும் அணிந்து கொண்டு சுருள் சுருளாகக் கிராப்பை வாரி விட்டுக் கொண்டு துள்ளித் துள்ளி நடக்கிறாரே, அந்தக் காட்சியும் தான்!..."

"சரி, சரி. காப்பி விருந்தால் கொடு. மகா ரசிகை, நீ. விமர்சனம் செய்ய வந்து விட்டாய்!"

என் உள்ளம் ஏனோ விம்மிதமுற்றது.

ஃ ஃ ஃ

மறுநாள் காலை. காப்பியும் கையுமாக அவரருகே போனேன்.

விஷமம் செய்ய என் மனம் பரபரத்தது.

அவரிடம் டம்ளரை நீட்டிய படியே, "பிரபாகர், ஓர் இடத்தில், பனியனும்வேட்டியும் அணிந்து கொண்டு, பத்திரிகை படித்துக் கொண்டே காப்பிக்காகக் கையை நீட்டுகிறாரே நினைத்தாலே, அந்தக் காட்சி இன்பமயமாகத் தோன்றுகிறது!" என்றேன்.

காலி டம்ளரை 'ணங்'கென்று கீழே வைத்தார், அவர்.

ஃ ஃ ஃ


உணவு வேளை. வழக்கம் போல் என் சமையலைக் குறை கூறியபடியே சாப்பிட்டுக் கொண்டிருந்தார், அவர்.

"நேற்று சினிமாவில் பிரபாகர் ஒரு விருந்துக்குப் போன காட்சி வந்ததே? விருந்து கொடுத்த நண்பரிடம் எவ்வளவு அன்பாக, சந்தோஷமாகப் பேசினார்; ஒவ்வொரு 'அயிட்டத்தை'யும் ரசித்துப் புகழ்ந்தார்!"

"சாவித்திரி! நீ நிறுத்த மாட்டாய்?"

"பார்த்தீர்களா, இந்த மாதிரி ஒருதடவையாவது அவர் சள்ளென்று எவர் மீதாவது விழுந்தாரா?"

"அவன் கொள்ளே கொள்ளையாகச் சம்பாதிக்கிறான்; நடிப்புக்காக என்ன வேண்டுமானாலும் செய்வான்."



கணவன் : திருடியவன் என்றைக்காவது ஒரு நாள் வருத்தப்பட்டுத் தான் ஆகணும்!

மனைவி : நீங்கள் கூடத்தான் ஒரு காலத்தில் என் ஹிருதயத்தைத் திருடினீர்கள்!

கணவன் : ஏன், அதற்காக நான் இப்பொழுது வருத்தப்படுகிறேனே!

"ஆயிரத்தைச் சொல்லுங்கள்; அவர் அழகு, நடை, உடை, பாவனைகள், நாகரிகம்—இவை யாருக்கும் வராது!"

"சாவித்திரி! எனக்கு இப்போது மோர் ஊற்றப் போகிறாயா? இல்லை, பிரபாகர் புராணத்தைத் தொடர்ந்து நடத்தப் போகிறாயா?"

வெற்றியை நோக்கி நாலைந்து படிகள் ஏறிவிட்ட பிரமை உண்டாயிற்று, எனக்கு.

ஃ ஃ

சாயங்காலம் வீட்டுக்குள் அவர் நுழையும் போதே கண்களில் பட்டுவிட்டது, அந்தப் படம்.

"சாவித்திரி!" என்று கர்ஜித்தார் அவர்.

துள்ளு நடையில் நெருங்கி, "கூப்பிட்டீர்களா?" என்றேன்.

"இது என்ன?"

"ஓ! அதுவா? தமிழ் நாட்டின் தலைசிறந்த நடிகர் பிரபாகரின் படம்! நன்றாக இல்லை? சற்று முன்பு நான் கடையிலிருந்து வாங்கிக் கொண்டு வந்து மாட்டினேன். அந்தக் கண்களைப் பாருங்களேன்!"

"சாவித்திரி, உன் மனத்தில் நீ என்ன எண்ணிக் கொண்டிருக்கிறாய்?"

"ஏன்? பிரபாகர் ஒரு நல்ல நடிகர், ஆணழகர் என்று...."

நான் எதிர்பார்க்கவில்லை. அடுத்து அம்மாதிரி நடக்கும் என்று சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை.

எனக்குப் பொறி கலங்கி, நான் மயங்கிய போது தான் அவர் என் கன்னத்தில் ஓங்கி அறைந்த உணர்வு உண்டாயிற்று.

"நீ ஒரு முட்டாள் என்று மட்டும் எண்ணிக் கொண்டிருந்தேன். நீ எவ்வளவு திமிர் பிடித்தவள், விகல்பமான மனம் உடையவள் என்பது இப்போது புரிகிறது."

"நான் என்ன தவறு செய்தேன்? நீங்கள் தமயந்தியின் படத்தை மாட்டியிருக்கிறீர்கள். அவளருகில், நான், பிரபாகரின் படத்தை மாட்டியிருக்கிறேன். இரண்டு பெரும் நடிகர்களை நாம் எப்போதும் பார்த்துக் கொண்டு, அவர்களைப் புகழ்ந்து கொண்டு...."

"சீ!"

இந்தத் தடவை அவர் கையால் ஸ்பரிசிக்கப் பெறும் பேற்றை என் இடது கன்னம் அடைந்தது. நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவர் விடுவிடென்று வெளியேறி விட்டார்.

ஃ ஃ ஃ

குற்றம் செய்து விட்டவரைப் போலத் தலையைக் கவிழ்த்துக் கொண்டு அவர் வீட்டுக்குத் திரும்பியபோது இரவு மணி ஒன்பது. திகிலுடன் அவர் சுவரைப் பார்த்தார். தமயந்தி மட்டும் சிரித்துக் கொண்டிருந்தாள்!

என்ன தோன்றிற்றோ, அவருக்கு? மெல்ல நடந்து சென்று அந்தப் படத்தைக் கழற்றினார். வாசற்புறம் நோக்கி நடந்தார்.

"என்ன செய்யப் போகிறீர்கள்,அதை?"

"குப்பைத் தொட்டியில் வீசி எறியப் போகிறேன்."

ஒரு நிமிஷம் மௌனம்.

"....அவள் ஒன்றும் தவறு செய்யவில்லையே?" என்றேன்

அவர் நெற்றியைத் தடவிக் கொண்டு நின்றார்.

"தவறு நம்...முடை....யது...."

திரும்பி என்னைப் பார்த்தார். அவர்.. 'இன்னும் – எத்தனை – நேரத்துக்கு – என்னை வதைக்கப் போகிறாய்?' என்ற பார்வை. திருமணமான நாளிலிருந்து நான் காணாத பார்வை.

"என்னை மன்னித்து விடுங்கள்."

அவர் என்னருகே வந்து முகவாயைப் பிடித்து நிமிர்த்தினார். அவர் கண்களை ஊடுருவிப் பார்த்தேன்.

எவ்வளவு நல்லவர், இவர்! இவருடைய மனத்தைத் துன்புறுத்திய நான் பாவி..

"சாவித்திரி, நீண்ட மயக்கத்திலிருந்த எனக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்து நல்ல உணர்வைத் தந்திருக்கிறாய்..."

"அது ஒரு நீள் கனவு. இனி மறந்து விடுங்கள்." அவர் கையிலிருந்த படத்தை வாங்கிச் சுவரில் மாட்டினேன்.

"வேண்டாம், சாவித்திரி, வேண்டாம்! அது அங்கே இருக்க வேண்டாம்...."

"ஏன், தமயந்தி என் சக்களத்தி அல்லவே? இனி, அவள், என் சகோதரி."

அவருடைய பார்வையின் கூர்மையைத் தாங்க முடியாமல் தலையைத் தாழ்த்திக் கொண்டேன் நான். 'இனி, அவர், முழுக்க முழுக்க என்னுடையவரே' என்ற நினைவு என்னைக் கர்வம் கொள்ளச் செய்தது.

அவசரம்
அவசரம்
அவசரம்

கடுமையான சுரம். உடல் நிலை கவலைக்கிடமாயிருக்கிறது... உடனே செய்தி அனுப்ப வேண்டும்

அதற்காகவே "ப்ரயாரிட்டி" தந்தி உள்ளது

நோய், விபத்து, மரணம் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் "ப்ரயாரிட்டி" தந்தியை உபயோகியுங்கள்.

எல்லா எக்ஸ்பிரஸ், அவசர தந்திகளைவிட இது வேகமாகப் போய்ச்சேரும். செலவும் அதிகம் இல்லை. வழக்கமான எக்ஸ்பிரஸ் தந்திக்கு உள்ள கட்டணம்தான் இதற்கும்.

தந்தியை அனுப்பும்போது மட்டும் "ப்ரயாரிட்டி" என்று குறிப்பிடுங்கள்

உங்களுக்கு சிறந்த முறையில்
சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்

தபால் தந்தி இலாகா

படித்துப்  பாருங்கள்

அன்பு வலை

இப்புதினத்தின் கதாநாயகி வள்ளி. கதாநாயகன் குமரன். கதா போக்கிரிகள் நல்லமுத்து, செல்வம் என்பவர்கள். இப்புதினத்தில் குறிப்பிடக் கூடிய ஒரு விசேஷம் என்னவென்றால், இவ்விரு கதா போக்கிரிகளும் கடைசி வரை கதா போக்கிரிகளாக இருந்து கழுத்தை அறுக்க வில்லை. கதா போக்கிரிகளாக வந்து — வந்ததும் வராததுமாகவே நல்லவர்களாக மாறி வள்ளியின் அண்ணன்மார்களாக உறவு கொண்டாடத் தொடங்குகிறார்கள். 'தீயவர்கள் என்று கருதப்படுகிறவர்களிடமும் நல்ல மனம் ஒளிந்து கிடக்கிறது' என்னும் தமது கூற்றை ஆசிரியர் வெகு நேரம் ஒளித்து வைக்க விரும்பாததுவே இதற்கு ஒரு காரணமோ என்னவோ?

கதாபாத்திரங்களே தங்கள் கதையைக் கூறும் முறையில் எழுதப்பட்டிருக்கும் இப்புதினத்தில் ஒன்றும் புதிதாக இல்லை.

பொழுது போக்குக்கு ஒரு புதினத்தை எடுத்துப் படிக்கலாமே என்று எண்ணுபவர்கள் இதைப் படித்து விட்டு, படித்து முடித்ததும் எப்படியோ நம் பொழுது போய் விட்டதே என்று வேண்டுமானால் மகிழலாம்.

எழுதியவர்: கரந்தை சிவா, எம்.ஏ., பிரசுரம்: வள்ளுவர் பண்ணை, 137, பிராட்வே சென்னை-1: விலை: 3-50.

வாழ்க்கைத் துணைவி

நம் பாரத நாட்டுச் சிறப்புக்கு முக்கிய காரணமானவர் பண்புடைய, சீலமுடைய பெண்கள்தான். நம் நாட்டில் ஒரு பெண் பிறந்து விட்டால் அவளைக் கணவனுக்கு ஏற்ற மனைவியாக வாழவும், குலத்தை விளங்க வைக்கவும், பிறந்த வீட்டுக்கும், புகுந்த வீட்டுக்கும், தாய் நாட்டுக்கும் பெருமை தேடித் தரும் கடர்மணியாக வளர்க்கப் பாடுபடுவதும் நம் மரபு.

காலப் போக்கில் போலி நாகரிக மயக்கத்தில் பெண்கள் தங்களுடைய உயர் நிலையை மறந்து, கணவனுக்கு மாறாகப் போகும் இத்தச் சமயத்தில் 'வாழ்க்கைத் துணைவி' என்ற இப்புத்தகம் உற்ற துணையாக வெளிவந்திருக்கிறது. பெண் அன்புருவமாக, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை இந்த நூல் எடுத்துரைக்கிறது. சமையல், குடும்ப நிர்வாகம், ஆடை அலங்காரம், உத்தியோகம் செய்வது, குழந்தை வளர்ப்பது போன்ற எல்லா விஷயங்களிலும் பெண்கள் விழிப்பாக, அதே சமயம் அடக்கமாக எப்படிச் செய்ய வேண்டும் என்பதை ஆசிரியை சுவையுடன் கூடிய எளிய நடையில் தெளிவாகத் தெரிவிக்கிறார்.

ஆண்களில் சிலர் அதிகக் கோபம், ஆணவம், வேண்டாத சிக்கனம், ஏறுமாறான நடத்தை ஆகிய குணங்களுடன் காணப்படுகின்றனர். இத்தகைய கணவன்மாரிடம் மனைவிமார்கள் எப்படிச் சாதுரியமாக நடந்து கொண்டு மகிழ்வுடன் இல்லறம் நடத்துவது என்பவை போன்ற கருத்துக்களை ஆசிரியை வெளியிட்டிருந்தால் அதிகப் பயனைத் தருவதாக இருக்கும்.

ஆசிரியர்: சரோஜினி சங்கர்; வெளியீடு: கலைஞன் பதிப்பகம், சென்னை 17; விலை: ரூ. 2.

குழந்தை வளர்ப்பு

ஒரு நிமிஷத்துக்குக் கோடிக்கணக்கான குழந்தைகள் பிறக்கின்றன வளருகின்றன. ஆனால் இன்னும் குழந்தைகள் வளர்ப்பு பற்றித் திட்டமான நிர்மான முறைகள் வகுக்கப்பட வில்லை.

ஒரு குழந்தையை எப்படி வளர்த்தால் அது பெற்றோர்களுக்கு ஆனந்தத்தைத் கொடுக்கும், பிற்காலத்தில் சிறப்பாக வாழும், ஆரோக்கியமாக இருக்கும் என்பது தாய்மார்களுக்குப் புரியாத புதிராக இருக்கிறது. இதனால் அநேக சிக்கல்கள், துன்பங்கள் குடும்பத்தில் ஏற்படுகின்றன.


ஒரு குழந்தையை வளர்க்கும்போது என்னென்ன இடையூறுகள் நேரும், தாயின் மனநிலை எப்படி இருக்கும், குழந்தையின் பருவத்துக்கேற்ப உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி, அந்தந்தக் காலத்தில் கொடுக்க வேண்டிய உணவு இப்படி அநேக விஷயங்களை அலசி ஆராய்ந்து முடிவுகட்டி எழுதிய அபூர்வமான நூல் இது. குழந்தை வளர்ப்பைப் பற்றி ஒரு சின்ன விஷயம்கூட விட்டுப்போகாமல் பூரணமாக எழுதப்பட்டிருக்கிறது.

டாக்டர் பெஞ்சமின் ஸ்போக் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய புத்தகத்தின் மொழிபெயர்ப்பு இந்நூல். அரிய கருத்துரைகள் நிரம்பி யிருக்கின்றன. ஆங்கிலப் பதிப்பு கோடிக்கு மேலாக விற்பனை ஆகியிருப்பதில் ஆச்சரியமில்லை. தாய்மாரிடம் இருக்க வேண்டிய புத்தகம். இதைத் தமிழ்ப்படுத்தியவர்



நோயாளி: வயிற்றில் அபெண்டிக்ஸ்' இல்லாமல் மனிதன் பிழைக்க முடியும் என்கிறார்களே நிஜம்தானா?

டாக்டர்: ஆனால் நாங்கள் அது இல்லாமல் பிழைக்க முடியாதே!



"நேற்றைய தினம் நாடகத்திலே நீ நடிக்கும் போது 'உள்ளே போ! உள்ளே போ' என்று கூட்டம் சத்தம் போட்டதாமே!"
"சுத்தப் பொய். நாடகம் நடக்கும்போது கொட்டகையில் ஒரு ஆசாமிகூட இல்லையே!"

டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன் எம்.பி பி. எஸ். டி. எம். வி. எச். எம். பி. எச். ஜான் ஹாப்கின்ஸ் யு. எஸ். ஏ. அவர்கள் எளிய நடைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.

வெளியீடு: பேர்ல் பப்ளிகேஷன்ஸ் சென்னை; மலிவுப் பதிப்பு: விலை: ரூ. 1 00.

அதிசய நாய்

'அதிசயமாவது, நாயாவது' என்று கேட்க வேண்டாம். நாலு அல்லது ஐந்து வயது நிரம்பிய குழந்தை உங்கள் வீட்டில் வளைய வருகிறதா? அதனிடம் இந்தப் புத்தகத்தைப் படித்துக் காட்டுங்கள். திறந்த வாய் மூடாமல் சுவாரசியமாய்க் கேட்டுக் கொண்டேயிருக்கும். சுந்தலையும் மணியையும் ஆபத்து அணுகுகிற நேரத்தில் கண்களை அகல விரித்துக் கலங்கும்; அபாயம் நீங்கியதை அறிந்ததும் கைகொட்டி மகிழும். குழந்தையினிடம் இந்த உணர்ச்சிகளெல்லாம் கொப்புளிப்பது கண்டு நீங்கள் அதிசயிக்குமாறு செய்யும் இந்த அதிசய நாய்' அத்தியாயத்துக்கு அத்தியாயம் அழகழகான படங்களுடன், குண்டு குண்டான எழுத்துக்களில் நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்: வாண்டு மாமா; பிரசுரம்: பழனியப்பா பிரதர்ஸ்; சென்னை-5; விலை: ரூ. 1.75.

காலத்துக்கு வணக்கம்

காலம் எப்படி ஒரு வளரும் எழுத்தாளனின் கருத்துக்களையும், கற்பனையையும், கதை சொல்லும் பாணியையும் மாற்றி விடுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பத்துக் கதைகளைத் தன்னகத்தே கொண்டு வணக்கம் கூறி வரவேற்கிறது இந்தப் புத்தகம்.

தரித்திர நாராயணனுக்கு அதிர்ஷ்ட தேவதை அருள் செய்தும்கூட நாணயத்தைக் காப்பாற்ற அந்த அப்பாவிக் குமாஸ்தா செய்த காரியத்தை நினைக்கும் போது நாராயணனைப் போன்றவர்களுக்காகத்தான் உலகத்தில் மழை பெய்கிறது, வெய்யில் காய்கிறது, பயிர் விளைகிறது, காற்று வீசுகிறது' என்று நாமும் கர்வப் படத்தான் செய்வோம்.-

மாதவியைப்போன்ற ஓர் அழகியைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டால் யாரால் தான் அவளை மறக்க முடியும்? படிப்பவரின் நினைவிலும் நிற்பவள் அந்தக் கேரளத்துக் கட்டழகி.

'பழகினால் கசப்பைப்போல் சுவை வேறு இல்லை' என்ற சிற்சபேசனின் வாக்கை மெய்ப்பிப்பது போல் வேப்பம்பழம் சிந்திக்க வைக்கும் சித்திரம். இப்படி ஒவ்வொரு கதையையும் பற்றிச் சொல்லுவதை விட நீங்களே ஒரு முறை படித்து விடுங்களேன் என்று சிபாரிசு செய்வது சுலபம்.

ஆசிரியர்: நா. பார்த்தசாரதி. பிரசுரம்: வள்ளுவர் பண்ணை; 137. பிராட்வே, சென்னை – 1. விலை ரூ. 3.00

காதல் வாழ்வு

ஏட்டிலே ஏறிக் கிடக்கும் எண்ணற்ற பாடல்களை நாம் படிக்கிறோம்; ரசிக்கிறோம். ஆனால் நாட்டிலே எத்தனையோ காலமாக வழங்கி வரும் நாட்டுப் பாடல்களை நாம் ஊன்றிப் படித்து அநுபவிப்பதில்லை. அந்தக் குறை நீங்க இந்நூல் வெளி வந்திருக்கிறது. பழைய காலத்து நாட்டுப் பாடல்களைக் கோவைப்படுத்தி ஆசிரியர் எழுதியிருக்கும் விளக்கங்கள் மிகத் தெளிவாக உள்ளன.

இந் நூலில் அடங்கியிருக்கும் பாடல்கள் முழுவதும் காதல் சம்பந்தப்பட்டவை; சுவை நிறைந்தவை. சொல் நயமும் பொருள் நயமும் கொண்டு படிக்கப் படிக்கத் தேனாக இனிப்பவை. 'இலக்கியத்தின் தாய்' என்ற தலைப்பில் ஆசிரியர் தீட்டியிருக்கும் திறனாய்வு முன்னுரை அருமையாக அமைந்திருக்கிறது.

ஆசிரியர்: தமிழண்ணல்; பிரசுரம்: செல்வி பதிப்பகம், காரைக்குடி; விலை: ரூ. 22-5.

சித்திரத் தையற் கலை

ஒவ்வொரு வீட்டிலும் வரவேற்பு அறையை அலங்காரம் செய்து வைப்பது இன்றைய நாகரிகம். கடைகளில் விற்கும் விலை உயர்ந்த படங்களையும், சாமான்களையும் கால் வைக்க இடமில்லாமல் அடுக்கி வைத்து விட்டால் அது சிறந்த கலைப் பண்பாகாது. கை வேலையுடன் கூடிய பொருள்களை அலங்கரிப்பது தான் அழகாக அமையும்.

வீட்டிலிருந்தே பூவேலைகள் செய்யக் கற்றுக் கொள்ளச் சித்திரத் தையற்கலைப் புத்தகம் இன்றியமையாததாக இருக்கிறது. ஒவ்வொன்றையும் நுட்பமாக எப்படித் தைப்பது என்பது பட விளக்கத்துடன் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. ஊசியில் நூல் கோக்கத் தெரியாத பெண்கள்கூட இப்புத்தகத்தைப் படித்துத் தையல் கற்றுக் கொள்ள முடியும். மற்றும் தையல் தோன்றிய சரித்திரம், பட்டு பிறந்த வரலாறு, வண்ணச் சாயம் ஏற்றும் முறை, பரீட்சை வினாக்கள் இப்படி மிகவும் உபயோகமுள்ள விஷயங்கள் நிறைய இருக்கின்றன.

ஆசிரியை: வை. சரோஜினி; வெளியீடு: தமிழ்ப்புத்தகாலயம், சென்னை. விலை: ரூ. 1-25.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon